
Vol. 57 Issue No. 23

# துக்ளக்

நிறுவிய ஆசிரியர்: சோ
THUGLAK Tamil Weekly 17-6-2026 ₹ 25






## பேடி கை வாளொக்கும்...

– பழ.கருப்பையா

25 – ஆம் பக்கம்



SriKanchi Mahaswami TRUST

vidyamandir

EDUCATE • ENLIGHTEN • EMPOWER

# SRI KANCHI MAHASWAMI VIDYA MANDIR

(CBSE AFFILIATED UPTO CLASS – XII)

DR.L.M.SINGHVI VEDA VIDYA PITHAM (Units of SRI KANCHI MAHASWAMI TRUST)

NO. 1, SHANKAR NAGAR, RAJAKILPAKKAM, TAMBARAM EAST, CHENNAI-73. Mobile No: 8870143888, 8870666996

Our website : www.srikanchimahaswamividyamandir.org/ www.srikanchimahaswamividyamandir.edu.in

## CBSE + VEDAM (UNIQUE SCHOOL) SINCE 2011
## FULLY RESIDENTIAL ONLY FOR VEDIC STUDENTS

Sri Kanchi Mahaswami Vidya Mandir is the largest vedic modern educational institution inspired by the philosophy of His Holiness Pujyasri Chandrasekarendra Saraswathi Mahaswamigal of the venerated Sri Kanchi Kamakoti Peetam. It has **150 students** as of date pursuing both CBSE and Vedic education. We are pleased to inform that since the first year viz 2016, we had sent students to the CBSE class X and class XII board examination the Vidya Mandir has registered 100% results. The success of the dual education system needs no further certification.

| Vedam wise strength | | |
|---|---|---|
| Vedam | No. of Vidyarthis | No. of Adhyapakars |
| Rig | 21 | 2 |
| Yajur | 129 | 7 |

| Class wise strength – Dual education alone | | | |
|---|---|---|---|
| Class | No. of students | Class | No. of students |
| III | 5 | VIII | 12 |
| IV | 11 | IX | 18 |
| V | 13 | X | 15 |
| VI | 23 | XI | 14 |
| VII | 16 | XII | 13 |

### ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமி ட்ரஸ்ட் - சிறப்பு அம்சங்கள்

* "காஞ்சி கோஷ்" - ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 2500 வருட வரலாறு மற்றும் காஞ்சிபுரத்தின் சிறப்புகள் அமையப்பெற்ற நிரந்தர அருங்காட்சியகம் (Museum) உள்ளது.
* "அனுக்ரஹ வர்ஷா" - மஹா ஸ்வாமிகளின் வாழ்க்கை மற்றும் உபதேசங்கள் கொண்ட கண்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.
* PVC - நம் நாட்டின் மிக உயரிய இராணுவ விருதான பரம் வீர் சக்ரா விருது பெற்ற இராணுவத்தினர்களின் சிலைகள் கொண்ட பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.
* ஐக்கியம் - மத வேற்றுமையில் நம் ஒற்றுமையை உணர்த்தும் கண்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.
* "ஜெயேந்திரம்" - ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் வாழ்க்கை வரலாற்று நிரந்தர கண்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.
* "அரசியலமைப்பு பூங்கா" - இந்திய அரசியலமைப்பின் முக்கியத்துவத்தையும் 75 வருட நிறைவை போற்றும் வகையில் அதன் முக்கியமான கோட்பாடுகள் மற்றும் திருத்தங்கள் உள்ளடங்கிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.
* திவ்ய தேசம் - இந்தியாவின் பிரசித்தி பெற்ற ஆலயங்களின் படங்கள் இடம்பெற்றுள்ள கண்காட்சியகம் உள்ளது
* வேத பாடசாலையுடன் கூடிய CBSE School, 160 வித்யார்த்திகள், 9 அத்யாபகர்களுடன், குருகுல முறைப்படி, ரிக், யஜுர் வேதம் பயின்று வருகிறார்கள்.
* நமது வளாகத்தில் அமைந்துள்ள பள்ளியில், CBSE கல்வி முறையில் மட்டும், 1200 மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள்
* மஹா பெரியவாளுக்காக ஒரு பிரத்யேக மண்டபம் அமைக்கப் பெற்று அதில் ஒரு போட்டோ கேலரி மற்றும் பெரியவா உபயோகப்படுத்திய பொருட்கள் பார்வைக்கு உள்ளது.
* ஸ்ரீமதி M.S.சுப்புலக்ஷ்மி அவர்களுக்கு பிரத்யேக சிலையும் போட்டோ கேலரியும் அமைக்கப்பட்டுள்ளது.
* இலட்ச உத்திராட்சத்துடன் கூடிய சிவலிங்கம் உள்ளது.

### VEDIC ADMISSION 2026-2027

Registration is now open for CBSE + VEDAM for the next academic year 2026-2027 for classes III, IV, V, VI & VII (Rig, Yajur) Please contact 9600083203 for registration of Vedic admission.

For more details contact: 9600083203 / 9600123327 / 9894555244 or mail us @ skmsvm.trustoffice@gmail.com / skmsvm.vedicstudentdivision@gmail.com

### பார்வை நேரம் (TEMPLE)

காலை 8.00 மணி முதல் 10.45 மணி வரை

மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை

### அருங்காட்சியகம் (MUSEUM) பார்வை நேரம் :

பிரதி சனி, ஞாயிறு கிழமைகள் :

மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை

### குறிப்பு :

மஹா பெரியவா பக்தர்களும், வேத அபிமானிகளும் அவசியம் தரிசிக்க வேண்டிய ஒரு அறிய இடம்

We are able to provide high quality wholesome food to veda vidyarthis. 600 donors with annual contribution of Rs.18000/- can fully take care of the annual Bhojanashala expenses of Rs.1 crore per year. We appeal to the devotees of the Mahaswami of Kanchi and those committed to societal good to participate in the Annadhanam by contributing Rs.18,000/- per annum. One can give in multiples of Rs.1500/- to cover one month's expenditure of a Vidyarthi. All contributions are eligible for exemption u/s 80G of the Income Tax Act, 1961. Details for bank transfer is mentioned below:

**DONATIONS ARE ACCEPTED FOR ANNADHANAM!**

**Cheque/DD shall be drawn favouring "SRI KANCHI MAHASWAMI TRUST"**

| | | |
|---|---|---|
| Account Name | : | Sri Kanchi Mahaswami Trust |
| Type of Account | : | Savings Bank Account |
| Bank Name & Address | : | Indian Bank, King Circle Branch, Mumbai-400 022 |
| Account No. | : | 6091702986 IFSC code : IDIB000K038 |

Visit our website – www.srikanchimahaswamividyamandir.org for online donations. After transfer of funds, please send an e-mail to skmsvm.trustoffice@gmail.com providing address and contact number of the donor and the purpose of contribution.

**Voice of god (7 volumes) spiritual books are available with us for sale in English, Hindi, Telugu, Kannada and Marathi languages.**

For more details contact: E-mail ID: skmsvm.trustoffice@gmail.com / Whatsapp @ 9840772300

Mobile No: 9600123327 / 9894555244

துக்ளக்
ஆசிரியர்: எஸ்.குருமூர்த்தி
Website : www.thuglak.com
Email : thuglak45@gmail.com
Vol. 57 No.23 17.6.2026
தபால் பெட்டி எண் : 2173
காரியாலயம் : 166, (பழைய எண் 46), கிரீன்வேஸ் சாலை, சென்னை - 600028.
Advt. Phone : 044-2493 6914

## எச்சரிக்கை

தமிழகத்தில் த.வெ.க.வைச் சார்ந்த இரண்டு அமைச்சர்கள் எப்படிப்பட்ட அடாவடி பேர்வழிகள் என்பதைப் பற்றி 'டியர் மிஸ்டர் ஜோஸப் விஜய் [Part 1&2]' கடிதத்தில் விளக்கி யிருந்தோம். அதை நாம் எழுதிய பிறகு த.வெ.க. அரசில் முஸ்லிம் லீக் சார்பாக நியமிக்கப் பட்டிருக்கும் ஷாஜஹான், அவர்களுக்கு மேல் பலே ஆசாமி என்று தெரிகிறது. இலங்கையில் 2019-ல் சர்ச்சில் 250 பேர் மடிந்த பயங்கரவாதத் தாக்குதலில் குற்றம்சாட்டப்பட்ட பயங்கரவாதி, அவருக்கு உதவிய பாகிஸ்தான், இலங்கை தூதுவர், அது போன்ற மற்ற 'நல்லோர்'களுடன் நெருங்கிய நட்பு, தொடர்புள்ளவர் அமைச்சர் ஷாஜஹான் என்று ஃபோட்டோவுடன் செய்திகள். இது பற்றிப் பின்பு விபரமாக எழுதுவோம்.

# பிளவல்ல, பிரிவுதான்!

தமிழக முன்னாள் பா.ஜ.க. தலைவரும், தமிழகத்தில் பா.ஜ.க. வளரும் என்று நம்பிக்கையூட்டி அதற்கு வழியும் காட்டியவருமான கே.அண்ணாமலை கட்சியிலிருந்து விலகி, ''இது நம்ம இயக்கம்'' என்ற அமைப்பைத் தொடங்கி இருக்கிறார். இது பிறகு அரசியல் கட்சியாக மாறவிருப்பதாகவும் செய்தி. அவரது நகர்வின் பின்னணி, அதனால் பா.ஜ.க.வுக்கும், அண்ணாமலைக்கும், தமிழக அரசியலிலும் ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றி ஒரு தலையங்கத்தில் விளக்குவது இயலாது. தவிர, அவர் தனது நோக்கத்தை மட்டும் அறிவித்து அதற்கான முதல் சிந்தனை, வழிமுறைகளைத்தான் கோடிட்டுக் காட்டியிருக் கிறாரே தவிர, தான் அமைக்கப்போகும் கட்சி, அதன் கொள்கைத் திட்டத்தின் முழுவடிவை அவர் இன்னும் வெளிப்படுத்தவில்லை. இதுவரை வந்த அவரது அறிவிப்புகளின் அடிப்படையில் நமது எடுத்த எடுப்பி லான கருத்துக்களை வாசகர்கள் முன் வைக்கிறோம். அண்ணாமலை நகர்வின் ஆரம்பத்திலேயே நாம் காணும் ஒரு முக்கிய அம்சத்தை முதலில் கூற விரும்புகிறோம். சினிமா கவர்ச்சியை வைத்து தமிழகத்தைக் கைப் பற்றிய திராவிட கட்சிகள், இறுதியில் 2026-ல் தமிழகத்தை சினிமாத்துறைக்கே தத்தம் செய்துவிட்ட அவல நிலையில், 60 ஆண்டு கால தமிழக சரித்திரத்தில், காமராஜ் காலத்துக்குப் பிறகு, தமிழகத்தை நாசம் செய்த கவர்ச்சி சினிமா வாசனை இல்லாமல், மக்கள் கவனத்தை ஈர்த்தவர் அண்ணாமலை மட்டுமே என்பதை மையமாக வைத்து, நமது கருத்துக்களைப் பதிவு செய்கிறோம்.

### கொந்தளிப்பு!

நடந்த தேர்தலில், 6 தசாப்தங்களாக தமிழகத்தைத் தங்கள் வசம் வைத்திருந்த திராவிடக் கட்சிகள் இரண்டை யும் புறம்தள்ளி, பொதுவாழ்க்கைக்கே புதியவரான சினிமா நடிகர் ஜோஸப் விஜய் அமைத்த, அரசியல் புதிரான த.வெ.க. எதிர்பாராமல் அதிரடியாக ஆட்சியில் அமர, திராவிட மாயையில் சிக்கி இறுகிப் போயிருந்த தமிழக அரசியல், உருகிக் கொந்தளிக்கத் தொடங்கியது. த.வெ.க. தனது முதல் எதிரி என்று சொல்லி குறி வைத்த தி.மு.க.வின் ''கொள்கைக் கூட்டணி'' கட்சிகள், தி.மு.க.வுக்கு டாட்டா காட்டி விட்டு த.வெ.க. பக்கம் தாவியது, பரமவைரிகளான தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் த.வெ.க.வைத் தடுக்க கூட்டணி சேர முயன்றது, பிறகு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் த.வெ.க.வுக்கு விலை போனது - எல்லாம் இணைந்து எந்தக் கட்சி, எந்தத் தலைவர், எங்கு, யார் யாருடன், என்பதே புரியாத அளவுக்கு தமிழக அரசியல் குழம்பியிருக்கிறது.

தி.மு.க. ஆட்சி அமைய எங்கள் உயிரைக் கொடுப் போம் என்று சூளுரைத்த காங்கிரஸும், வி.சி.க.வும் தி.மு.க.வுடன், சென்னை குடிசைப்பகுதி பாஷையில் குழாயடிச் சண்டை போடுகின்றன. டாஸ்மாக் சரக்குடன் கஞ்சாவையும் சேர்த்து தின்றவனைப் போல தமிழக அரசியல் கட்சிகள் தள்ளாடும் பின்னணியில், பா.ஜ.க. விலிருந்து விலகி அண்ணாமலை புதிய கட்சி தொடங்க இருப்பதால், என்ன திருப்பம் ஏற்படும் என்பதை அலசுவதற்கு முன், பா.ஜ.க.விலிருந்து அவர் பண்புடன் விலகியதைக் குறிப்பிடுவது அவசியம்.

### உயர் அரசியல் பண்பு!

எம்.ஜி.ஆர்., வைகோ முதலான தலைவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு, அவர்கள் தாங்கள் இருந்த கட்சியின் பரம வைரிகளானதைத்தான் பார்த்திருக்கிறது தமிழக அரசியல். அதனால் உருவான அரசியல் துவேஷம் கடைசி தொண்டன் வரை பிரித்ததை நாம் பார்த்திருக்கிறோம். அகில இந்திய அளவில் இந்திரா, ஷரத்பவார், சந்திரசேகர், வி.பி.சிங், மமதா, குலாம் நபி ஆஸாத், ஜோதிராதித்ய சிந்தியா போன்ற தலைவர்கள் கூட, தங்கள் கட்சிகளிலிருந்து நீக்கப்பட அல்லது விலக பரஸ்பர விரோதமும், துவேஷமும் ஏற்பட்டது. பா.ஜ.க.வில் கூட கல்யாண்சிங், உமாபாரதி, எடியூரப்பா போன்றவர்கள் கூட விரோத பாவத்துடன்தான் பா.ஜ.க. விலிருந்து விலகினார்கள். அதற்கெல்லாம் நேர்மாறாக, தமிழக பா.ஜ.க.வின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்த அண்ணாமலை, அதிலிருந்து சுமுகமாக விலகியது,

உயர் பண்புகளுக்கு ஏங்கும் நம் அரசியல் சரித்திரத்தில் ஒரே உதாரணம் என்பது மறுக்க முடியாத உண்மை. கூட்டுச் சொத்துள்ள குடும்பத்தில், சொத்துக்குச் சண்டை யிடாமல், எந்த மனஸ்தாபமும் இல்லாமல் விடை பெற்று, அதன் முக்கியஸ்தர் வெளியேறியது போல் பரஸ்பர கௌரவத்துடன் விலகியிருக்கிறார் அண்ணாமலை.

கட்சியிலிருந்து விலகப் போகிறேன் என்று ஆறு மாதங்களுக்கு முன்பே கூறிய அண்ணாமலை, தேர்தல் வரையில் வேண்டாம் என்று தலைமை கூறியதை ஏற்று, தேர்தலில் கடுமையாகப் பிரசாரமும் செய்தது போற்றத் தக்கது. பா.ஜ.க.விலிருந்து விலகும் முன், டெல்லி சென்று அகில இந்திய பா.ஜ.க. தலைவர் நிதின் நபின், அமைப்புச் செயலாளர் பி.எல். சந்தோஷ், உள்துறை அமைச்சர் அமித்ஷா போன்றோரைச் சந்தித்து சுமுக மாகப் பேசி, தான் ஏன் விலகுகிறேன் என்பதை விளக்கி விட்டு, இருதரப்பிலும் நல்லுணர்வுடன் விலகியது உயர்ந்த பண்பான அரசியல் பாணி. தனது ஜூன்-5 அறிவிப்பில், **''பா.ஜ.க.வில் இணைந்து கடந்த ஆறு ஆண்டு காலமாக தமிழக மக்களுக்காக பணியாற்றியதைப் பாக்கியமாகக் கருதுகிறேன். மரியாதையுடனும், பண்போடும் கட்சியிலிருந்து விலகுகிறேன்''** என்று அவர் கூறியது தமிழக அரசியல் வரலாற்றில் பதிய வேண்டிய வரிகள். விரோத பாவத்தால் வெகுவாக தாழ்ச்சியுற்றிருக்கும் இன்றைய அரசியலில், ஒருவர் பிரிவிலும் கூட பண்புடன் நடக்க முடியும் என்பதற்கு இது பெரும் எடுத்துக்காட்டு.

## சினிமாவால் அழிந்த தமிழக அரசியல்!

காங்கிரஸ் ஆட்சிக்குப் பிறகு சினிமா கதை, வசனம், பாட்டு, நடிகர்கள் மூலம் தமிழக மக்களை மயக்கி தங்கள் வசப்படுத்தின திராவிடக் கட்சிகள். இரு திராவிடக் கட்சிகளும் தமிழகத்தில் முதிர்ந்த, பண்பான, சமூக, கலாசார அரசியல் இயக்கங்களின் மூலம், உயர்ந்த, நாணயமான ஒரு தலைவர் உருவாக முடியாமல் செய்துவிட்டன என்பதை யாராலும் மறுக்க முடியாது. சினிமாவை வைத்து தமிழகத்தை திராவிடம் கைப் பற்றியது என்பது பற்றி அமெரிக்க ஹார்வர்டு பல்கலைக்கழகம் ஒரு ஆய்வை வெளியிட்டது. இதை துக்ளக் விவரமாக எழுதியிருக்கிறது. 1967-க்குப் பிறகு சினிமாத்துறைதான் அரசியல் தலைவர்களை உருவாக்கும் பல்கலைக்கழகமாக மாறியது. எனவே, எம்.ஜி.ஆர்., சிவாஜிக்குப் பிறகு ஜெயலலிதா, விஜயகாந்த், கமல் ஹாசன் என்று சினிமாத்துறை பிரபலங்கள்தான் அரசியல் தலைவர்களாக உருவானார்கள்.

எல்லோரும் தங்கள் சினிமா புகழை வைத்து கட்சி தொடங்கும்போது, நாமும் செய்யலாமே என்று பரிசோதனை செய்த, ஒரு அப்பாவி சினிமா நடிகரின் கையில் இன்று மீண்டும் தமிழகம் சிக்கிக் கொண்டிருக் கிறது. இதனால் அரசியலுக்குத் தேவையான சமூக, இலக்கிய, கலாசார, பொருளாதாரத் துறைகளிலிருந்து உருவாகும் அறிவுஜீவிகள், அரசியல் தலைவர்களாக முடியவில்லை. 1980-90-களில் கூட பிரபல தமிழ் பத்திரிகை ஒன்று, நாள்தோறும் அரைகுறை உடை அணிந்த சினிமா நடிகைகளின் படத்தை 'கவர்ச்சி' என்ற தலைப்பில் முதல் பக்கத்தில் போடும் பழக்கம் இருந்தது. மக்களுக்கு பொதுஅறிவு ஊட்ட வேண்டிய பத்திரிகை கூட திராவிடக் கட்சிகளின் தரத்துக்கு இறங்கக் காரணம், சினிமாவை வைத்து மக்களைக் கவர்ந்து அரசியலைக் கைப்பற்றிய திராவிடம்தான்.

சீரியஸ் ஆன அரசியலை கொச்சைப்படுத்தி சினிமா பாணியில் கோட், டி-ஷர்ட் அணியும் கொச்சைத் தலைவர்களை மக்களுக்குத் தந்திருக்கிறது, சினிமா வால் உருவாகி அரசியலையே சினிமாவாக்கி விட்ட திராவிடம். அதன் தாக்கம் அரசியல் துறையுடன் நிற்க வில்லை. கதை, கவிதை, கலாசாரம் போன்ற, மக்களின் மனதைத் தொடும், ஊடுருவும், மாற்றும் துறைகள் அனைத்தும் திரையுலகப் பிரபலங்களின் கைகளுக்கு மாறின. விளைவு என்ன என்பதைக் காண, பாரதியார் இருந்த இடத்தில் இன்று யார், கல்கி கிருஷ்ணமூர்த்தி இருந்த இடத்தில் இன்று யார் என்பதைப் பார்த்தாலே தெரிந்துவிடும். எனவே, தமிழகத்தின் பிரச்னை - திராவிடம் சினிமாவை வைத்து அரசியலை கொச்சைப் படுத்தியது மட்டுமல்ல. அதனால் பாதிக்கப்பட்ட துறைகள் - அனைத்திலும் அதே சீரழிவைத்தான் காண்கிறோம். எனவே, கொச்சையான சினிமா கலாசாரச் சீரழிவிலிருந்து அனைத்து துறைகளுக்கும் - ஸ்டாலின் பாஷையில் - 'விடியல்' தேவை.

## கொச்சை, ஊழல், அடாவடி அரசியலுக்கு மாற்று

அண்ணாமலையின் நகர்வு, 60 ஆண்டுகளாக தமிழகம் சிக்கியுள்ள கொச்சை சினிமா, லஞ்ச-லாவண்ய அரசியலுக்கு மாற்றாக அமைந்தால், அது தமிழகத்திற்கு அவர் ஆற்றும் தலையாய தொண்டு என்பது நமது கருத்து. சினிமாவில் குத்துச் சண்டை போட்டவர்கள்தான் முதல்வர்கள் ஆகலாம்; ''உன்ன சாவடிக்கரண்டி, சாவடிக்காம உட மாட்டேண்டி'' என்று வீடு புகுந்து அடித்து, ''என்ன மீறினால் அவன முடிச்சுருவேன்'' என்று மிரட்டும் ரௌடிகளும் அமைச்சர்கள் ஆகலாம்; படுகொலை செய்தவர்கள், பயங்கரவாதிகளுடன் தொடர்புள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் ஆகலாம் என்ற அவல நிலையை தமிழகம் ஏற்றுக்கொண்டு விட்ட பின்னணியில், அண்ணாமலையின் நகர்வை நாம் பார்க்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் அவரது முதல் அறிவிப்புகளில் மிக முக்கியமானதாக நாம் கருதுவது, **''கோயம்புத்தூரில் 'ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அரசியல் மற்றும் அறநெறிக்கான மையம்' என்ற அமைப்பைத் தொடங்கவிருக்கிறேன். இதன் மூலம், உள்ளாட்சி மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு முறையான பயிற்சி அளித்து, சமூகத்தின் தேவை களை உணர்ந்த தூய்மையான தலைவர்களாக உருவாக்குவதே நோக்கம்''** என்ற திட்டம்தான்.

அவர் டாக்டர் அப்துல் கலாம் பெயரைத் தேர்ந் தெடுத்திருப்பது அவர் நோக்கத்தை மட்டுமல்லாமல், அந்தப் பெயருடன் பிணைந்திருக்கும் ஆன்மிகம்,

விஞ்ஞானம், தேசியத்தையும் குறிக்கிறது. தேசத்தைத் துண்டாடிய ஜின்னாவுக்கு மாற்று பிம்பமாக, இஸ்லாமியர்களுக்கு ஆக்க பூர்வமான ஒரு முகம் தேவை என்பதால்தான் வாஜ்பாய் அரசு, தமிழகத்தில் சாமான்யராகப் பிறந்து, நாடு போற்றும் அசாதாரண விஞ்ஞானி ஆன மனிதரான டாக்டர் கலாமை ஜனாதிபதியாக்கியது. அண்ணாமலை அவரை மையப்படுத்தியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், டாக்டர் கலாம் எப்படி ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதை நேரில் அறிந்த துக்ளக் ஆசிரியர் அது பற்றி விரிவாக எழுதுவார்.

ஆனால் பாரத நாடே பெருமையுடன் ஏற்ற டாக்டர் கலாமை தமிழக அரசியலில் எந்த திராவிடக் கட்சியும் முன்னிலைப்படுத்தவில்லை. ஏன்? டாக்டர் கலாமைத் தொட்டாலே தேசியம், ஆன்மிகம், ஹிந்து விரோதம் இல்லாத இஸ்லாமியர்கள் என்ற ஆபத்துக்களை திராவிட அரசியல் சந்திக்க வேண்டியிருக்குமே அதனால்தான். டாக்டர் கலாமை அண்ணாமலை முன்னிலைப்படுத்தியதை மாஸ்டர் ஸ்ட்ரோக் என்று கூறுகிறது 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' பத்திரிகை. கொச்சை திராவிட, ஜோஸப் விஜய் அரசியலுக்கு அண்ணாமலை மாற்று கோஷமிடவில்லை, திட்டமிடுகிறார் என்பது வெளிப்படை. நேர்மை, நாணயம் இல்லாத, கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு டிக்கெட் தந்து, அமைச்சராக்கி விட்டு, நாணயமாக ஆட்சி செய்ய அவகாசம் கொடுங்கள் என்று ஜோஸப் விஜய் கேட்பதை, அண்ணாமலையின் தயாரிப்புடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஜாலியாக அரசியலில் நுழைந்த அவருக்கும், சீரியஸ் அரசியல் செய்யும் அண்ணாமலைக்கும் உள்ள வித்தியாசம் விளங்கும்.

### பிளவல்ல, பிரிவுதான்!

நல்லுணர்வுகளுடன் பா.ஜ.க.விலிருந்து பிரிந்த பிறகும் அண்ணாமலை, 'பிரதமர் மோடி மீதும், அமித்ஷா மீதும் மரியாதை வைத்திருக்கிறேன்' என்று வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். அவர்களை மரியாதையுடன் நோக்கும் அண்ணாமலையைப் போலவே, கட்சியிலிருந்து விலகிய அவரை மரியாதையுடன்தான் பார்க்கிறது பா.ஜ.க.. தேசிய அளவில் பா.ஜ.க.வில் அண்ணாமலைக்கு ஏராளமான நண்பர்கள், விசிறிகள். அண்ணாமலையும் பா.ஜ.க.வும் பிரிந்தாலும், அவர்களைப் பிணைக்கும் ஆன்மிக தேசிய சிந்தனைகள் பிரியவில்லை. நமது கண்ணெதிரேயே கட்சி, அதிலிருந்து வெளியேறியவர்களுக்கிடையே உருவான 'முற்றுப்புள்ளி'யே அரசியலில் காலப் போக்கில் 'கமா'வாக மாறுகிறது. மாறியிருப்பதை நாமே பார்த்திருக்கிறோம். பா.ஜ.க., அண்ணாமலையிடையே இன்று இருப்பதே 'கமா'தான், 'முற்றுப்புள்ளி' அல்ல. பா.ஜ.க., அண்ணாமலை பிரிவு இன்று காலத்தின் கட்டாயமாகத் தோன்றலாம். ஆனால், என்றாவது அவர்கள் இணைந்து செயல்பட வேண்டிய காலம் கட்டாயம் வரலாம்.

### மூன்றுக்கும் மாற்று

அரசியல் பண்பு, அனுபவம், முதிர்ச்சி இல்லாதவர்கள்தான் த.வெ.க.வை தி.மு.க., அ.தி.மு.க.வுக்கு மாற்று என்று கூறுவார்கள். தனது சினிமா கவர்ச்சியால் ஜோஸப் விஜய் உருவாக்கிய திடீர் த.வெ.க., சீரியஸ் அரசியல் கட்சியாக நெடுங்காலம் பிடிக்கும். அதற்குள் அதன் ஆட்சிக் காலமே முடிந்தாலும் ஆச்சரியம் இல்லை. இன்று அதற்குள் செல்வாக்குப் பெற்று வருபவர்களைப் பார்த்தால், த.வெ.க.வால் தமிழகத்தில் மாற்றம் வரும் என்று தோன்றவில்லை. மாறாக அனுபவமும், திறமையும் இல்லாத அதன் கீழ், தமிழகம் மேலும் சரியுமோ என்ற கவலைதான் நமக்கு. சினிமா நடிகர் உருவாக்கிய கட்சி சினிமாவால் குட்டிச்சுவரான தமிழக அரசியலில் மாற்றம் கொண்டு வர முடியாது. மாற்றம் கொண்டு வருவேன் என்று சூளுரைத்து வெற்றி பெற்ற ஜோஸப் விஜய், வெற்றி பெற்ற பிறகு மாற்றம் கொண்டுவர அவகாசம் கேட்கிறார். தி.மு.க., அ.தி.மு.க. இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்றால், த.வெ.க. அவர்களின் சிந்தனையில் உருவான மட்டை. மூன்றுக்கும் மாற்று தேவை. மூன்றுக்கும் மாற்று தரும் கட்சி, அந்த மூன்றில் எந்த ஒன்றுடனும் சேர முடியாது, சேரக்கூடாது. அதுபோன்ற நிலையை எடுத்திருப்பது அண்ணாமலை மட்டுமே என்பதே, நமக்கு அவர் மீது நம்பிக்கை தருகிறது.

சினிமா, கேளிக்கை ஆகியவற்றால் கொச்சையாகி, லஞ்ச - ஊழல் - லாவண்யங்களில் சிக்கி, ஆன்மிக, தேசிய நீரோட்டத்திலிருந்து விலகியுள்ள தமிழகத்தில், 60 ஆண்டுகளுக்குப் பிறகு தலையெடுத்திருக்கும் ஒரே சீரியஸான தேசிய ஆன்மிக அரசியல்வாதி அண்ணாமலைதான். தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க. மூன்றுக்கும் மாற்றாக அவர் உருவானால் அது தமிழகத்துக்கு மட்டுமல்ல, பாரத நாட்டுக்கும் நல்லது. இறுதியாக, நம் கருத்தில் அண்ணாமலை பா.ஜ.க.விலிருந்து விலகியது கொள்கைப் பிளவு அல்ல. அமைப்பிலிருந்து பிரிவு மட்டுமே. ●

# உருகும் இரும்புப் பெண்!

**கா**ங்கிரஸை நசுக்கி, பிறகு கம்யூனிஸ்ட்களை வீழ்த்திய திரிணாமூல் கட்சித் தலைவரான மமதா பானர்ஜியின் மூன்று தசாப்த அரசியல் அடாவடி, தெரு அரசியல் என்பது நாடறிந்த விஷயம். அடாவடியில் தொடங்கி, அடாவடியாகவே நடந்த அவரது அரசியல், தேர்தலில் அவர் படுதோல்வி அடைந்த பிறகும், பணிவின்றி அடாவடி செய்யும் அவரது அரசியல் சரித்திரம், அடாவடியினாலேயே முடிந்து விடும் போலத் தோன்றுகிறது.

### கர்ம வினை

தேர்தலில் படுதோல்வி அடைந்த மமதா பானர்ஜி, தமிழகத்தில் ஸ்டாலின் தோல்வியைக் கண்ணியமாக

ஏற்றுக்கொண்டது போல அல்லாமல், ராஹுல் போல 'அது தோல்வியே அல்ல, தேர்தல் ஆணையத்தின் மோசடி' என்று அடாவடியாகப் பேசினார். வங்கத்தில் 29% இஸ்லாமியர் வாக்குகளைப் பெற, வங்கதேச ஊடுருவலை ஊக்குவித்து தீவிரவாதிகள், தேச விரோதிகளுக்கு இடம் தந்தார். அவர்களைக் கண்டு போலீஸ், ஊடகங்கள் அஞ்சின. அவரது மருமகன், மற்றும் கட்சியினரின் ஹிமாலய ஊழல் தவிர, ரௌடிக் கும்பல்கள் ஏழை-எளியவர்களிடமிருந்து வெளிப்படையாக மாமூல் வசூலித்தனர். அதை எதிர்த்த தன் கட்சியினர் உள்பட அனைவரையும் குண்டர்கள் மற்றும் போலீஸாரை வைத்துத் தாக்கி அடக்கி வந்தார் மமதா. அவர் வீழ்ச்சிக்குப் பிறகு சாதாரண மக்கள் கொதித்தெழுந்து, அடாவடி யாளர்களைத் துரத்தி அடிப்பதும், அவர்கள் பதுக்கி வைத்த பணம் மூட்டை மூட்டையாகக் கண்டு பிடிக்கப்பட்டதும் டி.வி.யில் ஒளிபரப்பாகின்றன. வெளிவரும் பயங்கரமான செய்திகள் மேற்கு வங்கத்தை மட்டுமல்ல, நாட்டையே உலுக்குகிறது. பா.ஜ.க. ஆட்சியில் மேற்கு வங்கத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களைப் பற்றி விவரமாக எழுதுவோம். எப்படி 15 ஆண்டுகள் காட்டாட்சி செய்த மமதாவின் கர்மவினை அவரைச் சூழ்ந்து வருகிறது என்பதைப் பார்ப்போம்.

## குடும்ப வாரிசை மறுத்த கட்சி

தோல்வியுற்ற இரண்டு நாட்களுக்குப் பிறகு, மே ஆறாம் தேதி தேர்வான எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில், மமதா, தனது மருமகன் அபிஷேக் பானர்ஜியின் தேர்தல் பிரசாரப் பங்களிப்பைப் பாராட்டி, அவர்களை எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொண்டபோது கட்சியில் முணுமுணுப்புத் தொடங்கியது. மருமகன்தான் மக்களாலும், கட்சி யினராலும் மிகவும் வெறுக்கப்பட்டவர். மமதா உருவாக்கிய திரிணாமூல் கட்சி, மமதா நியமித்த குடும்ப வாரிசை ஏற்கவில்லை. மே-19-ல் அதிருப்தியின் முதல் அறிகுறிகள் பகிரங்கமாக - மருமகனை எதிர்த்து குரல்கள் - எழுந்தன. மே-22-ல், மமதா கட்சியில் பிரபலமான எம்.எல்.ஏ.வான ரிதபிரதா பானர்ஜி டெல்லியில், வங்கபவனில் முதலமைச்சர் சுவேந்து அதிகாரியை எதேச்சையாகச் சந்தித்தார். அது செய்தியாகியது. பிறகு, மே-22-ல், எதிர்க்கட்சி எம்.எல்.ஏ., எம்.பி.க்களை நிர்வாக ஆய்வுக் கூட்டங்களுக்கு அழைக்க முதலமைச்சர் செய்த முடிவை ரிதபிரதா வரவேற்றார்.

அடுத்து மே-25-ல் சட்டமன்றக் கட்சியின் தலைமை பற்றி சபாநாயகரிடம் கட்சி சமர்ப்பித்த ஆவணங்களில் எம்.எல்.ஏ.க்களின் கையொப்பம் ஃபோர்ஜரி செய்யப்பட்டதாகக் குற்றம் சாட்டி சபாநாயகரிடம் ரிதபிரதா புகார் அளித்தார். மே-30-ல் அபிஷேக் பானர்ஜி மீது அவரது கட்சி யினரே தாக்குதல் நடத்த கட்சிக்குள் பிளவு வெடித்தது. மே-31வாக்கில், மமதா அதிகாரத்தின் சரிவு வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியது. ஃபோர்ஜரி பற்றி ரிதபிரதா அளித்த குற்றச்சாட்டை சபாநாயகர், போலீஸ் விசாரணைக்கு உத்தரவிட்டார். அதனால் கோபமுற்ற மமதா வழக்கம் போல் அடாவடியாக ரிதபிரதா மற்றும் அவரது சகாவை கட்சியை விட்டு நீக்கினார். தோல்வியிலும் அவரது அடாவடி தொடர, அது எம்.எல்.ஏ.க்கள் ஒன்று திரளக் காரணமாகி, வியூகக் கூட்டங்கள், திரைமறைவு அணிதிரள்களைத் தூண்டியது. விளைவு, ஜூன் 1-ல், மமதா எம்.எல்.ஏ.க்களை வீட்டுக்கு அழைக்க, அதில் 80-ல் 20 எம்.எல்.ஏ.க்கள் கூட வரவில்லை. அதனால் கூட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டது என்று பாசாங்கு செய்தார் மமதா.

## உண்மையான திரிணாமூல்

ஜூன் 3-ல், மமதாவுக்கு எதிராக வெளிப் படையாகப் போர் தொடங்கியது. அவரது 80 எம்.எல்.ஏ.க்களில் 58 பேர் கூடி மமதா கட்சியை விட்டு நீக்கிய ரிதபிரதா பானர்ஜியை தலைவராகத் தேர்ந்தெடுக்க, அவரை சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்தார். 'திரிணாமூல் கட்சி சின்னத்தில் வெற்றி பெற்ற 58 எம்.எல்.ஏ.க்கள்தான் உண்மை திரிணாமூல்' என்று கூறிய கிளர்ச்சி யாளர்கள், 'நாங்கள் மமதா பானர்ஜியை தலைவராக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அபிஷேக் பானர்ஜியை ஏற்றுக்கொள்ள மாட்டோம்' என்கின்றனர். எதிர்ப்பை மென்மையாக்க ரிதபிரதா, 'சட்டமன்றக் கட்சியின் தலைமை ஆலோசகராக மமதா பானர்ஜி பொறுப்பேற்க வேண்டும்' என்று கூற, மருமகனை வாரிசாக்க முயன்று தோல்வியுற்ற மமதாவுக்கு தலை சுற்றுகிறது. நிலைகுலைந்த அவர், அனைத்துக் கட்சி அமைப்புகளையும் கலைத்து விட்டதாக அறிவித்தார். இன்று அவரும் அவரது மருமகன் அபிஷேக் இருவர் மட்டும்தான் கட்சிப் பொறுப்பில் இருக்கிறார்கள். இந்த ஆபத்தான நிலையில், 20-க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கட்சியிலிருந்து விலக இருப்பதாகச் செய்தி.

முடிவாக, திரிணாமூல் கட்சியின் தலைவர், தெருப்போராளி, இரும்புப் பெண் ஆன மமதா ஏன் உருகுகிறார்? இது திடீரென்று நடக்கவில்லை. ஒற்றைத் தலைவராக இருந்தாலும், சர்வாதிகாரியாக இல்லாமல், தன்னை விட கட்சி முக்கியம் என்று நடந்தால்தான் அதிருப்தியின்றி கட்சி வளரும், நிலைக்கும், தொடரும். இல்லையென்றால் வலிமை யான மாளிகையை, வெளியே தெரியாத கரையான் அரிப்பது போல் உள்ளே புகையும் அதிருப்தி அதை அரித்து அழித்து விடும். மாற்று தோன்றும் போதுதான் மறைந்திருக்கும் அதிருப்தி வெளிப் படும். திரிணாமூல் கட்சிக்கு மாற்றுக் கட்சியாக பா.ஜ.க. உருவாக, ஒற்றைத் தலைமை சர்வாதிகாரி மமதாவின் திரிணாமூல், ஆட்சியை மட்டும் இழக்கவில்லை, கட்சி உருகி உருக்குலைகிறது. ஒற்றைத் தலைமை சர்வாதிகாரக் கட்சிகள், குடும்பக் கட்சிகளுக்கு திரிணாமூல் சரிவு ஒரு பாடம். ●

# அண்ணாமலையின் புதிய பாதை...!



**த**மிழக பா.ஜ.க.வின் முன்னாள் தலைவர் அண்ணாமலை, அக்கட்சியில் இருந்து விலகி இருக்கிறார்; புதிய கட்சியை ஆரம்பிக்கப் போகிறார் என்கிற அவரது அறிவிப்பு, தமிழக அரசியலில் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. பா.ஜ.க.வின் தேசியத் தலைவருக்கு அவர் எழுதிய கடிதம் முழுமையாகப் பத்திரிகைகளில் வெளியாகி உள்ளது. விலகலுக்கான காரணத்தை அவர் கடிதத்தில் விவரித்துள்ளார். அவரது ராஜினாமா, கட்சித் தலைமையால் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக் கிழமையன்று நண்பகல் சமூக வலைத்தளங்கள் மூலம் உரை நிகழ்த்திய அவர், புதிய இயக்கம் துவங்குவது பற்றியும், அதன் நோக்கம் குறித்தும் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க.வில் இருந்து விலகுவதைக் குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில், ‘தேசிய கட்சிகள் தமிழக மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில் பேசுவதில்லை’ என்று கூறியிருப்பது, கவனிக்கத்தக்க காரணியாக அமைந்துள்ளது. அதாவது, ‘தமிழக மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப பா.ஜ.க. தலைமை செயல்படவில்லை’ என்பது அவர் கூறும் செய்தி. ‘இந்த நிலையை மாற்ற நான் செய்த முயற்சிகளுக்கு, கட்சிக்கு உள்ளிருந்தும், வெளியில் இருந்தும் சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தது; அதையும் மீறி ஓரளவுக்கு வெற்றி கண்டேன்’ என்று அண்ணாமலை கூறியுள்ளார்.

கடந்த 18 மாதங்களாக பா.ஜ.க.வில் கருத்து வேறுபாடுகளுடன் பயணித்ததாக அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆண்டு (2025) டிஸம்பர் மாதம் 5 - ஆம் தேதியே கட்சியில் இருந்து விலகும் முடிவை, அவர் கட்சித் தலைமைக்குத் தெரிவித்து விட்டதாகவும், 2026 - சட்டசபைத் தேர்தல் முடியும் வரை கட்சிப் பணியில் தொடரும்படி அவர் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் அண்ணாமலை கடிதம் மூலம் தெரிய வருகிறது.

‘WE THE LEADER’ என்ற பெயரிலான சமூக வலைத்தளக் கணக்கின் மூலம், அண்ணாமலையின் இயக்கத்தில் முதல் 20 மணி நேரத்துக்குள் பனிரெண்டரை லட்சம் பேர் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். பா.ஜ.க.வின் அடிமட்டத் தொண்டர்கள், மாவட்ட - மண்டலப் பொறுப்பாளர்கள் பலரும் கூட பா.ஜ.க.வில் இருந்து விலகியுள்ளனர்.

எனினும், ‘அண்ணாமலையின் முடிவு, தமிழக பா.ஜ.க.வை எந்த வகையிலும் பாதிக்காது’ என்று மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார். அதே சமயம் அண்ணாமலையின் புதிய அமைப்பில் இணைய ஏராளமானோர் ஆர்வம் காட்டி வரும் பின்னணியில், ‘அண்ணாமலைக்கு பிரதமர் மற்றும் அமித்ஷா ஆசி இருப்பதாகக் கருதி, அவரது அமைப்பில் சேராதீர்கள்’ என்று கூறும் நிலைக்கு நயினார் நாகேந்திரன் தள்ளப்பட்டார்.

**அண்ணாமலையின் புதிய கட்சி முடிவு மற்றும் பா.ஜ.க. தலைமைக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் முன்வைத்த விமர்சனம் குறித்து, தமிழக பா.ஜ.க. பொதுச்செயலாளர் இராம. சீனிவாசன் தெரிவித்த கருத்து:**

‘‘மாநில மக்கள் புரிந்து கொள்ளும் அரசியலை தேசியக் கட்சிகள் பேசவில்லை என்கிற அண்ணாமலையின் விமர்சனம், தமிழ்நாட்டுக்கு மட்டும் வேண்டுமானால் பொருந்தலாம். பல மாநிலங்களில் பிராந்தியக் கட்சிகள், தேசியக் கட்சியான பா.ஜ.க.வுடன் இணைந்து வெற்றி கண்டுள்ளன. பா.ஜ.க. தலைமை - குறிப்பாக பிரதமர் தமிழ் மொழிக்கும், தமிழ் கலாசாரத்துக்கும், தமிழகத்தின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் தந்து வருகிறார். பிரதமரின் இந்த பங்களிப்பு குறித்து அண்ணாமலையே விரிவாகப் பேசியிருக்கிறார். அதுவே அவருக்கு என் பதில்.

‘‘அண்ணாமலை வெளியேறு



இராமம். சீனிவாசன்

வதும், புதிய கட்சி காண்பதும் பா.ஜ.க.வுக்குப் பின்னடைவு ஆகாதா என்று கேட்கிறீர்கள்; பின்னடைவாக அமையும்தான். ஆனால் அந்தப் பின்னடைவு நிரந்தரமானதாக இருக்காது. பா.ஜ.க.வின் சித்தாந்தம், பிரதமர் மோடியின் செயல்பாடுகள் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டவர்கள் இந்த கட்சியோடு தொடர்ந்து பயணிப்பார்கள். அண்ணாமலையின் புதிய முயற்சியைப் பொறுத்தவரை, அவரது பாதை எந்தத் திசையில் இருக்கப் போகிறது என்பதைப் பொறுத்துதான், அதன் வெற்றி அமையும்.''


கரு.நாகராஜன்

**அண்ணாமலையின் முடிவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள பா.ஜ.க. மாநிலத் துணைத் தலைவர் கரு.நாகராஜன் நமது நிருபரிடம் தெரிவித்த கருத்து:**

''தமிழகத்தில் பா.ஜ.க. வளர்ச்சிக்கு இல.கணேசன், பொன்.ராதாகிருஷ்ணன், சி.பி.ஆர்., டாக்டர் தமிழிசை என பல தலைவர்கள் பாடுபட்டிருந்தாலும், தமிழக வாக்காளர்களை குறிப்பாக இளைஞர்களை இக்கட்சியின்பால் ஈர்ப்பதில் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றியவர் அண்ணாமலை. அவரது துடிப்பான செயல்பாடு, தி.மு.க. ஆட்சியைத் திணற வைத்தது. அவர் கூறியிருப்பது போல, தமிழகத்துக்கென்ற ஒரு தனித்துவமான அரசியல் நிலைப்பாடுகளை பா.ஜ.க. தலைமை திட்டமிடவில்லை. அது கட்சியின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது.

''தமிழக அரசியலில் கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர்., செல்வி ஜெயலலிதா, மு.க.ஸ்டாலின், இப்போது விஜய் - என தனிநபரை முன்னிறுத்திய அரசியல் போக்குதான் வெற்றி பெற்று வந்திருக்கிறது. ஒரு தலைவர் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்பட வேண்டும்; குறுக்கீடுகள் இருக்கக் கூடாது. அவர் கஷ்டப்பட்டு ஒரு பாதையில் செயல்பட்டு வந்த நேரத்தில், அதற்குப் பலனில்லாமல் வேறு முடிவு எடுக்கப்படுகிறது. ஆகவேதான் அண்ணாமலை புதிய பாதையில் பயணிக்க முடிவெடுத்துள்ளார். முதல் நாளே பல லட்சம் பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்திருப்பது, மக்களிடையே அவருக்குள்ள அமோக ஆதரவைக் காட்டுகிறது''.



**தொகுப்பு: எஸ்.ரமேஷ்**


SRIMATHA CANCER CARE
(Secular Institution dedicated to the care of indigent patients with terminal cancer and renal failure)
Admn.Office : SMCC Towers, No. 1/808, Pillaiyar Koil Street, Thoraipakkam, Chennai - 600 097.
Tel : 044-4211 0496, 91762 08165, 81488 04012
Email : srimathacancercare@gmail.com, dvijayasree.smcc@rediffmail.com | ISO 9001 : 2015



இறுதி கட்ட கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு, கைவிடப்பட்ட ஏழை நோயாளிகளுக்கு, தாய்மையின் சாயலில்.. சத்தான உணவு, தூய்மையான இடம், மருந்து, மருத்துவ சிகிச்சை, நர்சிங் கேர் மற்றும் மன நலன் ஆகிய அனைத்தையும் கட்டணமில்லாமல் வழங்குகிறது ஸ்ரீ மாதா கேன்சர் கேர்.
சிறுநீரக உறுப்பு செயலிழந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுக்க முழுக்க இலவச டயாலிஸிஸ் செய்து வருகிறது ஸ்ரீ மாதா கேன்சர் கேர்.
"ஒரு உயிர் வலியின்றி அமைதியாக உறங்க... உங்கள் உதவி அவசியம்"

SRIMATHA CANCER CARE
UPI PAYMENTS ACCEPTED HERE
SCAN QR CODE WITH YOUR PSP APP
or Pay to VPA
Srica.05@cmsidfc

- ரூ.1,00,000/- நிதி கொடுத்து நீங்கள் ஒரு நிரந்தர காப்பாளர் ஆகலாம் (அல்லது) உங்கள் பெயரை "கொடையாளர் சுவரில்" பதிவு செய்து கொள்ளலாம்.
- ரூ.60,000/- கொடுத்து வருடத்திற்கு ஒரு முறை இரண்டு நோயாளிகளை தத்தெடுத்து அவர்களது அனைத்து செலவுகளையும் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளலாம்.
- ஒருநாள் காப்பகத்தின் பராமரிப்பு செலவாக ரூ.15,000/- அளிக்கலாம்.
- ஒரு நாள் சாப்பாட்டு செலவாக ரூ.5,000/- அளிக்கலாம்.
- ஒரு நாள் ஒரு நபருக்கு இலவச டயாலிசிஸ் செய்ய ரூ.1,500/- அளிக்கலாம்.

தங்களது நன்கொடைகளை SRIMATHA CANCER CARE என்ற பெயரில் காசோலையாகவோ, வரையோலையாகவோ, உங்களது முழு முகவரியுடன், கைப்பேசி / தொலைபேசி எண்ணையும் எழுதி SRIMATHA CANCER CARE, "SMCC TOWER", 1/808, Pillaiyar Koil Street, Thoraipakkam, Chennai - 600 097 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.
தாங்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு 80(G) பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

Account Holder Name : SRI MATHA CANCER CARE
Bank Name : BANK OF BARODA, Indira Nagar Branch
Current Account No. 75310200000098
IFS Code : BARBOVJINNG (5th Digit is 'ZERO')



Founder & Managing Trustee
Dr. Hon. D.VIJAYASREE
B.Com., L.L.B. (Hons.)
The Doctor of Cancer Care Service
91762 08165

# விஜய்யை வீழ்த்துவது எப்படி?

**விஜய்யிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்ற திராவிடக் கட்சிகள் இப்படித்தான் திட்டம் தீட்டிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.**

**எடப்பாடி:** தேர்தல் முடிஞ்சு ஒரு மாசம் ஆயிடுச்சு. கண்ணைத் துடைச்சுக்கிட்டு கட்சிப் பணியாற்றப் புறப்படுங்க.



**செல்லூர் ராஜூ:** அட போங்க கண்ணே! இன்னும் எத்தனை தோல்வியை சந்திக்கணுமோ தெரியலை. கட்சிப் பணியாற்ற யாருக்கு உடம்புலே சக்தி இருக்கும்?

**எடப்பாடி:** கட்சி நிலைமையை நினைச்சு யாரும் பயப்படாதீங்க. உங்களை மாதிரி நானும் பயந்திருந்தா மூணாவது இடத்தைப் பிடிச்சிருக்க முடியுமா? எத்தனை தோல்விகளை சந்திச்சாலும் என்னைக்காவது ஒருநாள் கட்சி ஃபீனிக்ஸ் பறவை போல எழத்தான் போகுது.

**ரா.பாலாஜி:** நாம உட்கார வேண்டிய நாற்காலியிலே ஊர் பேர் தெரியாதவங்க எல்லாம் உட்கார்ந்திருக்காங்க. வயிறு எரியுது. விஜய் முதல்வராகி ஒரு மாசம் ஆகப் போகுது. ஆட்சியைக் கவிழ்க்க இதுவரைக்கும் நாம எந்த நடவடிக்கையும் எடுக்கலை.

**எடப்பாடி:** தி.மு.க. எதிர்ப்பு ஓட்டெல்லாம் நமக்கு வராம த.வெ.க.வுக்குப் போயிடுச்சு. த.வெ.க. எதிர்ப்பு ஓட்டையாவது தி.மு.க.வுக்குப் போயிடாம நம்ம பக்கம் இழுக்கணும். நாம கேக்கற கேள்விகளுக்கு பயந்து விஜய் இப்பவே ஆட்சியை விட்டு ஓடணும். அப்படி கேக்கப் போறேன்.

**உதயகுமார்:** பாட்டிலுக்கு பத்து ரூபாய்னு விஜய் மேடையிலே பாட்டு பாடினார். அதே பாட்டை நாம சட்டசபையிலே பாடலாம். தி.மு.க.வும் நம்ம கூட சேர்ந்து டூயட் பாடும். விஜய்யாலே தாங்க முடியாது.

**எடப்பாடி:** பாட்டு பாடிய விஜய் ஏன் செந்தில் பாலாஜியை இன்னும் உள்ளே தள்ளலை? அவரோட பீ டீமா விஜய்னு கேப்போம்.

**வேலுமணி:** 717 மதுக்கடைகளை மூடப் போறதாக சொல்லியிருக்காரு. ஒரு மரியாதைக்கு வரவேற்கலாம். நாளைக்கு அவர் கூட கூட்டணி வெச்சுக்க வசதியா இருக்கும்.

**எடப்பாடி:** 717 கடையை மூடினா போதுமா? மற்ற கடைகளை யார் மூடறது? பெரும்பாலான மதுக்கடைகளை திறந்து வெச்சு கொள்ளையடிக்கிறதுதான் முதல்வர் வேலையா?

**செல்லூர்:** நேற்று கூட ரெண்டு பாலியல் குற்றம், மூணு கொலை நடந்திருக்குது. இதைக் கூடத் தடுக்காம விஜய் பனையூர்லே தூங்கிட்டிருக்காரு.

**எடப்பாடி:** கஞ்சா கடத்தலைக் காட்டிக் கொடுத்தவரைக் கூட கொலை செஞ்சிருக்காங்க. கடத்தலைக் காட்டிக் கொடுத்தவருக்கே பாதுகாப்பு இல்லைன்னா, கடத்தல்காரர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கும்?



**– சத்யா**

**தங்கமணி:** ஆறு மாசம் அவகாசம் கேக்கறாரு.

**எடப்பாடி:** அப்ப ஆறு மாசம் வரைக்கும், நடக்கப்போற அக்கிரமங்களுக்கு யார் பொறுப்பு? அவகாசம் கேக்கறதுக்கா மக்கள் அவரைத் தேர்ந்தெடுத்தாங்க?

**திண்டுக்கல் சீனிவாசன்:** நம்ம திருவருட்செல்வர் மேமேலே த.வெ.க.காரங்க காவி பெயின்ட் பூசிட்டாங்கன்னு பேப்பல்லே படிச்சேன். அதை எதிர்த்து எப்ப போராட்டம் நடத்தப் போறோம்?

**உதயகுமார்:** அது வந்து திருவருட்செல்வர் இல்லைண்ணே! திருவள்ளுவருக்கு ஆளுநர் காவி உடை போட்ட விவகாரம். ஆளுநரை எதிர்த்துப் போராடினா பிரச்னை ஆயிடும்.

**எடப்பாடி:** விஜய்தான் நமக்கு எதிரி. திருவள்ளுவரையே காப்பாத்த வக்கில்லாத விஜய் பெண்களை எப்படிக் காப்பாத்தப் போறார்ன்றதுதான் என் கேள்வி.

**ரா.பாலாஜி:** மின் வெட்டாலே மக்களுக்கு ராத்திரியிலே கூட தூக்கம் இல்லை. கேட்டா ஹார்ட் டிஸ்க் திருடு போயிடுச்சாம்.

**எடப்பாடி:** ஹார்ட் டிஸ்க் திருடு போயிட்டா, மக்கள் காத்து இல்லாம மூச்சுத் திணறி சாகணுமா? ஏன் இந்த திருட்டை, திருடு போறதுக்கு முன்னாலேயே கண்டு பிடிக்கலை?

**வேலுமணி:** பயிர்க்கடன் கொஞ்சமாத்தான் தள்ளுபடி செஞ்சிருக்காரு. மொத்தக் கடனையும் தள்ளுபடி செஞ்சாத்தான் பொருளாதாரம் சீரழியும். அதுக்காக குரல்

கொடுக்கலாம்.

**எடப்பாடி:** கடன் தள்ளுபடி செஞ்சா போதுமா? கடன் வாங்காத விவசாயிகள் கதி என்ன?

**செல்லூர்:** வந்தே மாதரம் பாட்டாலே, தமிழ் மூணாவது இடத்துக்குப் போயிடுச்சு. பா.ஜ.க. வோட சேர்ந்துக்கிட்டு தமிழை ஒழிக்க த.வெ.க. திட்டம் போடுதுன்னு பிரசாரம் பண்ணலாம்.

**எடப்பாடி:** நல்ல பாயின்ட். தமிழையே காப்பாற்ற முடியாதவர், தமிழ்நாட்டை எப்படிக் காப்பாத்தப் போறார்னு கேட்போம்.

**ரா.பாலாஜி:** மீனவர்களுக்கு பாதுகாப்பு கேட்டு பிரதமருக்கு விஜய் லெட்டர் எழுதறார். பிரதமர் பதில் போடற வரைக்கும் மீனவர்கள் சாக வேண்டியதுதானான்னு கேளுங்கண்ணே!

**எடப்பாடி:** அது போதாது. சுறாவிலே நடிச்ச விஜய்க்கு, மீனவர்களை நேரா போய் காப்பாத்தத் தெரியாதான்னு கேக்கறேன்.
**வீமா ரோஸ்:** சரி, நீங்க பேசிட்டிருங்க. நான் விஜய்யை பார்த்துட்டு வந்துடறேன்.

•••

**ஸ்டாலின்:** எவ்வளவு அழுதாலும் தோல்விக்கான காரணம் புரியலை. ஒன்றிய அரசுக்கு எத்தனை சவால் விட்டேன்? அமலாக்கப் பிரிவை எப்படியெல்லாம் மிரட்டினேன்? ஒரு ஊழல் அமைச்சர் மேலேயாவது நடவடிக்கை எடுக்க விட்டேனா? இதுக்கு மேலே என்ன சாதனை செய்ய முடியும்? மிஸாவையே சந்திச்சேன். சின்ன பசங்களை சமாளிக்க முடியாமல் போச்சே!

**நேரு:** ஆனானப்பட்ட எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவையே சந்திச்சோம். இந்திரா, வாஜ்பாயைக் கூட பார்த்துட்டோம். இந்த ஜென்-ஸீ பசங்க நம்ம முட்டாள்தனத்தைப் பயன்படுத்திக்கிட்டாங்களே.

**வைகோ:** முட்டாள்தனம்னதும் ஞாபகத்துக்கு வருது. என் அரசியல் வாழ்க்கையிலே நான் செய்யாத முட்டாள்தனமே இல்லை. எல்லாவற்றையும் விட அடிமுட்டாள் தனத்தை இந்தத் தேர்தல்லே செஞ்சுட்டேன்.

**சேகர்பாபு:** போகட்டும் அழுவாதீங்கண்ணே! மற்ற கூட்டணிக் கட்சிகள் எல்லாம் தி.மு.க. முதுகிலே குத்திடுச்சு. நீங்க மட்டும்தான் கலைஞருக்கு குடுத்த வாக்குறுதியை மதிச்சு விசுவாசமா இருக்கீங்க. அதை நினைச்சு பெருமைப்படுங்க.

**வைகோ:** அந்த முட்டாள் தனத்தை நினைச்சுத்தான் அழுதேன். சொந்தச் சின்னம் வேணும்னு கேட்கக் கூட துப்பில்லாம போயிட்டேனே. ஒரு சோபாவுக்குக் கூட வழியில்லாம போயிடுச்சே.

**ஸ்டாலின்:** இப்பவும் நம்ம ஆட்சிதான் நடக்குது. அந்த அளவுக்கு எங்கே பார்த்தாலும் கொலை, கொள்ளை, போதைப் பொருள் கடத்தல், பாலியல் குற்றம். அதனால இந்த ஆட்சி ரொம்ப நாள் நீடிக்காது. நம்ம கதிதான் த.வெ.க.வுக்கும் வரும். நாம மறுபடியும் ஆட்சிக்கு வரத்தான் போறோம்.



**பிரேமலதா:** நான் ஒரு வார்த்தை சொல்லியிருந்தா, விஜய் என்னை முதல்வர் ஸீட்லே, உட்கார வெச்சிருப்பாரு. போனஸா நாலு சோபா செட்டும் கிடைச்சிருக்கும். பதவி ஆசை இல்லாததாலேதான், ஒரு ராஜ்ய சபா சீட், 10 எம்.எல்.ஏ. சீட்டுக்கு மட்டும் ஆசைப்பட்டேன்.

**உதயநிதி:** ஒரு மாசமாகியும் வாக்குறுதிகளை நிறைவேற்றலை. நாம ஒரு மாசத்திலே 98 சதவிகிதம் நிறைவேற்றிட்டு, அப்புறம்தான் கொஞ்சம் கொஞ்சமா குறைச்சோம்.

**வைகோ:** தேர்தலுக்கு முன்னாலே, த.வெ.க.வுடன் கூட்டு வெக்கணும்னு துரை கெஞ்சினார். நான்தான் மடத்தனமா மறுத்துட்டேன்.

**எ.வ.வேலு:** கவலைப்படாதீங்க. நம்ம கூட்டணிக் கட்சிகள் தயவுலேதான் த.வெ.க. ஆட்சி நடக்குது. தலைவர் சைகை காட்டினா, நாளைக்கே ஆட்சி காலி. அதுக்கப்புறம் பழையபடி நம்ம இஷ்டத்துக்கு ஆட்டம் போடலாம்.

**பிரேமலதா:** விஜய் 75 ஸீட் தரேன்னு சொன்னார். நான் ஒரு வார்த்தை சொல்லியிருந்தா 120-க்கு மேலேயே குடுத்திருப்பார்.

**ஸ்டாலின்:** இந்தியாவைக் காப்பாத்திட்டு வந்த என்னாலே கொளத்தூரையே ஏன் காப்பாத்த முடியாமப் போச்சுன்னுதான் எனக்குப் புரியலை.

**வைகோ:** காங்கிரஸுக்கு கொடுத்த மாதிரி ம.தி.மு.க.வுக்கும் 28 சீட் குடுத்திருந்தா, நாங்களும் 5 சீட் ஜெயிச்சு, ரெண்டு பேர் மந்திரி ஆயிருப்போம். நல்ல சான்ஸ் போச்சு!

**கனிமொழி:** 5 வருஷ தி.மு.க. ஆட்சியிலே டாஸ்மாக்காலே ஒரு விதவை கூட உருவாகலை. இந்த ஆட்சியிலே ஒரே மாசத்திலே லட்சக் கணக்கான விதவைகள் உருவாயிட்டாங்க. இதைப் பற்றி கேள்வி எழுப்பணும்.

**பிரேமலதா:** த.வெ.க.வோட கூட்டு வெச்சிருந்தா மேல்சபை ஸீட் தே.மு.தி.க.வுக்குத்தான் கிடைச்சிருக்கும். என் தம்பிக்குத் துணையா பையனையும் டெல்லிக்கு அனுப்பியிருப்பேன். அந்த பேராசை எனக்கு இல்லை. அதை நினைச்சாத்தான் வேதனையா இருக்குது.

**உதயநிதி:** எல்லாத்தையும் மாத்திக் காட்டறேன். கட்சியிலே இருக்கிற முதியவர்களையெல்லாம் களையெடுத்துட்டு, ஜென்-ஸீ அணி உருவாக்கறேன். அதுக்கப்புறம் பாருங்க. ●




**ஆ.ஈஸ்வரன், தேவூர் மேட்டுக்கடை**

**கே:** *60 ஆண்டுகளாக பெரும்பாலும் பார்த்த முகங்களைத் தவிர்த்து, புதிய முகங்களாக, இளைஞர்களாக தமிழக அமைச்சர்களை பார்க்கும்போது என்ன தோன்றுகிறது?*

**ப:** இந்த புதிய முகங்கள் இதுவரை பார்த்த முகங்கள் போல ஆகி விடுவார்களோ என்ற அச்சம்தான் ஏற்படுகிறது.

**க.ராஜேந்திரன், மதுரை - 1**

**கே:** *மத்தியில் நேர்மையாக ஆட்சி நடத்தியும், தமிழ்நாட்டில் பி.ஜே.பி. இன்னும் வளர்ச்சி பெறாத காரணம் என்ன? நல்ல தலைவர்கள் இல்லையா, நல்ல தொண்டர்கள் இல்லையா?*

**ப:** தமிழகத்துக்கு நேர்மையான ஆட்சி வேண்டும் என்று தமிழக மக்கள் நினைக்கவில்லை என்றும் கூறலாமே!

**எஸ்.வேல் அர்விந்த், திண்டுக்கல்**

**கே:** *மோடியால் இந்தியாவுக்கு பெருமையா? இந்தியாவால் மோடிக்குப் பெருமையா?*

**ப:** இந்தியன் என்பதால் பெருமைப்படுகிறார் மோடி. மோடி பிரதமர் என்பதால் பெருமைப்படுகிறது இந்தியா.

**ஆ.மாடக்கண்ணு, பாப்பான்குளம்**

**கே:** *துக்ளக் ஆசிரியராக தாங்கள் பெற்றது என்ன? இழந்தது என்ன?*

**ப:** பெற்றது, வசவுகள். இழந்தது, நேரம்.

**வண்ணை கணேசன், சென்னை - 99**

**கே:** *ஆந்திராவில் சொந்த வருமானத்தில் கோயில் கட்டி, அர்ச்சகராக அசத்தும் திருநங்கைகளைப் பற்றி?*

**ப:** ஹிந்து மத பாரம்பரியத்தில்தான் திருநங்கையர்களுக்கு உரிய இடம் இருக்கிறது. அவர்கள் மதிக்கப்பட்டார்கள். திருநங்கையர்கள் ஒரு சர்ச் அல்லது மசூதி கட்டி வழிபட முடியாது.

**ஆர்.ராதிகா, சென்னை - 5**

**கே:** *பவன் கல்யாண் கூறியது போல், தமிழ்நாட்டில் வெற்றி பெறுவது எளிதான விஷயமா?*

**ப:** வெற்றி பெறுவது எளிதான விஷயம் என்பதை ஜோஸப் விஜய் காட்டியிருக்கிறார். எளிதாக வெற்றி பெற்றவர்கள், ஆள்வது எளிதானதல்ல என்பதையும் அவர் புரிந்து கொள்வார்.




**கு.மா.இளங்கோ, கொல்லம்பாளையம்**

**கே:** *எதை வைத்து காங்கிரஸ் கட்சி, விஜய் கட்சியை ஆதரிக்கிறது?*

**ப:** மந்திரிசபையில் இரண்டு இடங்கள், ராஜ்ய சபை சீட் - இது தவிர காங்கிரஸுக்கு வேறு என்ன வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

**என்.ஏ.நாகசுந்தரம், குஞ்சன்விளை**

**கே:** *த.வெ.க.வின் தயவில் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் அமைச்சராகி விட்டார்கள். இனி காங்கிரஸ் புது வேகம் காணுமா?*

**ப:** காங்கிரஸ் சார்பில் இருக்கும் 2 அமைச்சர்களை மாற்றுவது எப்படி என்று, மற்ற காங்கிரஸ் தலைவர்கள் வேகம் காட்டுவார்கள்.

**ஆர்.சாந்தி பிரபா, குஞ்சன்விளை**

**கே:** *த.வெ.க. வெற்றி பெற சினிமா காரணமா, திராவிட எதிர்ப்பு காரணமா?*

**ப:** சினிமாவில் ஏமாந்த திராவிட எதிர்ப்பு காரணம்.

**கி.பாலமுருகன், கரிசல்புலி**

**கே:** *அ.தி.மு.க.வில் ஜெயித்து எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து, த.வெ.க.வில் இணைந்தவர்கள் 'தொகுதி மக்களின் நலனுக்காக' என்ற வசனத்தைப் பேசுகிறார்களே?*

**ப:** தாங்கள் எம்.எல்.ஏ.க்களாகத் தொடர்வது, தொகுதி மக்களுக்கு நல்லதல்ல என்று முன்வந்து கூறும் அவர்களைப் பாராட்டுங்களேன்.

**இமாரா ஷான்ஸே, சென்னை - 126**

**கே:** *நான் எந்தக் கட்சியிலும் இல்லை. நான் ஒரு கட்சியில் சேர வேண்டுமென்றால், எனக்கு எந்தக் கட்சியை சிபாரிசு செய்வீர்கள்?*

**ப:** எந்த கட்சியிலும் சேராதே என்று காஞ்சி மஹான் எனக்குத் தந்த அறிவுரையைத்தான், நான் உங்களுக்குத் தருவேன்.

**வி.வைத்தியநாதன், கோயம்பேடு**

**கே:** *'த.வெ.க. ஆட்சி இன்னும் இரண்டு வருடங்கள்தான்' என்று ஸ்டாலின் சொல்வது பற்றி?*




**ப:** த.வெ.க.வை ஆதரிக்க அவர் கடனுக்கு தந்த அவரது கூட்டணி கட்சிகள், 2 ஆண்டுகளில் ஆட்சியை கவிழ்ப்போம் என்று உறுதி கூறியிருப்பார்களோ?

**அ.சுகுமார், காட்பாடி - 7**

**கே:** *'டாஸ்மாக்கை மூடினால் கள்ளச்சாராயம்,*

கஞ்சா விற்பனை பெருகும்' என்கிறாரே மதுவிலக்குத் துறை அமைச்சர் க.விக்னேஷ்?

**ப:** கள்ள சாராயம், கஞ்சா இருக்கிறதோ, பிழைக்கிறது டாஸ்மாக்.

**வெ.பரமசிவன், தஞ்சாவூர் - 5**

**கே:** பிரதமர் மோடிக்கு ஸ்வீடனின் உயரிய விருது வழங்கியது. சர்வதேச அளவில் மோடி பெற்றுள்ள 31-வது விருதாமே! இது பற்றி?




**ப:** உலக அளவில் விருதுகள். தேச அளவில் வசவுகள். இதுதான் மோடியின் ஜாதகம்.

**என்.இளங்கோவன், மயிலாடுதுறை**

**கே:** கரப்பான் பூச்சி ஜனதா கட்சிக்கு திரிணாமூல் காங்கிரஸ் ஆதரவு தெரிவித்துள்ளதே?

**ப:** இல்லாத ஒரு கட்சிக்கு ஆதரவு தெரிவித்து, அரசியலில் பிழைக்கும் நிலைக்கு மமதாவின் திரிணாமூல் காங்கிரஸ் வந்து விட்டது.

**கே.சஞ்சீவிபாரதி, அவ்வையார்பாளையம்**

**கே:** ஆம் ஆத்மி கட்சி மாதிரி, கரப்பான் பூச்சி கட்சி வளர்ந்து விடுமோ?

**ப:** நடுத்தெருவில் சீரியஸ் ஆக போராடித் துவங்கிய ஆம் ஆத்மி கட்சியே, கரப்பான் பூச்சி போல ஆகிவிட்டது. சமூக ஊடகத்தில் வேடிக்கையாகத் தொடங்கிய கரப்பான் பூச்சி கட்சி எப்படி ஆம் ஆத்மி கட்சி போல வளரும்?

**எம்.மனோகரன், இராமநாதபுரம்**

**கே:** பிராமணர்களை அறவே வெறுக்கும் தி.மு.க., ஆடிட்டர் முதல் அரசு வக்கீல் வரை தன் கட்சியில் வைத்து இருப்பது ஏன்?

**ப:** எப்படி பிராமணர்களை வெறுப்பது தி.மு.க.வின் பாரம்பரியமோ, அப்படி பிராமணர்களை ஆடிட்டர், வக்கீல் மற்றும் டாக்டர்களாக வைத்துக் கொள்வதும் அவர்களது பாரம்பரியம்.

**ஏ.எம்.பழனிசாமி, பொன்மார்**

**கே:** 'மார்ட்டின் குடும்ப வலையில் விஜய் மாட்டிக் கொண்டார்' என்று விமர்சனங்கள் தலை தூக்குவது குறித்து?

**ப:** அந்த விமர்சனங்கள் தவறு. வலை என்று தெரியாமல் விழுவதுதான் சிக்குவது. வலை என்று தெரிந்து சேர்வது சிக்குவதல்ல. விஜய் சிக்கவில்லை, தெரிந்தே சேர்ந்தார்.

**பி.கே.பிரியா, திண்டல்**

**கே:** 'தி.மு.க.வில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களை வைத்துக் கொண்டு இளைஞரணி கூட்டத்தைக் கூட்டி, காங்கிரஸுக்கு எதிராக பேசி இருக்கிறார் உதயநிதி' என மாணிக்கம் தாகூர் பேசியுள்ளாரே?

**ப:** தனக்கு மட்டுமே தெரிந்த அந்த ரகசியத்தை, ஆண்டுகள் பல காத்திருந்து, கூட்டணியை விட்டு வெளியேறிய பிறகுதான் கூறுகிறார் மாணிக்கம் தாகூர்.

**இ.ராஜு நரசிம்மன், சென்னை - 17**

**கே:** மக்களுடன் வாழ்ந்து, மறைந்த எளிய, எளிமையான முதல்வர்களுக்கும், கோட்-சூட் அணிந்து வரும் முதல்வருக்கும் இடையே ஆன வேறுபாடுகள் என்ன?

**ப:** எளிய முதல்வர்களை மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். கோட் - சூட் அணிந்த முதல்வரை சினிமா ரசிகர்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

**தாமஸ் எட்மண்ட்ஸ், தாம்பரம்**

**கே:** தமிழகத்தில் அமைந்துள்ள புதிய அரசுக்கு ஆதரவாக, மிகுந்த நன்மைகளை மக்களுக்குத் தர, துக்ளக் ஆசிரியர் தக்க சமயத்தில் நல்ல ஆலோசனைகளைத் தொடர்ந்து தருவார் என எதிர்பார்க்கலாமா?




**ப:** 'கடை விரித்தேன் கொள்வாரில்லை' என்று வள்ளலார் கூறினார். வள்ளலார் நிலையே அப்படி என்றால்... நாம் சொல்வதை யார் கேட்பார்கள்?

---

## சித்தராமையாவும், துரைமுருகனும்

**ஆ.மாணிக்கம், பொள்ளாச்சி - 2**

★**கே:** 'அரசியல் அமைப்பு சட்டம் இல்லை என்றால், நான் எம்.எல்.ஏ., முதல் மந்திரி ஆகியிருக்க முடியாது. நான் ஆடு மேய்த்துக் கொண்டு இருந்திருப்பேன்' என்கிறாரே சீத்தாராமையா?

**ப:** 1977-ல் கர்நாடகாவில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு கொண்டுவந்தது தேவராஜ் அர்ஸ் அரசு. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சித்தராமையாவுக்கு அன்று வயது 29. அரசியல் சட்டம் வருவதற்கு 50 ஆண்டுகளுக்கு முன், 1921-ல் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வந்தார் ஒரு அரசர். யார்? மைசூர் மகாராஜா. அவர் இல்லையென்றால் நான் ஆடு மேய்த்துக் கொண்டிருப்பேன் என்று சித்தராமையா கூறியிருந்தால் ஏற்கலாம். அவர் பேசியது உண்மையல்ல, அரசியல். ஈ.வெ.ரா. இல்லை என்றால் ஆடுதான் மேய்த்துக் கொண்டிருப்பேன் என்று துரைமுருகன் அரசியல் பேசியது போல. உண்மை என்ன? ஈ.வெ.ரா. இல்லை என்றால் துரைமுருகன் குடும்பம் ரூ. 75 கோடி சொத்து குவித்திருக்க முடியாது.

ஆனாலும் முந்தைய அரசுகளைப்போல இந்த அரசுக்கும் ஆலோசனைகளை கூறியிருக்கிறோம், தொடர்ந்தும் கூறுவோம்.

**மு.ம.கோகுலகன்னி, இராமநாதபுரம்**

**கே:** மத்தியில் பிராமணர்கள் மந்திரிகளாக இடம் பெறும்போது, தமிழகத்தில் மட்டும் அமைச்சராக இடம் பெறக் கூடாது என்று சொல்வது சரியா?

**ப:** தமிழக அரசியல் அகராதியில் சமூகநீதி என்றால், பிராமணர்களுக்கு இடம் இல்லை என்று அர்த்தம். அதனால்தான்.

**ஏ.நாகராஜன், கடலூர் - 1**

**கே:** வெற்றிகரமாக 12 ஆண்டுகள் தொடர்ந்து பிரதமராகப் பணிபுரிந்து கொண்டிருக்கும் மோடிஜியின், மிகவும் முக்கியமான இரண்டு சாதனைகளைக் கூறுங்களேன்!




**ப:** அவர் சாதனைகள் எண்ணிலடங்கா. முக்கியமான இரண்டில் - ஒன்று, 500 ஆண்டுகளாக ஹிந்துக்கள் ஏங்கிய ராமர் கோவிலைக் கட்டி கும்பாபிஷேகம் செய்தது. அடுத்தது - நீக்கவே முடியாது என்று எல்லோரும் கைவிட்ட அரசியல் சாஸனப் பிரிவு 370-ஐ நீக்கியது.

**ஜெனிஃபர் ஏஞ்சல், நியூ டெல்லி - 75**

**கே:** அரசாங்கக் கஜானாவிற்கு பணத்தை அள்ளிக் கொடுக்கும் கற்பக விருட்சமாக டாஸ்மாக் இருந்தும், தமிழக அரசுக்கு ஏன் இவ்வளவு கடன் சுமை?

**ப:** ஆண்டுக்கு டாஸ்மாக் வருமானம் 48,500 கோடி. அது போல இன்னொரு மடங்கு ப்ளாக் மார்க்கெட்டில் விற்கிறது (1). எனவே தமிழக அரசுக்கு, காமதேனுவான டாஸ்மாக் வருமானத்தில் பாதி கிடைக்கவில்லை.

(1) நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 18 Mar 2022

**சந்திரசேகரன், சென்னை - 80**

**கே:** ஆசிரியருக்கு ஒரு சவால். உங்களால் தி.மு.க., த.வெ.க. இரண்டிற்கும் குறைந்தபட்சம் ஆறு வித்தியாசங்கள் கூற முடியுமா?

**ப:** இது என்ன பெரிய சவால்? கொடி, சின்னம், கோட், வந்தே மாதரம், கடவுள் மீது பதவிப் பிரமாணம், பிராமண அமைச்சர்கள் - 6 ஆறு வித்தியாசங்கள். அது தவிர வேறு எந்த வித்தியாசமும் இல்லை.

**பர்வீன், சென்னை - 126**

**கே:** த.வெ.க.வுடன், காங்கிரஸ் சேர்ந்து நின்றிருந்தால், விஜய்யின் உண்மையான மதிப்பு தெரியாமல் போயிருக்கும் அல்லவா?

**ப:** விஜய்யின் மதிப்பு தெரியாதது மட்டுமல்ல, நாங்கள்தான் விஜய் வெற்றிக்கு காரணம் என்று காங்கிரஸ் பீற்றிக்கொள்ள, ''நான்தான் எல்லாம்'' என்று விஜய் இன்று கூறமுடியாது.

**★ ● ◆- இக்குறியிட்ட கேள்விகள் முறையே 500, 400, 300 - ரூபாய்களைப் பரிசுகளாகப் பெறுகின்றன.**

**சந்தாதாரர்கள் கவனத்திற்கு...**

**சந்தா விவரங்களுக்கு 9840909525, 9840909508 என்ற தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளவும். இணைய தளத்தில் படிக்க மற்றும் இணைய தளத்துக்கு சந்தா செலுத்த விரும்புவோர் www.thuglak.com என்ற இணைய தளத்தைத் தொடர்பு கொள்ளவும்.**

**மு.க.இப்ராஹிம், விளாத்திகுளம்**

**கே:** 'முஸ்லிம் சமுதாய ஓட்டுகள் இல்லாமல் தி.மு.க.வால் 59 இடங்களில் வென்றிருக்க முடியாது' என்கிறாரே இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் காதர் மொய்தீன்?

**ப:** அண்ணாதுரை முதல் கருணாநிதி, ஸ்டாலின் வரை தி.மு.க.-முஸ்லிம்கள் இரட்டைக்குழல் துப்பாக்கி என்றும், இஸ்லாமும் திராவிடமும் ஒன்று என்று உதயநிதி பேசி முஸ்லிம்களை போற்றிய தி.மு.க.வுக்கு, இந்த அவமானமும் வேண்டும் இன்னமும் வேண்டும்.

**உ.அக்சராலட்சுமி, செம்பாக்கம்**

**கே:** '15 ஆண்டுகளுக்கும் மேலாக போலீஸ் துறை மற்றும் குண்டர்களைப் பயன்படுத்தி, திரிணாமூல் காங்கிரஸ் கையாண்ட வன்முறை தந்திரங்களே, கிராமப் பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ். செழித்து வளர சாதகமாக உள்ளது' என்கிறாரே மேற்கு வங்க மார்க்ஸிஸ்ட் செயலாளர் முகமது சலீம்?

**ப:** வன்முறை, தந்திரங்களை எதிர்த்து வளரக்கூடிய திறமை உள்ளது ஆர்.எஸ்.எஸ்.தான், கம்யூனிஸ்ட்கள் அல்ல என்று கூறாமல் கூறுகிறார் அவர்.

**ம.தீக்சரா, செம்பாக்கம்**

**கே:** 'நாட்டின் சட்டத்தின் உண்மையான பாதுகாப்பாளர்கள் நீதித்துறையினர்தான் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்' என்கிறாரே மமதா பானர்ஜி? முதல்வர் பதவியில் இருக்கும்வரை அவருக்கு இந்த ஞாபகம் இல்லையே?

**ப:** இந்திரா ஆட்சியில் இருக்கையில், அவர் நீதிமன்றத்தைத் தூற்றாத நாள் கிடையாது. அவரை முன்னோடியாக நினைப்பவர் மமதா. ஆட்சியில் இருக்கும்போது நீதிபதிகள், நீதிமன்றத்தை தூற்றாத ஒரே ஒரு கட்சி பா.ஜ.க.தான்.

**பா.கோபாலகிருஷ்ணன், திருவனந்தபுரம்**

**கே:** அணி மாறிய காங்கிரஸ் கட்சியை நன்றி கெட்டவர்கள் என்று திட்டும் தி.மு.க.வினர், ரூ.3,000 + 5,000 என்று ஓட்டுக்காகக் கொடுக்கப்பட்ட பணத்தை வாங்கிக் கொண்டு, தி.மு.க.வுக்கு எதிராக வாக்களித்த வாக்காளர்களை கருணாநிதி பாணியில் (சொரணை கெட்ட

தமிழன், சோற்றாலடித்த பிண்டம்) ஏன் யாரும் திட்ட வில்லை?

**ப:** ஹிந்துக்களை மட்டும் சாடும் அளவுக்குத்தான் இன்று தி.மு.க.வுக்கு துணிவிருக்கிறது. கருணாநிதி போல துணிந்து தமிழர்களையும் சேர்த்து பழிக்கும் அளவுக்கு அதற்கு தெம்பில்லை.

**முகதி.சுபா, திருநெல்வேலி - 11**

● **கே:** ‘நீதித்துறையில் ஊழல் இருப்பதை மறுக்க முடியாது’ என்று சென்னை உயர் நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளதே?

**ப:** இந்த கருத்து சி.பி.எஸ்.இ. பாடபுத்தகத்தில் இருந்ததை உச்ச நீதிமன்றம் கண்டனம் செய்தது, பாட புத்தகங்களிலிருந்து அது நீக்கப்பட்டது. புத்தகம் எழுதியவர்கள் வேலை பறிபோனது. உண்மையைத் துணிவாகக் கூறிய உயர் நீதிமன்றத்தைப் பாராட்டுகிறோம்!

**ச.கிறிஸ்து ஞான வள்ளுவன், வேம்பார்**

**கே:** ‘பாரபட்சமான தேர்தல் ஆணையம், பல மாநிலங்களில் நடத்திய தேர்தல்கள் முடிந்து பல மாதங்கள் கழித்து, ஒருவழியாக SIR முறையை நியாயப்படுத்தும் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கிறது. இந்திய நீதித்துறையில் கருப்பு நாள் இன்று’ என மூத்த வழக்கறிஞர் பிரஷாந்த் பூஷண் சொல்கிறாரே! உண்மையிலேயே அது கருப்பு நாள்தானா?

**ப:** பிரசாந்த் பூஷண் ஈ.வெ.ரா. போன்றவர். நாம் சுதந்திரம் பெற்ற நாளையே கருப்பு நாள் என்று கூறியவர் ஈ.வெ.ரா..

**எம்.எஸ்.வைத்தியநாதன், சென்னை - 44**

**கே:** சட்ட விரோதமாக லட்சக்கணக்கான ரோகிங்யாக்கள் மற்றும் பங்களாதேஷ் வாசிகளை நம் நாட்டுக்குள் அனுமதித்து, ஆதார் கார்டு உள்பட பல வசதிகள் செய்து கொடுத்த மமதா பானர்ஜிக்கு, இவ்வளவு துணிச்சல் எங்கிருந்து வந்திருக்கும்?

**ப:** மதச்சார்பின்மை, தாராளவாதம் என்ற வக்கிரமான சித்தாந்தங்கள் அடிப்படையில், நாட்டுக்கு எவ்வளவு விரோதமாக வேண்டுமானாலும் செயல்பட முடிந்ததுதான்.

**சி.ரகுமுருகன், பள்ளிச்சேரி**

**கே:** ‘முதல்வர் விஜய்யின் செயல்பாடுகளைப் பார்த்து, பிடித்துபோய் த.வெ.க.வில் வந்து அனைவரும் சேருகின்றனர்’ என்று அமைச்சர் செங்கோட்டையன் சொல்வது நியாயமா?

**ப:** விஜய் வெற்றி பெறவில்லை என்றால், அவர் செயல்பாடுகள் எவ்வளவு நன்றாக இருந்தாலும் யாரும் த.வெ.க.வை திரும்பிக்கூட பார்க்க மாட்டார்கள். அவர் வெற்றி பெற்றதால் மட்டுமே அவர்கள் த.வெ.க.வில் சேர்கிறார்கள்.

**வி.சி.கிருஷ்ணரத்னம், சென்னை - 100**

**கே:** கர்மா என்றால் தீவினை மட்டும்தானா? கர்மா மற்றும் அதிலிருந்து விடுபடும் வழிகள் குறித்து மஹா பெரியவா கூறியுள்ள முக்கிய கருத்துக்களை பகிருங்களேன்?

**ப:** தீதும் நன்றும் பிறர் தர வாரா - என்று புறநானூற்றில் கணியன் பூங்குன்றனார் கூறியது போல பிறரால் அல்ல, நமது தீய செயல்களால் தீவினை, நற்செயல்களால் நல்வினை நமக்கு என்பதே கர்ம விதி. இதைத் காஞ்சி மஹான் cause and effect என்ற விஞ்ஞான அடிப்படையில் விளக்கி, நற்செயல்களைச் செய்து, தீய செயல்களை தவிர்ப்பது ஒன்றுதான் கர்மவினையிலிருந்து விடுபட வழி என்கிறார்.

**என்.குப்புசாமி, கோவை - 14**

◆ **கே:** த.வெ.க.வுக்கு சரியான எதிர்க்கட்சி என எந்தக் கட்சியைக் கூறலாம்?

**ப:** தி.மு.க.வை பரம வைரியாக நினைக்கும் த.வெ.க., தி.மு.க.வின் அனைத்து கொள்கைகளையும் ஏற்கிறது. எனவே தி.மு.க. அதன் எதிர்க்கட்சி ஆகாது. தி.மு.க.வின் முக்கால்வாசி கொள்கைகளை அ.தி.மு.க. ஏற்பதால், அது த.வெ.க.வின் கால்வாசி எதிர்க்கட்சிதான். எனவே த.வெ.க.வுக்கு கொள்கை அளவில் இன்று எதிர்க்கட்சி பா.ஜ.க.தான் என்று தோன்றுகிறது. அதைக் கொள்கை எதிரி என்று ஆரம்பத்திலேயே அறிவித்தார் விஜய்.

**ம.வசந்தி, அவரப்பாக்கம்**

**கே:** நீட் தேர்வு குளறுபடி, சி.பி.எஸ்.இ. விடைத்தாள் குளறுபடி போன்றவற்றிற்கு பொறுப்பேற்று, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவியை ராஜினாமா செய்யலாமா?

**ப:** தொழில்நுட்ப அடிப்படையிலான டிஜிட்டல் முறையில், உச்ச மட்டத்தில் இருப்பவர்களை தார்மீகப் பொறுப்பாக்குவது சரியல்ல. தொழில்நுட்ப நிபுணர்கள், அவர்கள் தேர்ந்தெடுத்த சாஃப்ட்வேர் கம்பெனிகள்தான் அதற்குப் பொறுப்பு. டிஜிட்டல் மோசடிகளால் வங்கி வாடிக்கையாளர்களுக்கு 2025-26-ல் மட்டும் ரூ. 48,000 கோடி நஷ்டம் (1). நிதி அமைச்சர், நிதித்துறை அதிகாரிகளை அதற்கு தார்மீகப் பொறுப்பாக்குவது தவறு.

[1] https://gemini.google.com/share/f66e9b75f327

**முகமது ஆதில், சென்னை - 126**

**கே:** இதுவரை, சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரனின் செயல்பாடு எப்படி?




**ப:** முன்பு சபாநாயகராக இருந்த அப்பாவு, ஜே.சி.டி. பிரபாகரன் இருவரும் கிறிஸ்தவர்கள். அவர்களிடையே ஒரு வித்தியாசம். அப்பாவு சபைக்கு வெளியில் தான் கிறிஸ்தவத்தைப் பரப்பினார். பிரபாகரன் சபைக்குள்ளேயே செய்கிறார். ●


" ஏன் திடீர்னு தனிக்கட்சி ஆரம்பிக்க நினைக்கறீங்க?"
" மேலிட திருப்திக்காக எனக்குப் பிடிக்காத அ.தி.மு.க.வை ஆதரிச்சு பிரசாரம் பண்ணேன். தி.மு.க. கூட்டணி உடைஞ்ச பிறகு, தி.மு.க. வும் பா.ஜ.க.வும் கூட்டு வெக்க லாம்னு பேசிக்கிறாங்க. அப்புறம், தி.மு.க.வையும் ஆதரிச்சுப் பேசச் சொல்லிடுவீங்களோன்னு பயமா இருந்தது. அதான்...!"
அமித் ஷா
அண்ணாமலை
" எங்களை மதிச்சு, ராஜ்ய சபா ஸீட்டை காங்கிரஸுக்கு ஒதுக்கி னதுக்கு ரொம்ப தேங்க்ஸ்.!"
"தேங்க்ஸ் இருக்கட்டுமங்க! எங்களை இண்டி கூட்டணியிலே சேர கட்டாயப்படுத்தாம இருந்தா போதும். அதுக்குத்தான் மேலவை ஸீட்."
ராஹுல்
கிரீஷ் சோடங்கர்
விஜய்
'வாயிலே நல்லா வருது...' - நன்றி உரை யில் முதல்வர் விஜய் பேச்சு.
சத்யா
"ஹார்ட் டிஸ்க் திருடியவர்கள் தப்ப முடியாதுன்னு அமைச்சர் மிரட்டறார். இதுக்கெல்லாம் தி.மு.க. பயந்துடாது. அமலாக்கப் பிரிவு மிரட்டலுக்கே பயப்படாத இயக்கம் தி.மு.க.."
செந்தில் பாலாஜி
" என்ன இது? 'வாய் வெத்தலை பாக்கு போட்டுக்கும், தட்னா தாராந்துடுவே, உன் மூஞ்சி மேலே பீச்சாங்கை'ன்னெல்லாம் எழுதி யிருக்கீங்க?"
"மேடையிலே நீங்க பேசறதுக்கு உரை தயாரிச்சிருக்கேன் ஸார். ஜென்-ஸீ நல்லா ரசிப்பாங்க."
விஜய்
உதவியாளர்



# “எனக்கு வாயில ஏதாவது வந்துற போகுது”

## - முதலமைச்சரின் தரம் தாழ்ந்த பேச்சு!

**த.**வெ.க. தலைவர் விஜய் முதலமைச்சராகப் பொறுப் பேற்ற பிறகு, முதன்முறையாக கடந்த ஒன்றாம் தேதி சென்னைக்கு வெளியே திருச்சி யில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார். அந்த முதல் கூட்டமே பல்வேறு விமர்சனங் களை கிளப்பியுள்ளது.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட்ட த.வெ.க. தலைவர் விஜய் இரண்டு தொகுதிகளிலுமே வெற்றி பெற்றார். ஏதேனும் ஒன்றில் மட்டுமே அவர் எம்.எல்.ஏ.வாக இருக்க முடியும் என்பதால், திருச்சி கிழக்குத் தொகுதியை ராஜினாமா செய்தார். ராஜினாமா செய்த கையோடு திருச்சி சென்று, தனக்கு வாக்களித்த திருச்சி கிழக்கு தொகுதி மக்களுக்கு நன்றி கூறினார்.

தி.மு.க. அரசு இருந்தபோது, ‘எனது பொதுக்கூட்டங்களுக்கு 5,000 பேருக்கு மேல் வர போலீ ஸார் அனுமதிப்பதில்லை’ என்று தி.மு.க. அரசு மீது பழியை போட்டுக் கொண்டிருந்த விஜய், தற்போது காவல்துறையை தன்வசம் வைத்திருக்கும் போதும் ‘5,000 பேருக்கு மட்டும் **QR Code** மூலம் அனுமதி’ என்று நன்றி அறிவிப்பு கூட்டத்தை நடத்தியதும், கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி இருக் கிறது. அந்த **QR Code** அழைப்பை யும் திருச்சி கிழக்குத் தொகுதிக் காரர்களுக்கு மட்டுமில்லாமல், திருச்சியிலுள்ள வெவ்வேறு தொகுதி களைச் சேர்ந்த ‘வேண்டியவர் களுக்கு எல்லாம் வழங்கி, இந்த விழாவையே அர்த்தமற்றதாக்கி விட்டார்கள்’ என்ற குற்றச்சாட்டை யும் தொகுதிவாசிகள் சிலர் வைத்த னர்.

முதலமைச்சர் ஆனபிறகு பந்த லில் ஒரு மேடை அமைத்து, அதில் சில நாற்காலிகள் போட்டு அமர்ந்து விஜய் பேசுவார் என்று பலரும் எதிர் பார்த்த நிலையில், அதே பழைய பிரசார பஸ் மீது ஏறிக்கொண்டு கூட்டத்தை நடத்தினார் விஜய். கவர்னர் கலந்து கொள்ளும் அரசு நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாமிடம் சென்றது குறித்து பல குற்றச்சாட்டுகள் வந்ததற்கு பயந்து, அரசு விழா அல்லாத ஒரு அரசியல் பொதுக்கூட்டத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தை ஒலிக்கச் செய்தது, பலர் மத்தியில் நகைப்புக்குரியதானது. அந்த தமிழ்த்தாய் வாழ்த்து கூட அவரது கட்சிக் கொள்கை பாடலை ஒலிபரப்பு செய்த பிறகு, இரண்டா வதாகத்தான் ஒலிபரப்பு செய்யப் பட்டது என்ற விமர்சனமும் எழுந் திருக்கிறது.

கட்சியின் பொதுச்செயலாளர் என்.ஆனந்தும், திருச்சியை சேர்ந்த கு.ப.கிருஷ்ணன் மற்றும் அறநிலை யத் துறை அமைச்சர் ரமேஷ் ஆகி யோரும் ஓரிரு நிமிடங்கள் உரை யாற்றிய பிறகு, த.வெ.க. தலைவர் விஜய் தேர்தலுக்குப் பிறகான தனது முதல் பேச்சை துவக்கினார். முதலமைச்சர் ஆன பிறகு விஜய் பேசும் முதல் பேச்சு என்பதால் இது சற்று பாந்தமாக, கண்ணியமாக இருக்கும் என்று பலரும் எதிர் பார்த்த நிலையில், ‘எனக்கு வாயில ஏதாவது வந்திர போகுது’ என்றும் பேசி, பலரையும் அதிர வைத்தார் விஜய். மேலும் ‘நம்மிடம் ஏதோ கவர்ச்சிக்காக மயங்கி வாக்களித்து விட்டதாக சிலர் சொல்றாங்க. நான் என்ன...’ என்று இடைவெளி விட்டதும் அவ்வளவு நாகரிகமானதாக தெரியவில்லை.

கடந்த ஒரு மாதமாக அரசு மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து எதுவுமே பதில் சொல்லாமல், ‘ஆறு மாதம் அமைதியாக இருக்கிறோம் என்று கூறிவிட்டு, அரை மணி நேரம் கூட உங்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே?’ என்று தி.மு.க.வை ஏளனம் செய்தார். ‘நிதி நிலைமையை துடைத்து வைத்து விட்டு போய் விட்டார் கள்; தெருவுக்குத் தெரு போதைப் பொருட்களின் ராஜாங்கத்தை உரு வாக்கி விட்டு போய் விட்டார்கள்’ என்று தேர்தல் பிரசாரம் போல பழைய திராவிட ஆட்சிகளையே விமர்சனம் செய்தார்.

‘உண்மையை சொல்லு உடன் பிறப்பே - என்று தோற்றதற்கு கார ணம் தேடிக் கொண்டிருக்கிறார் கள். அதை வெளியே தேடாதீர்கள் ஸ்டாலின் ஸார். உங்கள் குடும்பத் திற்குள்ளேயே தேடுங்கள்’ என்று தி.மு.க.வை கடுமையாக விமர் சனம் செய்த விஜய், அ.தி.மு.க.வை யும் தீர்ந்து போன கட்சி என்று கடுமையாக ‘டேமேஜ்’ செய்தார். ‘இனிமேலும் தமிழ்நாட்டில் தி.மு.க. விற்கும், த.வெ.க.விற்கும் மட்டும் தான் போட்டி. வேறு அல்லு சில்லு கள் குறுக்கே வந்தால் நிர்வாகம் பொறுப்பல்ல’ என்றும் விஜய் குறிப்பிட்டார்.

முதலமைச்சரான பிறகு விஜய் யின் பேச்சில் ஒரு பாந்தமான மாற்றம் வருவது நல்லது.

**- எஸ்.ஜே.இதயா**




# காங்கிரஸுக்கு ஜாக்பாட்...

**அ**கில இந்திய அளவில் காங்கிரஸுக்கு பா.ஜ.க. உருவில் போதாத காலம் தொடர்ந்து கொண்டிருந்தாலும், தமிழகத்தில் விஜய் தயவில் அதிர்ஷ்டக் காற்று காங்கிரஸ் பக்கம் பலமாகத்தான் வீசுகிறது. தி.மு.க. கூட்டணியில் சட்டசபைத் தேர்தலைச் சந்தித்து, அடம்பிடித்து 28 சட்டசபைத் தொகுதிகளோடு ஒரு ராஜ்ய சபா ஸீட்டையும் வாங்கியது காங்கிரஸ். தேர்தல் முடிந்த சூட்டோடு, ஸ்டாலின் உறவை உதறி, தி.மு.க. தயவில் ஜெயித்த 5 காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் ஆதரவை த.வெ.க.வுக்குக் கொடுத்து, 2 மந்திரி பதவிகளைப் பெற்றது.

இதன் மூலம் 1967-க்குப் பிறகு கோட்டைக்குள் மந்திரியாக நுழைய வேண்டும் என்ற காங்கிரஸாரின் நெடுங்காலக் கனவு நனவானது. ஐந்து எம்.எல்.ஏ.க்களில் இரண்டு பேருக்கு மந்திரி பதவி என்றால் சும்மாவா? ஆட்சிக்கு ஆதரவு என்பதோடு நிறுத்தாமல், தேர்தல் முடிந்த கையோடு, தி.மு.க. கூட்டணியையும் உதறி, ‘இனி த.வெ.க.வுடன்தான் கூட்டணி’ என்று அறிவித்ததற்கு கைமேல் கண்ட பலனாக, விஜய் வழியாக ஒரு ராஜ்யசபா ஸீட் இப்போது காங்கிரஸுக்குக் கிடைத்துள்ளது. இது, கொடுக்குற தெய்வம் கூரையைப் பிச்சுக்கிட்டு கொடுத்த கதைதான்!

ராஜ்ய சபா உறுப்பினராக இருந்த முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டு வென்றதால், அவரது ராஜ்யசபா உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். அவரது பதவிக்காலம் இன்னும் இரண்டரை ஆண்டுகளுக்கு மேலிருக்கிறது. இப்போது சட்டசபையில் த.வெ.க.வின் பலம் 107 உறுப்பினர்கள் என்றிருக்கிறது. அந்த பலத்தைக் கொண்டு, அந்த ஒரு ராஜ்ய சபா ஸீட்டை த.வெ.க. சுலபமாகப் பெற முடியும் என்பதால், மாநிலங்களவையில் த.வெ.க. சார்பில் அனுப்பப்பட இருக்கும் அந்தப் பிரதிநிதி யார் என்று எதிர்பார்ப்பு எழுந்தது. அது முதல்வர் விஜய்யின் ஆஸ்தான ஜோதிடர் ரத்தன் பண்டிட்டா, அரசியல் ஆலோசகர் ஜான் ஆரோக்கியசாமியா அல்லது யாராவது புது முகமா என்றெல்லாம் யூகங்கள் கிளம்பின.

ஆனால் சற்றும் எதிர்பாராத வகையில், காங்கிரஸுக்கு அந்த ஒரு இடத்தைக் கொடுத்து விட்டார் விஜய். த.வெ.க. - காங்கிரஸ் இடையே நட்புறவு மலரக் காரணமாக இருந்த ப்ரவீன் சக்ரவர்த்திக்காக, முதல்வர் இதை விட்டுக் கொடுத்துள்ளார்.

இந்த ராஜ்ய சபா இடத்தை நிரப்புவதற்கான மனுத்தாக்கல் தொடங்கும் சமயத்தில், கோட்டையில் முதல் வரை காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் சந்தித்துப் பேசியது பலரது கவனத்தையும் ஈர்த்தது. இச்சந்திப்புக்குப் பிறகே, த.வெ.க.வின் முடிவு அறிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ராஜ்யசபா ஸீட்டை விஜய் விட்டுக் கொடுத்ததற்காக, காங்கிரஸ் மேலிடப் பிரதிநிதி கிரீஷ் சோடங்கர், அடுத்த நாள் சென்னை தலைமைச் செயலகம் வந்து முதல்வருக்கு நன்றி தெரிவித்தார்.

காங்கிரஸோடு இணைந்து ஒரு வலிமையான கூட்டணியோடு நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் திட்டத்துடனேயே, விஜய் இந்த முடிவை எடுத்திருக்கக் கூடும் என்று அரசியல் விமர்சகர்கள் கணிக்கிறார்கள். எனினும், தேர்தலில் போட்டியிடாத, விஜய்க்கு நெருக்கமான நட்பு வட்டத்தைச் சேர்ந்தவர்கள் இந்த திடீர் முடிவால் ஏமாற்றம் அடைந்திருப்பதாகவும் பேச்சு எழுந்துள்ளது.

இப்படி ஒரு ராஜ்யசபா ஸீட் திடீரென்று கிடைத்தும் காங்கிரஸின் ஆசை அடங்கவில்லை. தமிழகக் காங்கிரஸ் நிர்வாகிகள் சிலருக்கு ‘வாரியத் தலைவர்’ பதவி கேட்டு, த.வெ.க.வை நச்சரிப்பதாகவும் தகவல்.

**- நிருபன்**

# தலைவனை தேடும் தேசத்தின் ஆன்மா

எனது அருமை சகோதர சகோதரிகளே, புண்ணிய தேசமாம் நம் பாரத தேசத்தின் மண்ணின் மைந்தர்களே, உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கம். நாம் சுவாசிக்கும் இந்த சுதந்திர காற்று நமக்கு இலவசமாக கிடைத்துவிடவில்லை. எத்தனை எத்தனை உயிர்களை இழந்திருக்கின்றோம், எத்தனை பெரிய தியாகங்களை நம் முன்னோர்கள் செய்திருக்கின்றார்கள், சொல்லமுடியாத கொடுமைகள், விளக்கமுடியாத வேதனைகள் என அனைத்து இன்னல்களையும் அனுபவித்து நம் முன்னோர்கள் பெற்று தந்த இந்த சுதந்திரம் விலைமதிக்க முடியாதவை!!.

அன்று ஆங்கிலேயர்களுக்கு அடிமைகளாக இருந்தோம்; இன்று ஆட்சியாளர்களுக்கு அடிமையாகி வருகின்றோம். 'ஆட்சியாளர்களிடம் இருந்து நாம் பெறும் ஒவ்வொரு இலவசமும் ஏதோ ஒருவகையில் தேசத்தை அடமானம் வைத்துதான் நமக்கு வழங்கப்படுகிறது' என்ற உண்மை எப்போது நமக்கு புரியும்? இன்று தமிழ்நாட்டின் கடன் சுமை சுமார் பத்து லட்சம் கோடியில் வந்து நிற்கிறது. செருப்பு தைத்து, வண்டி இழுத்து, ஓர் உணவக ஊழியராக, ராணுவ வீரராக, வாகன ஓட்டுனராக, ஆசிரியராக, அரசு ஊழியராக, தூய்மை பணிகளை செய்யும் முன்கள பணியாளராக, மருத்துவராக, செவிலியராக, இரவெல்லாம் கணினிமுன் அமர்ந்து பணியாற்றும் ஒரு பொறியாளராக என நாம் இரவு பகலாக பாடுபட்டு வியர்வை சிந்தி உழைத்து சம்பாதிக்கும் பணம் வட்டிபணமாக கரைந்துகொண்டிருப்பது எப்போது புரியபோகிறது நமக்கு? உண்மையில் ஆயிரங்களுக்கு ஆசைப்பட்டு லட்சங்களை இழந்துகொண்டு இருக்கின்றோம்.

கேலியும், கூத்துமாக இருக்கின்ற இன்றைய அரசியல், குடியும், கும்மாளமுமாக இருக்கின்ற வாழ்வை அங்கீகரிக்கிறது. 'இன்றைக்காவது கணவர் குடிக்காமல் வீட்டிற்கு வருவாரா'?, 'போதைக்கு அடிமையான மகனை எப்படி, எப்போது மீட்பது', என வருந்தி வருந்தியே வாழ்வு விரயமானதுதான் மிச்சம். ஆண்டவன் மீது நம்பிக்கை வைப்பது அவரவர் விருப்பம். ஆனால் சத்தியமும், தர்மமும் கடவுள் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டது. மனிதனின் நல்வாழ்விற்கு அடிப்படையே இந்த இரண்டு காரணிகள்தான். ஆண்டவன் மீது ஆணையிட்டு பதவிபிரமாணம் செய்துகொள்ள தயக்கமோ, பயமோ இருந்தால் மாறாக துணிந்து அவரவர் பெயரின் மீது சத்தியம் செய்து பதவி ஏற்கலாமே! அதில் என்ன தயக்கம்?. அவர்கள் நேர்மையின் மீது அவர்களுக்கே நம்பிக்கை இல்லை.

அதிகார துஷ்பிரயோகம், சுயநல அரசியல், தேசநலன் சார்ந்த காரணிகளில் போதிய விழிப்புணர்வு இல்லாமை, பிரித்தாளும் கொள்கைகள், ஊழல் லஞ்சம், என பல காரணிகள் இன்றைய அவல நிலைக்கு காரணமாக இருந்தாலும் பிரதான காரணமாக இருப்பது 'ஆசை' என்ற ஒற்றை சொல். 'இந்த உலக மக்களின் தேவைக்கான அனைத்தும் நம்மிடம் இருந்தாலும் கூட ஒரு தனிமனிதனின் ஆசைக்கு அதுபோதுமானதாக இருக்காது', என்ற மகாத்மா காந்தியடிகளின் வரிகள் இன்று நிரூபணம் ஆகிவிட்டது. இந்த அவலநிலை இன்று நேற்று தொடங்கியது அல்ல, நாம், கர்மவீரர் காமராஜ் அவர்களை தோற்கடித்தபோதே தொடங்கிவிட்டது. பிறகு நீதிமான்களாக இருக்கவேண்டிய ஆட்சியாளர்கள் எல்லாம் நிதிமான்களாக ஆனது எல்லாம் நாம் அறிந்ததே. 'அரைநூற்றாண்டு காலமாக நிகழந்து வரும் சீர்கேடுகள் எல்லாம் ஐந்தே மாதங்களில் சீரடைய வேண்டும்' என எதிர்பார்ப்பது அறியாமையின் உச்சம். இனி எவரேனும் 'ஐந்தே நாளில் அனைத்தையும் மாற்றுவேன்', என்று கூறினால் அவர் நம்மை ஏமாற்றபோகிறார் என்பதை கடைகோடி தமிழனுக்கும் காலம் புரிய வைத்துவிட்டது. இனி நாம் செய்யவேண்டியது,,,.

நாட்டை நாம் காப்பாற்றினால்தான் நாடு நம்மை காக்கும். எனவே, சாதி மத பேதங்களுக்கு அப்பாற்பட்டு சுய விருப்பு, வெறுப்புகளுக்கு இடமின்றி, எள்முனை அளவிற்கு கூட பயன்தராத வறட்டு சித்தாந்தங்களுக்கும், கொள்கை கோட்பாடுகளுக்கும் இனி நாம் அடிமையாவதில்லை என்ற தெளிவான உறுதியான மனநிலை நமக்கு தேவை. தனிமனிதனின் ஆரோக்கியம்தான் தேசத்தின் ஆரோக்கியம். நமக்கும் நம்மை சுற்றியிருப்பவர்களின் நல்வாழ்க்கைக்கும் உகந்தது எதுவோ அதற்கு மட்டுமே முன்னுரிமை அளிப்போம்; அதை மட்டுமே தேர்வுசெய்வோம். உண்மைக்கு புறம்பான, நம்பகத்தன்மையற்ற மற்றும் நம் அனுபவத்தில் இல்லாத எந்தவொன்றை பற்றியும் மற்றவருக்கு நேரடியாகவோ அல்லது சமூகவளைதங்கள் மூலமாகவோ பகிரவேண்டாம். சுத்தமும், சுகாதாரமும் நம் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத காரணிகள். நடைபாதையில் எச்சில் துப்புவது, பொது இடங்களில் புகைப்பது, மது அருந்துவது போன்ற செயல்களை அறவே தவிர்த்திடுவோம். புறம் பேசுவது, பொது சொத்துக்களை சேதப்படுத்துவது, கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பது, பிறரது உடமைகளை அபகரிப்பது, அடுத்தவர்களின் இயலாமையை தனக்கு சாதகமாக பயன்படுத்துவது போன்ற தரம்தாழந்த செயல்களில் ஒருபோதும் ஈடுபடவேண்டாம்.

‘எங்களுடைய நிதி நிறுவனத்தில் முதலீடுசெய்தால் குறுகியகாலத்திலேயே உங்கள் முதலீடு பன்மடங்காகும்’, என்று கூறும் அங்கீகாரமற்ற நிறுவனங்களில் முதலீடு செய்யவேண்டாம். நமக்கு துயரமளித்ததை ஒருபோதும் பிறருக்கு செய்யவேண்டாம்; கூடுமானவரை பிறரது தவறுகளில் இருந்து பாடம் கற்றுகொள்வோம். அதுவே ஆக சிறந்த புத்திசாலித்தனம். நம்முடைய வாழ்வின் தரம்தான் நம் சந்ததியினருக்கு உரம். குழந்தை ஆசைப்பட்டுவிட்டால் அதை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்ற மனநிலை வேண்டாம். அதே சமயம் அவர்களது லட்சியத்திற்காக உங்களையே நீங்கள் அர்ப்பணிக்கலாம் தவறில்லை. ஆசைக்கும் தேவைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து செயல்படுவோம்.

இவையாவும் இன்றைய காலகட்டத்தில் ஒரு மனிதன் தன் நல்வாழ்விற்காக அவசியம் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளில் ஒரு சிறு பகுதிதான். சமூகத்தில் ஏதோ ஒரு பிரச்சனை எனில் உடனே நம் மனதில் ‘நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியில்லை, சட்டங்கள் கடுமையாக்கப்படவேண்டும்’ என்று தோன்றுகிறது. ஒரு சட்டம், அதை இயற்றுபவர், நடைமுறைபடுத்துபவர், பின்பற்றுபவர் என மூன்று நிலைகளை எவ்வித சமரசமும் இன்றி கடந்து வந்தால்தான் வெற்றிபெற முடியும். இன்றைய காலகட்டத்தில் இதெல்லாம் எந்த அளவிற்கு சாத்தியம் என்பதை நாம் நன்கு அறிந்திருக்கின்றோம். அதிகார பலமும் பண பலமும் உள்ள ஒருவன் சட்டத்தை தனகேற்றபடி வளைத்து அதை இருட்டறையில் அடைத்துவிடுகின்றான். அடித்தகொள்ளையில் பாதியை அதிகாரவர்க்கத்திற்கு கொடுத்துவிட்டு மீதியை வைத்து சுகபோகமாக வலம் வருவது அப்படிதான்.

கல்வி பயிலும் காலம் முடிந்து ஒரு மனிதன் சமூகத்திற்குள் அடியெடுத்து வைக்கும்போதே இந்த சமூகத்தையும், சட்டங்களையும், சகமனிதர்களையும் எப்படி பொறுப்புனர்வோடு அணுகவேண்டும் என்ற அடிப்படை அறிவும், அறநெறிகளும் அவனது இயல்பிலேயே இருக்கவேண்டும். அத்தகைய மாற்றம்தான் நிரந்தர தீர்வாக இருக்கும். இது நிஜமானால் நம் வல்லரசு கனவு விரைவில் நனவாகும். இதுவே நம் லட்சியம். ‘நான் மாற தயாராக இருக்கிறேன்’ என்பதே மாற்றத்திற்கான முதல் படி. முன்னேற்றத்திற்கான முதல் விதியும் அதுதான். எனவே, நாம் அணி அணியாக பிரிந்து இருக்காமல், ‘தேசநலன்’ என்ற ஒற்றை புள்ளியில் நாம் அனைவரும் ‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’!.

அஹிம்சைதான் வீரத்தின் உச்சம். அதுபோல் எளிமைதான் புகழின் உச்சம். இங்கு யாரும் யாரையும் ஆட்சி செய்யமுடியாது. இயற்கைதான் இந்த ஒட்டுமொத்த பூமியையும் ஆட்சிசெய்துகொண்டிருக்கிறது. மாறாக அரசாங்கம் மற்றும் பொதுவாழ்வில் அங்கம் வகிப்பவர்கள் மக்களுக்கு சேவை மட்டுமே செய்யமுடியும். அதனால் ‘முதலமைச்சர்’ என்பதை ‘முதன்மை சேவகர்’ என்று மாற்றினால் அதுவே மாற்றத்தின் தொடக்கமாக அமையும் என்று நம்புகின்றோம். வருங்கால முதல்வர், நிரந்தர முதல்வர், மக்களின் முதல்வர் என மாண்பற்ற மாண்புமிகுக்கள் நிறையபேரை பார்த்துவிட்டோம். வேண்டாமே இந்த தற்பெருமை. பாதைகள் எங்கிலும் பதாகைகள், வீதிக்கு வீதி விளம்பரங்கள் என அனைத்தும் காலவிரயம். தற்புகழ்ச்சியையும், முகதுத்தியையும் விலக்கி, தனது பொறுப்பு காலம் முழுவதும் சத்தியத்தின் வழி நின்று, இந்த தேசத்திற்காகவே தன்னை முழுவதும் அர்ப்பணித்து, மகத்தான மக்கள் சேவைகளாற்றி பின்னால் ஆன ஓய்வு நாட்களில் ஒரு பேருந்து நிறுத்தத்திலோ, ஒரு பூங்காவிலோ சாமான்ய மனிதனாக அமர்ந்து சகமனிதனோடு உரையாடும் ஒருவன் எவனோ அவனே ஆகச்சிறந்த தலைவன். அவனைத்தான் இந்த தேசத்தின் ஆன்மா தேடிக்கொண்டிருக்கிறது.

சிங்கபூருக்கு ஒரு ‘லீ குவான் யூ’ என்ற மாமனிதர் கிடைத்ததை போன்று, சுமார் 145 கோடி மக்கள்தொகை கொண்ட நம் பாரத தேசத்திலும் ஆயிரக்கணக்கில் மகாத்மாக்கள் இன்றும் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட அப்பழுக்கற்றவர்களை அரசியலில் பங்கேற்கவைத்து உலகின் மகத்தான தேசமாக நாம் உருவாகவேண்டும், கொள்கை, குறிக்கோள், லட்சியம் என எல்லாம் அதுதான். (கட்சியின் பெயர் பரிசீலனையில் இருப்பதால் விரைவில் தேர்வு செய்யப்படும்). இந்த மகத்தான பயணத்தில் என்றும் எங்களோடு உறுதுணையாக இருந்து எங்களுக்கு முழு ஆதரவளிப்பீர்கள் என்று உளமாற நம்புகின்றோம்.

மிக்க நன்றி,

அன்புடன்,



**மோ.வேலுச்சாமி**

**9360901221**

# மஹாபாரதம் பேசுகிறது

## 7.துரோண பர்வம் - அத்தியாயம் - 3

## அர்ஜுனனின் கோபம்


**பாசறைக்குத் திரும்பிய அர்ஜுனன், தன் மகன் அபிமன்யுவின் மரணத்தை அறிந்து கோபமுற்றது.**

அபிமன்யு வீழ்ந்ததைக் கண்ட பாண்டவ சைன்யம், சிதறி ஓட ஆரம்பித்தது. தர்மபுத்திரர், ''யாரும் பயப் பட வேண்டிய அவசியம் இல்லை. அபிமன்யு புறங் காட்டாமல் போர் செய்து, பகைவர்கள் பலரால் சூழ்ந்து கொல்லப்பட்டு, வீர சொர்க்கத்தை அடைந் திருக்கிறான். ஆகையால் அதை நினைத்து வருந்தாமல் மீண்டும் நாம் போரில் ஈடுபடுவோம்'' என்று வற் புறுத்தி, தனது படை வீரர்களை யுத்த களத்திற்குத் திருப்பினார்.

இப்படி படை வீரர்களுக்குத் தைரியம் கூறினாலும் தர்மபுத்திரர், அபிமன்யுவின் மரணத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டார். ''துரியோதனன், அஸ்வத்தாமா, கர்ணன், கிருபர், சல்லியன் என்று பலரையும் வென்ற அபிமன்யு இப்படி வீழ்ந்து விட்டானே! நான் விரும்பியதைச் செய்ய வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, தன்னுடைய உயிரையே இழந்து விட்டானே'' என்று புலம்பிய தர்ம புத்திரர், ''இப்படி அபிமன்யு கொல்லப் பட்ட பிறகு, அர்ஜுனனை நான் எப்படிக் கண் கொண்டு பார்ப்பேன்'' என்று கூறி அழுதார்.

இவ்வாறு துக்கத்தினால் பரிதவித்த தர்ம புத்திரர் மேலும், ''இவனுடைய தாயார் சுபத்திரையை நான் எப்படிச் சமாதானப் படுத்துவேன்? கிருஷ்ணரையும், அர்ஜுனனை யும் சந்தித்து என்ன சொல்லுவேன்? பேராசை கொண்டவன் ஆபத்துக்களை அறி வதில்லை. மிக உயரத்தில் இருக்கும் தேன் கூட்டிலிருந்து தேனை எடுத்து விடுகிற ஆசை கொண்டவன், கீழே இருக்கும் பள்ளத்தை நினைத்துப் பார்க்காமல், மேலே ஏறி கீழே விழுந்து, உயிரை இழக்கிறான். அந்த நிலையில்தான் நான் இருக்கிறேன். நம் மால் காப்பாற்றப்பட வேண்டிய இளம் வய துடைய அபிமன்யுவை, நம்மைக் காப்பாற் றும் முயற்சியில் இறக்கி விட்டேன். அபி மன்யுவுக்கு ஏற்பட்ட கதியை அர்ஜுனன் அறி யும்பொழுது, அவன் கண்களாலேயே நம் எல்லோரையும் எரித்து விடுவானே! இப்படி அபிமன்யு வீழ்ந்ததால் துரியோதனனுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை என்பது உண்மைதான். தன் மகனை வீழ்த்தியதால், பெரும் கோபம் கொண்டு அர்ஜுனன், துரியோதனனையும், அவனைச் சார்ந்தவர்களையும் அழிக்கப் போகிறான். இதில் சந்தேகமில்லை. ஆனால், அப்படி நடந்தாலும் கூட இனி எனக்கு என்ன வாழ்வு இருக்கிறது? அபி மன்யு வீழ்ந்து கிடப்பதைப் பார்த்த பிறகு, எனக்கு வெற்றியிலோ, அரச பதவியிலோ ஆசை இல்லாமல் போய்விட்டது'' என்று கூறிப் புலம்பினார்.

அப்போது அங்கே வந்த வியாஸர், தர்மபுத்திரரைத்



தேற்றினார். மிகவும் புகழ் வாய்ந்த அரசர்களும், தவ சிரேஷ்டர்களும், வீரர்களும் கூட எப்படி மரணத்தைச் சந்திக்க வேண்டி இருந்தது என்பதைப் பல பழங்கதைகளைக் கூறி விளக்கி, ''இந்த விலக்க முடியாத விஷயத்தில் வருந்துவது தகாது'' என்று வியாஸர், தர்மபுத்திரருக்கு ஆறுதல் கூறினார். ஓரளவு மனம் தேறினாலும், அர்ஜுனனிடம் என்ன சொல்வது என்று புரியாமல் தர்மபுத்திரர் கவலையுற்றார்.

இதற்கிடையில் சம்சப்தகர்களை வென்று திரும்பிக் கொண்டிருந்த அர்ஜுனன் கிருஷ்ணரிடம், ''என் மனதில் ஏதோ இனம் தெரியாத கலக்கம் ஏற்படுகிறது. என் வார்த்தை கூடத் தடுமாறுகிறது. நடக்கக் கூடாதது ஏதோ நடந்து விட்டதோ என்று, நான் அஞ்சுகிறேன். தர்மபுத்திரருக்கு ஏதாவது நேர்ந்திருக்குமா?'' என்று கேட்டான்.

கிருஷ்ணர், ''தர்மபுத்திரருக்கு ஒன்றும் நேர்ந்திருக்காது என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால், நீ அஞ்சுவது போல வேறு ஏதோ நடக்கக் கூடாத காரியம் நடந்து விட்டதாகவே எனக்கும் தோன்றுகிறது'' என்று கூறினார். அர்ஜுனன் மேலும் குழம்பினான். இருவரும் பாசறைக்குத் திரும்பினார்கள். அங்கே வழக்கமான வாத்திய கோஷங்கள் அர்ஜுனனை வரவேற்கவில்லை. இது கண்டு கலக்கமுற்ற அவன், பாசறையினுள் நுழைந்தபோது, பாண்டவர்கள் அனைவரும் மிகவும் துக்கத்துடன் அமர்த்திருப்பதைப் பார்த்தான். அவர்களிடையே அபிமன்யு இல்லை என்பதையும் அவன் கவனித்தான்.



சோ

மனம் பதறிய அர்ஜுனன் கேட்டான். ''நான் உள்ளே நுழையும்போது, நீங்கள் யாரும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. உங்களிடையே நான் அபிமன்யுவையும் பார்க்கவில்லை. என்ன நடந்தது? துரோணர் இன்று பத்ம வியூகம் அமைத்தார் என்று நான் கேள்விப்பட்டேன். அபிமன்யுவைத் தவிர, அதைப் பிளக்கக் கூடியவர்கள் யாரும் உங்களிடையே இல்லை. அதை உடைத்து உள்ளே போகும் வழியை மட்டும்தான் நான் அபிமன்யுவிற்குக் கற்றுக் கொடுத்திருக்கிறேன். வெளியே வரும் வழியை நான் அவனுக்குச் சொல்லித் தரவில்லை. ஒருவேளை அந்தப் பத்ம வியூகத்தினுள் நுழைந்து, அதிலேயே சிக்கி அபிமன்யு இறந்து விட்டானா? என்ன நடந்தது? எங்கே அபிமன்யு? அவனை உடனே நான் பார்க்கா விட்டால், நானும் இறந்து விடுவேன்.''

இவ்வாறு அர்ஜுனன் கதறியபோது, தர்மபுத்திரரோ, அர்ஜுனனின் மற்ற சகோதரர்களோ ஒரு வார்த்தையும் பேசவில்லை. அர்ஜுனன் துணுக்குற்றான். அபிமன்யு இறந்து விட்டான் என்பதை அவன் உணர்ந்தான்.

தர்மபுத்திரரைப் பார்த்து அர்ஜுனன், ''நீங்களும், பீமனும், த்ருஷ்டத்யும்னனும், சாத்யகியும் இருக்கும் பொழுது, அபிமன்யுவை எவ்வாறு கௌரவர்கள் கொன்றார்கள்? அபிமன்யுவை அவர்கள் கொல்லும் போது நீங்கள் எப்படிப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்? அவன் இறந்து விட்டான் என்பதை உணர்ந்தும் என் மனம் வெடிக்காமல் இருக்கிறதே? என் மனைவி சுபத்திரைக்கு நான் என்ன சமாதானம் சொல்வேன்? அபிமன்யுவின் மனைவிக்கு என்ன ஆறுதல் கூறுவேன்?'' என்று அழுது கொண்டே பேசினான்.

பாண்டவர்கள் யாரும் பதில் சொல்லாத நிலையில், அர்ஜுனனைப் பார்த்து கிருஷ்ணர் சொன்னார்: ''யுத்தத்தில் பின்வாங்காத வீரன் எவனுக்குமே வாழ்வின் முடிவுக்கு இதுதான் வழி. பராக்கிரமசாலிகளுக்கு மரணம் யுத்த களத்தில்தான். ஆயுதத்தினாலேயே வாழும் க்ஷத்ரியன், ஆயுதத்தினாலேயே வீழ்கிறான். வீரர்கள் விரும்பும் மரணமும் இதுதான். அப்படிப்பட்ட மரணத்தை அபிமன்யு தழுவியிருக்கிறான். இதில் நீ வருந்தக் கூடாது. நீ மேலும் துன்பத்திலேயே உழன்றால், உன்னுடைய சகோதரர்கள், உனக்காகப் போரிட வந்திருக்கும் அரசர்கள், உன்னுடைய நண்பர்கள், எல்லோரும் மனச்சோர்வு எய்துவார்கள். அவர்கள் எல்லோருக்கும் இப்பொழுது தைரியம் தரக்கூடியவன் நீ ஒருவன்தான். அப்படிப்பட்ட நீயே விரக்தியுற்றால், நமது படையே ஊக்கத்தை இழந்து விடும். ஆகையால், உன்னுடைய வருத்தத்தை அடக்கிக் கொண்டு, யுத்தத்தில் முனைவாயாக!''

இப்படிக் கிருஷ்ணர் கூறிய பிறகு, அர்ஜுனன் தனது சகோதரர்களையும் மற்ற அரசர்களையும் கடிந்து பேசினான். ''நீங்கள் அனைவரும் இருக்கும்பொழுது அபிமன்யு இறந்தது எவ்வாறு? நீங்கள் எல்லோரும் பெரிய வீரர்கள் என்று நம்பித்தானே உங்கள் பொறுப்பில் அபிமன்யுவை நான் விட்டுச் சென்றேன். என்னுடைய சகோதரர்களும், மற்ற அரசர்களும் வீரர்கள் அல்ல என்று அறிந்திருந்தால், நான் அபிமன்யுவை விட்டுச் சென்றிருக்க மாட்டேனே? இப்பொழுது அபிமன்யு இறந்ததால் ஒரு விஷயம் புலனாகிறது. நீங்கள் அனைவரும் வீரமற்றவர்கள்; பராக்கிரமம் அற்றவர்கள். உங்களைச் சொல்லியும் பயனில்லை. வலிமையற்றவர்களும், கோழைகளுமான உங்களையெல்லாம் நம்பி, அபிமன்யுவை விட்டுச் சென்றது என்னுடைய தவறு. என்னைத்தான் நான் நொந்து கொள்ள வேண்டும். ஆனால், அபிமன்யுவைக் காப்பாற்ற முடியாத உங்களுக்கு, கவசங்கள் ஏன்? அம்புகள் ஏன்? இவையெல்லாம் உங்களுக்கு அலங்காரப் பொருட்களே தவிர, ஆயுதங்கள் அல்ல. உங்கள் வாய், வார்த்தைகளைக் கொட்டுவதற்கு அருகதை உள்ளதே தவிர, மற்ற எதற்கும் பயனுடையது அல்ல.''

இவ்வாறு அர்ஜுனன் கோபமுற்று எல்லோரையும் நிந்தித்துப் பேசியபோது, தர்மபுத்திரர் அவனை நெருங்கினார்.

**(தொடரும்)**

# குற்றங்களை குறைக்குமா சிங்கப்படை?



தமிழ்நாட்டில் குதிரைப்படை போலீஸ் என்று ஒரு பிரிவு இருக்கிறது. 'மெரினா பீச்'சுக்கு சென்றால் அங்கே சில காவலர்கள் வாட்டசாட்டமான குதிரையில் அங்குமிங்கும் உலவி கொண்டிருப் பார்கள். சிலர் அந்த குதிரை பக்கத்தில் போய் செல்ஃபி எடுத்துக் கொள்வார்கள். ஆனால் அந்த குதிரைப் படையை வைத்து, தமிழ்நாடு காவல்துறை இதுவரை சாதித்தது என்னவென்று கேட்டால் யாரிடமும் எந்த தகவலும் கிடை யாது. அவ்வப்போது பேரணிகள், அணிவகுப்புகளில் அந்தப் படை இடம்பெறும். அவ்வளவுதான்.

அதே போல்தான் இப்போது புதிதாக ஒரு சிங்கப்படை வர இருக்கிறது. ஏற்கெனவே பெண்கள் பாதுகாப்பிற்கென்று பல தனிப் பிரிவுகள், காவலன் ஆப், எஸ்.ஓ.எஸ். பட்டன், தனி ஹெல்ப்லைன் வசதி- என்று பல்வேறு பாதுகாப்பு வசதிகள் இருந்து வருகின்றன. கூடுதலாக ஒரு சிங்கப்படை வந்து விட்டால் மட்டும் பெண்களுக்கு பாதுகாப்பு வந்து விடுமா என்பது மில்லியன் டாலர் கேள்வி.

கோடிக்கணக்கான மனிதர்கள் வாழும் இடத்தில், எந்த அரசாலும் குற்றங்களை முழுமையாகத் தடுத்து நிறுத்தி விட முடியாது. 2011-ல் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும், 'இங்கிருந்த ரௌடிகள், செயின் பறிப்பு திருடர்கள் எல்லாம் ஆந்திராவுக்கு ஓடி விட்டார்கள்' என்று வீராப்பாகப் பேசினார். அதன் பிறகும் அவர் ஆட்சியில் குற்றங்கள் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருந்தன. 'சிங்கப் பெண்' என்று வர்ணிக்கப் பட்டவரின் ஆட்சியிலேயே பாலியல் குற்றங்களை முழுமை யாக தடுத்து விட முடியவில்லை. எனவே சில நூறு சிங்கப்படை காவலர்களை நியமித்து விட்டால் தமிழகத்தில் பாலியல் குற்றங்கள் நின்றுவிடும் என்று நம்பினால் அது அறியாமையே.

பாலியல் குற்றங்கள், கள்ள உறவு மோதல்கள் உள்ளிட்டவை மனிதர்களின் மனதில் வக்கிரம் இருக்கும் வரையில், சமூகத்தில் இருந்து கொண்டுதான் இருக்கும். தூத்துக்குடி மாவட்டத்தில் காலைக்கடன் கழிக்கச் சென்ற பள்ளிச் சிறுமி, பாலியல் பலாத் காரத்துக்கு ஆளாகி கொலை செய்யப்படுகிறாள். அங்கு ஒரு தனிமனிதனின் வக்கிரம் ஒரு குற்றமாக உருவெடுத்தது. அது போன்ற குற்றங்களைத் தடுக்க காலைக்கடன் முடிக்க செல்லும் பெண்களுடன் எல்லாம், ஒரு சிங்கப்படை போலீஸ் பாதுகாப்பிற்குப் போக முடி யுமா?

சென்னையில் ஒரு இலங்கைத் தமிழ் இளம்பெண் நள்ளிரவு நேரத்தில் ஒரு பாரில் குடித்து விட்டு நடனமாடுகிறார். அங்கு ஒரு தகராறு ஏற்பட்டு, அந்தப் பெண் டூவீலரில் புறப்பட்டு செல்லும்போது, காரால் இடிக்கப் பட்டு கொல்லப்படுகிறாள். இது போன்ற மரணத்தைத் தடுக்க, பாரில் குடிக்கப் போகும் ஒவ்வொரு பெண்ணுடனும் ஒரு சிங்கப்படை போலீஸ் செல்ல முடியுமா?

ஒரு பாலியல் குற்றம் நடந்து விட்டால் உடனே எந்த சிபாரிசுகளுக்கும் இடம் தராமல், கறாராக தவறு செய்தவர்கள் மீது துரிதமாக நடவடிக்கை எடுத்து, அந்த வழக்கில் மிகத் துரிதமாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து, தவறு செய் தவர்களுக்கு வெகு சீக்கிரம் தண்டனை வாங்கித் தருவது ஓரளவு குற்றங்களை குறைக்க உதவும். தூத்துக்குடி +2 மாணவி கொலை வழக்கில் 76 நாட்களில் குற்றவாளிக்கு இரட்டை தூக்கு தண்டனை வழங்கப்பட்டிருக் கிறது. இதுபோன்ற விரைவான தீர்ப்புகளை காவல்துறை பெறுவது, குற்றம் செய்ய நினைப் பவர்களுக்கு ஒரு பயத்தை ஏற்படுத்தும். அதை போலீஸார் ஒழுங்காக செய்தாலே போது மானது. மேலும் ஆபத்து என்று ஃபோன் வரும்போது உடனடியாக அதை மதித்து, போலீஸார் அங்கு

விரைந்து செல்வதும் குற்றங்களைத் தடுக்க உதவும்.

பெண்கள் மீதான குற்றங்கள் அதிகரிப்பதற்கு, சமூகத்தில் எளிதாக கிடைக்கும் போதைப் பொருள்களும் ஒரு முக்கிய காரணம். சாதாரண நிலையில் இருக்கும் மனிதனை விட போதையில் இருக்கும் ஒருவன் நிதானம் இழந்து, எதிர் விளைவுகளைப் பற்றி கவலையில்லாமல் குற்றத்தில் ஈடுபடுகிறான். எனவே சட்ட விரோத போதை பொருட்களை ஒழிப்பது பாலியல் குற்றங்களை வெகுவாகக் குறைக்கும்.

'பெண்கள் மீதான பாலியல் குற்றங்களுக்கு அரசும், அதன் தலைமையுமே பொறுப்பு' என்று கடந்த ஆறு மாதங்களாக தி.மு.க. மீது குற்றச்சாட்டுகளை வைத்து வந்த விஜய்க்கு தற்போது அவரது ஆட்சியில், அவரது பேச்சே அவருக்கு எதிராக அணிவகுத்து வரும் அபாயம் இருக்கிறது. பெண்களுக்கு எதிராக குற்றம் நடக்கும் போதெல்லாம் 'விஜய் தலைமையிலான ஆட்சியிலும் பெண்களுக்கு பாதுகாப்பில்லை' என்ற விமர்சனம்தான் வரும்.

பெண்கள் மீதான குற்றங்கள் குறைய சமூகத்தில் ஒரு நல்ல மாற்றம் வர வேண்டும். பெற்றோர் தம் ஆண் குழந்தைகளுக்கு 'பெண்களை எப்படி பார்க்க வேண்டும்; அணுக வேண்டும்' என்று இளம் வயதிலேயே பயிற்றுவிக்க வேண்டும். அந்த வழக்கம் பெரும்பாலான பெற்றோர்களிடம் இல்லை. ஒரு காலத்தில் மாணவர்களை நல்லொழுக்கத்தில் வளர்க்க ஆசிரியர்கள் பெரிதும் உதவினார்கள். பெற்றோரும் 'கண்ணை மட்டும் விட்டுட்டு எப்படி வேணாலும் அடிங்க' என்று ஆசிரியர்களிடம் தன் பிள்ளைகளை ஒப்படைப்பார்கள். ஆனால் இன்றைக்கு மாணவனை கண்டித்த ஆசிரியை சென்னையில் கத்திக்குத்து வாங்கியதை பார்க்கிறோம். பெற்றோரும் 'என் குழந்தையை ஏன் அடித்தாய்?' என்று ஆசிரியரிடம் பாய்வதை அடிக்கடி பார்க்கிறோம்.

எனவே ஆசிரியர்கள் மாணவர்களின் நல்லொழுக்கப்படுத்தும் முயற்சியை, கடந்த பல ஆண்டுகளாகவே கைவிட்டு விட்டார்கள்.

இன்று அத்தனை இளைஞர்கள் கையிலும் நவீன அலைபேசி இருக்கிறது. அதற்குள் அத்தனை ஆபாசங்கள், வக்கிரங்கள் மலை மலையாக குவிந்து கிடக்கின்றன. அவற்றில் இருந்தெல்லாம் இளைஞர்களை விடுவித்து, அவர்களை நல்லொழுக்கத்தில் வளர்த்தெடுக்க வேண்டியது இந்த சமூகத்தின் பொறுப்பாக இருக்கிறது. இதையெல்லாம் மாற்றாமல் வெறும் ஒரு சிங்கப்படை அமைத்தால் மட்டும் தமிழ்நாட்டில் பாலியல் குற்றங்கள் குறைந்து விடாது.

ஒரு புது சீருடையுடன் மெரினா பீச், மால், மகளிர் கல்லூரி- உள்ளிட்ட இடங்களில் இந்த பெண் போலீஸார் உலா வரலாம். அவர்கள் அருகில் நின்று பலர் செல்ஃபி அல்லது ரீல்ஸ் எடுத்து சமூக வலைதளங்களில் பகிரலாம். ஆனால் இதைத் தாண்டி, எங்கோ ஒரு கிராமத்தில், ஏதோ ஒரு பெண்ணுக்கு தரப்படும் பாலியல் தொல்லையை இந்த சிங்கப் படையால் எப்படி தடுக்க முடியும்? இந்தக் கட்டுரை எழுதப்படும் நேரத்தில் ஸ்ரீவைகுண்டம் அருகே த.வெ.க. நிர்வாகிகள் இருவர், ஒரு இளம் பெண்ணை வேலை வாங்கித் தருவதாக கூறி ஏமாற்றி கடத்திச் சென்று, கூட்டு பாலியல் வன்முறையில் ஈடுபட்ட செய்தி வெளியாகி இருக்கிறது. இப்படி தவெ.க.வினரே பாலியல் குற்றங்களில் ஈடுபடுவதை சிங்கப் பெண் படை எப்படி முன்கூட்டி தடுக்க முடியும்?

இதுவரை இருக்கும் போலீஸார் எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தாண்டி, சிங்கப் படை போலீஸார் புதிதாக என்னென்ன முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை எடுத்து, பாலியல் குற்றங்களை குறைக்கப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



**– எஸ்.ஜே.இதயா**

## காவலர் பற்றாக்குறை!

**2021** சட்டசபையில் வாசிக்கப்பட்ட முதலமைச்சரின் கொள்கை குறிப்புப்படி தமிழ்நாட்டிலுள்ள மொத்த போலீஸாரின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சத்து 33 ஆயிரம். அதில் பெண் போலீஸாரின் எண்ணிக்கை சுமார் 25 ஆயிரம் மட்டுமே. இன்றைக்கு தமிழக மக்கள் தொகை சுமார் 8 கோடி என்றால், அதில் சுமார் 4 கோடி பெண்கள் இருப்பார்கள். மொத்த 25 ஆயிரம் பெண் போலீஸாருமே சிங்கப்படை போலீஸில் இணைந்தால் கூட நாலு கோடி பெண்களுக்கு அவர்களால் பாதுகாப்பு தர முடியுமா என்பது முக்கியமான கேள்வி. மேலும் ஏற்கெனவே வெவ்வேறு காவல் பிரிவுகளில் இயங்கிக் கொண்டிருக்கும் பெண் போலீஸாரை சிங்கப்படையில் இணைப்பது, ஏற்கெனவே போதுமான ஆட்கள் இல்லாமல் திணறிக் கொண்டிருக்கும் காவல் பிரிவுகளை மேலும் பலவீனப்படுத்தும்.

இது குறித்து காவல்துறை உயரதிகாரி ஒருவரிடம் பேசியபோது ''இந்த சிங்கப்படைக்காக எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை. புதிதாக எந்த கட்டடமும் கட்டப்படவில்லை. புதிதாக எந்த வாகனமும் வாங்கப்படவில்லை. புதிதாக நியமனங்களும் நடக்கவில்லை. ஏற்கனவே வருடத்திற்கு வருடம் மக்கள் தொகை ஏறிக் கொண்டே போகும் நிலையில், காவலர்களின் எண்ணிக்கை கூட்டப்படாமலேயே இருப்பதால் காவல் நிலையங்களில் பணிச் சுமை அதிகரித்து, காவலர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர். இந்த நிலையில் மேலும் காவல் நிலையங்களில் இருந்து ஆட்களை பிரித்தெடுத்து, புதுப் படைகளை அமைத்தால், காவல் நிலையங்களின் செயல்பாடுகள் மேலும் பலவீனப்படும்'' என்றார் அவர்.

**ஜன்னல் வழியே:**

# கடவுளும் கட்டண தரிசனமும்

**– துர்வாசர்**

தமிழ்நாட்டு கோவில்களில் நடக்கும் வி.ஐ.பி. தரிசனங்கள் தவறானவை, பாரபட்சமானவை என உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான கோவில்கள் ஹிந்து சமய அறநிலையத்துறையின் கீழ்தான் உள்ளன. இப்படி கோவில்களில் உள்ள கடவுள்களை தரிசனம் செய்வதற்கு, ஹிந்து சமய அறநிலையத் துறை கட்டணங்களை நிர்ணயித்து வசூல் வேட்டை நடத்துகிறது. இலவச தரிசனங்களும் எல்லா கோவில்களிலும் உள்ளன.

ஆனால் இந்த இலவச தரிசன வரிசை ஆமை ஊர்வது போல் ஊர்ந்து செல்லும். திருப்பதி போன்ற பிரபலமான கோவில்களில் கோவிலைச் சுற்றிலும் பிரம்மாண்டமான தரிசனக் கூண்டுகளை அமைத்து, அதில் இலவச தரிசனத்திற்கு வரும் பக்தர்களை முறைப்படுத்தி அடைத்து வருகின்றனர். சில சமயங்களில் இந்த இலவச தரிசன கூண்டுகள் திறக்கப்படுவதற்கு பத்துப், பனிரெண்டு மணி நேரங்கள் கூட ஆகின்றன.

ஏறத்தாழ தமிழ்நாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற கோவில்களான திருச்செந்தூர், பழனி, திருத்தணி, திருவண்ணாமலை, மதுரை, ஸ்ரீரங்கம் போன்ற கோவில்களிலும், மைல் கணக்காக நீளும் வரிசைகளில் நின்றுதான் பொது தரிசன பக்தர்கள் சாமி கும்பிட முடியும். ஆனால் 50, 100 ரூபாய் கொடுத்து, சிறப்பு தரிசனம் என்ற பேரில் அதே கடவுளை சீக்கிரமாகத் தரிசனம் செய்து விடலாம். இப்போது இந்தக் கட்டண தரிசனமுறை இல்லாத கோவில்களே இல்லை என்ற நிலை தமிழ்நாட்டில்.

இந்தக் கட்டண தரிசன முறையைத் தமிழ்நாட்டில் கண்டு பிடித்தவர்கள் தி.மு.க.வினர்தான். 1967 - ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோதுதான் இந்தக் கட்டண தரிசன முறை தமிழகக் கோவில்களில் கொண்டு வரப்பட்டது. இப்போது இந்த கட்டண தரிசனம், கட்டண தரிசன டிக்கெட்களில் ஊழல் செய்யும் அளவுக்கு பிரபலமாக உள்ளது. 1967 - ல் இந்தக் கட்டண தரிசனமுறை அமல்படுத்தப்பட்டபோது, கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காக கொண்டு வரப்படுவதாகக் காரணம் சொல்லப்பட்டது. காலப்போக்கில் இது நிரந்தரமாகி விட்டது. 'கடவுளைப் பார்க்க, சாமியைப் பார்க்க கட்டணமா' என்று யாரும் நினைப்பதில்லை.

இன்றைய மத்திய தர வர்க்கத்தினருக்கு 50, 100 என்பது பெரிய தொகையல்ல. பொது தரிசனத்தில் நின்று நேரத்தைச் செலவழிக்காமல், ஒரு வி.ஐ.பி. போல் முன்னுரிமை பெற்று சீக்கிரமாக தரிசனம் செய்வதையே பலரும் விரும்புகின்றனர். சமீபத்தில் திருச்செந்தூர் கோவிலுக்குச் சென்ற அறநிலையத் துறை அமைச்சர், தன்னை யாரென்று காட்டிக் கொள்ளாமல், அங்கு பணம் வாங்கிக் கொண்டு பக்தர்களுக்கு தரிசனம் செய்து வைக்கும் ஊழியர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துள்ளார். வருஷம் 365 நாளும் அமைச்சர் கோவிலில் நின்று, பண வசூல் செய்யும் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சாத்தியமா?

திருச்செந்தூர், பழனி போன்ற பெரிய கோவில்களில், அர்ச்சகர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள், 1,000, 2,000 என்று பணம் வாங்கிக் கொண்டு அந்த பக்தர்களை மூலஸ்தானம் வரை அழைத்துச் சென்று தரிசனம் செய்து வைக்கின்றனர். கடவுளை வைத்து பட்டவர்த்தனமாக வியாபாரம் நடக்கிறது. இதை அந்தக் கடவுளும் சாட்சி பூதமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். எல்லாம் கலி காலம்.

1959 - 60 களில் கூட கோவில்களில் கட்டண தரிசன முறை இல்லை. 1967 - க்குப் பிறகுதான், கோவில் நிர்வாகம் மூலமாகவே அர்ச்சனை கட்டணம், சிறப்பு தரிசனம் கட்டணம் போன்றவை அனுமதிக்கப்பட்டு, இப்போது முறைகேடான மோசமான வழக்கமும் ஏற்பட்டுள்ளது. இது இன்று பெரிய தொழில் போல் வளர்ந்து விஸ்வரூபமெடுத்து நிற்கிறது. கோவில் நகரங்களில் பக்தர்கள் ரயில், பஸ்களை விட்டு இறங்கும் போதே, அர்ச்சகர்களும், கோவில் ஊழியர்களும் 'தரிசனம் செய்து வைக்கிறோம்' என்று பேரம் பேசி பட்டவர்த்தனமாக வசூல் வேட்டை நடத்துகின்றனர். கோவில்கள் கமர்ஷியலானதன் விளைவுதான் இது . கடவுளையும் வியாபார காசாக்கி விட்டான் மனிதன். இந்த உலகத்தில் எதுதான் வியாபாரமாகவில்லை, அணு ஆயுதங்கள் முதல் சகலமும் விற்கப்படுகின்றன. கடவுளை மட்டும் விட்டு வைப்பார்களா! ●

# “பேடி கை வாளொக்கும்!”

அண்மையில் மின்வாரியத்தில் மிகப் பெரிய திருட்டு நடந்திருக்கிறது!

மின்வாரியம் தமிழ்நாடு அரசின் மிகப் பெரிய துறை. தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம் போல், ஆவின் நிறுவனம் போல் இழப்பில் இயங்கும் துறை! அளவுக்கு மிகுதியாக, அரசையே மூழ்கடிக்கும் அளவு ஊழல் புழுக்கள் நெளியும் துறை!

தமிழ்நாட்டின் மின் தேவையில், ஐந்தில் ஒரு பங்கு தேவைக்குத்தான் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. நான்கு பங்கு மின்சாரம் மைய அரசுத் தொகுப்பிலிருந்து வாங்கப்படுகிறது. குறிப்பிட்ட அளவுக்குத் தனியாரிடமிருந்தும் வாங்கப்படுகிறது!

தனியாரிடமிருந்து வாங்குவது ஆட்சியில் இருப்பவர்களும், உயர்மட்டப் பொறியாளர்களும் ஊதிப் பெருப்பதற்காகவே! அதானிகள் வைத்ததுதான் விலை. அரசுத் துறை அதற்கு இசைவளிப்பது, அந்தக் கொள்ளையில் தொடைப் பங்கு தங்களுக்கு வருவதாலேதான்!

மின்மாற்றிகள் போன்றவற்றைக் கொள்முதல் செய்வதில், ஏழு இலட்ச ரூபாய்க்கு வாங்க வேண்டிய ஒரு மின்மாற்றிக்கு பதிமூன்று இலட்ச ரூபாய்க்குக் கணக்கெழுதி, அதில் அடித்த தொகை ரூபாய் நானூறு கோடி என்பது அவர்களுக்கு மிகவும் சிறு தொகை. அது மந்திரியின் கைச் செலவுக்கு!

பெரிய ஊழல், அனல் மின் நிலையங்களுக்கு அயல்நாடுகளில் வாங்கும் நிலக்கரியில்தான் இருக்கிறது! தரக்குறைவான நிலக்கரிக்கு தரம் உயர்ந்த நிலக்கரியின் விலையைக் கொடுப்பார்கள்! இவ்வளவு கள்ளப் பணத்தையும் வைப்பதற்குப் பீரோக்களோ, பெட்டகங்களோ போதா! அறைகளில் நீள நாற்காலிகளைப் போட்டுக் கரையான் மருந்தை அடித்துவிட்டு, அடுக்கி வைக்க வேண்டியதுதான்!

இந்தக் கலையில் கைதேர்ந்தவர் செந்தில் பாலாஜி! அதனால்தான் அவருடைய திறமையை உச்சி மேல் வைத்துப் போற்றிச் சிறையில் கூட அவரை மந்திரியாக்கினார் ஸ்டாலின்.

‘‘ஸ்டாலின் வரப் போறாரு; விடியல் தரப் போறாரு’’ என்னும் முழக்கம் வேறு! விடியல் அவர் குடும்பத்திற்கா? நாட்டுக்கா? இப்போது ஆட்சி மாறிய சில நாட்களிலே மிகப் பெரிய திருட்டு வெளி வந்திருக்கிறது.

நிலக்கரி வாங்கிய வரவு

**மந்திரி, தலைமைப் பொறியாளர் மட்டத்தில் திருடர்கள் இருப்பதால்தான், ஆதாரங்களை அழிக்கிற மிகப் பெரிய வேலை வெற்றிகரமாகச் செய்யப்படுகிறது!**

செலவுகள், தனியாரிடம் செய்து கொண்ட மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்கள் என்று அனைத்து வரவு செலவுகளிலும் அடித்த, கொள்ளைக்கான சான்றாதாரங்களான பதினெட்டு ‘ஹார்ட் டிஸ்க்’குகளும் காணாமல் போய் விட்டன! அவை இறக்கை முளைத்தா பறந்து போகும்! திருடப் பட்டு விட்டன!

கொள்ளைக்கான சான்றாதாரங்கள் அனைத்தையும் களவாடி விட்டால், வழக்குகளிலிருந்து தப்பி விடலாம் என்பது அந்தத் துறையை நிருவகித்த மந்திரி மற்றும் பொறியாளர்களின் கணக்காக இருக்கலாம்!



இவ்வளவு பெரிய தரவுகளின் திருட்டு, யாருக்கு நன்மை தருவதாக இருக்கும்? தலைமை எழுத்தரோ, இளம் பொறியாளரோ இந்தத் தரவுத் திருட்டால் நன்மை அடைகிறவர்களில்லை!

மந்திரி, தலைமைப் பொறியாளர் மட்டத்தில் திருடர்கள் இருப்பதால்தான், ஆதாரங்களை அழிக்கிற மிகப் பெரிய வேலை வெற்றிகரமாகச் செய்யப்படுகிறது! அவர்களுக்குக் கீழே வேலை பார்த்த, அந்தத் திருட்டுகளில் பங்கு கொண்ட அதிகாரிகளை வைத்துக் கொண்டுதான், இது போன்ற அழிவு வேலைகளைச் செய்திருக்க முடியும்!

தி.மு.க. மந்திரிக்குப் பங்காளிகளான அந்த அதிகாரிகளை, காவல் வளையத்திற்குள் கொண்டு வர வேண்டும்; குண்டர் சட்டத்தை எல்லாம் தன்னுடைய அரசியல் எதிரிகளுக்குத்தான் பயன்படுத்துவது என்பதை விட்டு விட்டு, இது போன்ற அதிகாரிகளுக்கு எதிராகப் பயன்படுத்த வேண்டும்.

வேசிகளைக் காவல்துறை கைது செய்து நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்கையில், அவர்கள் கூட முகங்களை மூடிக் கொள்கிறார்கள்! கேவலமான தொழிலுக்கிடையே சமூக இழிவு குறித்த வெட்கம், அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் மீதமிருக்கிறது.

இந்த அதிகாரிகள், வேசிகளுக்கு உள்ள நாணம் கூட இல்லாதவர்கள்! இவர்களைக் கைது செய்து தெரு வழியே நடத்திச் செல்ல வேண்டும்!

இந்த விஜய் அரசு ஒரு ‘சொதசொதத்த’ அரசு! எந்த ஒன்றிலும் தெளிவில்லை; எதிலும் உறுதியான நடவடிக்கை இல்லை! ஓநாய்களைக் கட்டுக்குள்

**- பழ.கருப்பையா**

கொண்டு வரக் கூர்மையும், திட நடவடிக்கையும் வேண்டும்.

உன்னால் முடியாவிட்டால், மையப் புலனாய்வுத் துறையின் உதவியை நாடு! மனிதனை அடிக்கும் புலிகளைத் தப்ப விட்டு விடாதே!

கல்குவாரிகளை ஆய்வு செய்யப் போகிறார் ஓர் அமைச்சர்! எல்லாவற்றிலும் முறைகேடுகள்! அந்தக் குவாரிகளை மூடக் கட்டளை இடுகிறார்! போதுமா? இதுவரை அங்கே ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்தவர்கள் யார்? குத்தகைத் தொகை எவ்வளவு? குத்தகை மீறல்களின் அளவென்ன? உடந்தையாக இருந்த அதிகாரிகள் யார் யார்?

தவறுகள், கொள்ளைகள் நடந்திருக்கின்றன என்பதற்கான சான்றுகள் கிடைத்துத்தானே, அவற்றை மூடக் கட்டளை இட்டீர்கள்! அவை போதும், அவர்களைக் கைது செய்வதற்கு! இருநூறு குத்தகைதாரர்கள்;

**இருநூறு குத்தகைதாரர்கள்; அவற்றிற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் என நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டால், தமிழ்நாடு அரசின் அதிகார வர்க்கம் மிரண்டு ஒழுங்குக்கு வந்துவிடும்!**

அவற்றிற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் என நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டால், தமிழ்நாடு அரசின் அதிகார வர்க்கம் மிரண்டு ஒழுங்குக்கு வந்துவிடும்!

ஸ்டாலின்கள், செந்தில் பாலாஜிகள், கே.என்.நேருகள், பொன்முடிகள் போன்றவர்களால் மட்டுமே நாட்டை நாசமாக்கி விட முடியாது! அதற்கு அதிகார வர்க்கத்தின் துணை வேண்டும்!

நெருக்கடி நிலையைத்தான் அறிவித்தார் இந்திரா! அது குடியாட்சிக் குரல்வளை நெரிப்பு என்பது ஒருபுறமிருக்கட்டும்! அடுத்த மாதமில்லை, அடுத்த நாளே தொடர் வண்டிகள் நேரத்திற்கு வந்தன; அரசு அலுவலகங்கள் நேரப்படி இயங்கின; மேஜைக்கு அடியில் கை நீட்டும் பழக்கம் ஒய்ந்தது; இந்திராவின் ஆணை நீதிமன்றங்களைக் கூட ஒரு வழியாய் ஆக்கி விட்டது!

இந்த உடனடி எதிர் விளைவுக்குக் காரணம், அரியணையில் இருந்தவர் இந்திரா காந்தி என்கிற இரும்புப் பெண்மணி!

இருப்பது வாளாக இருப்பினும், பேடி கையில் இருந்தால், அந்த வாளால் என்ன பயன் என்று கேட்பான் வள்ளுவன்!

'பேடி கை வாளொக்கும்' என்பது குறள்!

அந்த நிலையில்தான் தமிழ்நாடு இருக்கிறது!

**(வளரும்)**




ஸ்ரீஹரி: ஓம் நமோ பகவதே ப்ரேமிகேந்திராய!

**ஸ்ரீ ஸாந்தீபனி குருகுலம் ஸ்ரீரங்கம் டிரஸ்ட்**

ஸ்ரீப்ரேமிக வேதாஸ்ரமம்,127,வடக்கு உத்திர வீதி, ஸ்ரீரங்கம் - 620006
போன்: 0431 - 4542299, செல்: 9444460079, 9841992022
மின்னஞ்சல்: srirangampadasalai@gmail.com

அன்புடையீர்,

பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கத்தில் "ஸ்ரீ ப்ரேமிக வேதாஸ்ரமம்" 127, வடக்கு உத்திர வீதி என்ற இடத்தில் ரிக், யஜூர் வேத பாடசாலை, மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, ஸ்ரீ ஸாந்தீபனி குருகுலம் ஸ்ரீரங்கம் அறக்கட்டளையின் சார்பில் நடந்து வருகின்றது. இந்தவேத கைங்கர்யத்தை உங்களைப் போன்ற நல்ல உள்ளங்களின் ஆதரவுடன்தான் தொடர்ந்து நடத்த முடியும். அதனால் தாங்கள் முடிந்த அளவில் பொருளுதவி செய்து வேதநாராயணனின் பரிபூரண அருளுக்குப் பாத்திரர்கள் ஆகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| வேத பாடசாலையின் ஒரு நாள் செலவு | ரூ.7,500 |
| ஒரு மாத பராமரிப்பு செலவு | ரூ.2,00,000 |

பாடசாலை வங்கிக் கணக்கு விவரம்:கரூர் வைஸ்யா பேங்க், ஸ்ரீரங்கம்.

**SREE SANTHEEPANI GURUKULAM, A/c NO.1276155000016800, IFS CODE. KVBL 0001276.**

மேலே கொடுக்கப்பட்டுள்ள செலவு விவரம் தகவலுக்காக மட்டுமே. அன்பர்கள் அவரவர் விரும்பிய / இயன்ற தொகையினை செலுத்தி இந்தக் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளலாம்.

நன்கொடைகளை காசோலையாகவோ, மணி ஆர்டர் மூலமாகவோ, மின்னணுப் பணபரிமாற்றம் மூலமோ செலுத்தலாம். தங்கள் பெயர், நக்ஷத்திரம், முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

நன்கொடையாளரின் குடும்பத்திற்கான சிறப்பு ப்ரார்த்தனை செய்து, அதன் ப்ரஸாதம் மற்றும் இரசீது அனுப்பி வைக்கப்படும்.




குறிப்பு: நன்கொடைகளுக்கு வருமான வரி சட்டப் பிரிவு 80-G ன்படி வரிச்சலுகை உண்டு.

- நிர்வாகிகள்

# வழக்குகளும், நீதிமன்றங்களும்



சில தினங்களுக்கு முன் டெல்லி உச்ச நீதிமன்றம், ‘உயர் நீதிமன்றங்கள் மூன்று மாதங்களுக்குள் தீர்ப்புகள் வெளியிட வேண்டும்’ என்று கூறியுள்ளது. நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் 4.81 கோடி வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்பதால், உச்ச நீதிமன்றம் இப்படிக் கடுமையான காலக்கெடுவை விதித்துள்ளது. இந்த 4.81 கோடி வழக்குகளையும் மூன்று மாதங்களுக்குள் முடிப்பது என்பது இயலாத விஷயம். ஆனால் உச்ச நீதிமன்றம் இப்படி வெளிப்படையாகக் கூறியிருப்பதன் மூலம், தேங்கிக் கிடக்கும் வழக்குகள் குறித்து தனது தீவிரமான அக்கறையை அது வெளிப்படுத்தியுள்ளது என்பது உண்மை.

இந்த 4.81 கோடி வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மட்டுமே தேங்கிக் கிடக்கும் சிவில் வழக்குகள் சுமார் 3.5 லட்சம். குற்றவியல் வழக்குகள் சுமார் 41,000. இவை தவிர, மாவட்ட நீதிமன்றங்கள், அதன் கீழமை நீதிமன்றங்களில் மட்டும், தமிழக அளவில் 10 லட்சத்திற்கும் அதிகமான வழக்குகள் தீர்ப்பு சொல்லப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. இந்த வழக்குகளில் பல, பத்தாண்டுக்கும் மேலாக நடந்து வந்தும் தீர்ப்பு கூறப்படாமல் உள்ளன. ‘தாமதமான நீதி, நீதி மறுக்கப்பட்டதற்குச் சமம்’ என்பார்கள். உரிய காலத்தில் கிடைக்காத தீர்ப்பு வந்தாலும் ஒன்றுதான், வராவிட்டாலும் ஒன்றுதான் என்பதே யதார்த்தம்.

இப்படி தீர்ப்புச் சொல்லப்படாத வழக்குகளால் பல தனிமனிதர்களின் வாழ்வும், குடும்பங்களின் வாழ்வும் சீர்குலைந்து கிடக்கின்றன. பெரும்பாலும் வழக்குப் போடுபவர்களும், வழக்கை எதிர்கொள்ள நேர்கிறவர்களும் பெரும் பணக்காரர்கள் அல்ல. சாதாரண நடுத்தர, ஏழை - எளிய மக்களே. இவர்கள், தங்கள் பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான், தங்கள் சக்திகளையும் மீறி பெரும் பொருட்செலவைச் செய்து கோர்ட் வாசல்களில் ஏறுகின்றனர். சிறு நிலத் தகராறு, கொடுக்கல் - வாங்கல் தகராறு போன்ற சில்லரைத் தகராறுகளுக்காக கோர்ட் படியேறி தங்கள் நேரத்தையும், பணத்தையும் இழந்து நிற்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன் மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட லோக் அதாலத் முறை அதிகப் பொருட்செலவு, கால விரயம் இவற்றைத் தடுத்து, எளிய முறையில் விரைந்து தீர்ப்புகளை அளிக்கிறது. ஆனால் இதை நாடுவோர் எதனாலோ அதிகமில்லை. தாலுகா, மாவட்ட உயர் நீதிமன்றங்களில் இந்த லோக் அதாலத்தினால் வழக்குகள் குறையவில்லை. நீதிமன்றங்கள் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளன. இதனால் வழக்குகள் தேக்கமடைவதைத் தடுக்க முடியவில்லை. ‘வாய்தாக்களால் வழக்குகள் இழுத்தடிக்கப்படுகின்றன. இது தவிர, நீண்ட கால கோடை விடுமுறை போன்ற காரணங்களாலும் விசாரணைகள் தாமதமாகின்றன. நீதிபதிகள், ஊழியர்கள் போதிய அளவில் இல்லாததும் வழக்குகள் தேக்கத்திற்கு ஒரு காரணம்.

உதாரணமாக, உயர் நீதிமன்றங்களில் அகில இந்திய அளவில் 300 நீதிபதிகளின் பதவிகள் காலியாக உள்ளன. அலஹாபாத், பஞ்சாப், ஹரியானா, டெல்லி, தெலுங்கானா, சென்னை உயர் நீதிமன்றங்களில் ஏராளமான காலியிடங்கள் உள்ளன. சென்னை உயர் நீதிமன்றத்தில் 75 நீதிபதிகள் இருக்க வேண்டும். இதில் 24 இடங்கள் காலியாக உள்ளன. சமீபத்தில்தான் கொலிஜியம் 19 நீதிபதிகளை நியமிக்கப் பரிந்துரை செய்துள்ளது.

நீதிமன்றங்களிலுள்ள பெரும்பாலான வழக்குகள், அரசுகளின் மெத்தனத்தால் தாக்கல் செய்ய நேர்ந்த வழக்குகள். இவை வருவாய்த் துறை அளவில் உரிய காலத்தில், பரிசீலிக்கப்பட்டு, நியாயமான தீர்வுகளை எட்டியிருந்தாலே பல வழக்குகள் நீதி மன்றங்களுக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது - என்கிறார்கள் சட்ட நிபுணர்கள். பெரும்பாலான வழக்குகள் அரசின் மீது போடப்பட்ட வழக்குகளே. அரசு அதிகாரிகள் நியாய உணர்வுடன், விரைந்து செயல்பட்டால் பல வழக்குகள் கோர்ட்டுகளுக்குச் சென்றே இருக்காது. எல்லாவற்றுக்கும் நீதிமன்றமே சரண் என்று நீதிமன்றங்களைச் சரணாகதி அடைவதுதான் இத்தனை கோடி வழக்குகளுக்கும் காரணம். பஞ்சாயத்து முறையில் தரப்படும் தீர்ப்புகள் தற்போது குறைந்து விட்டன. அதனால் எதற்கெடுத்தாலும் நீதிமன்றங்களை நாடும் போக்கு, கிராமப் பகுதிகளில் கூட சர்வசாதாரணமாகி விட்டன.



– சந்திரன்

# காலம் இது, காலம் இது மகனே

மலையைக் கெல்லி ஒரு சுண்டெலியைப் பிடித்திருக்கிறது பா.ஜ.க.. இதற்கு இத்தனை பாடு பட்டிருக்க வேண்டாம். ஏதோ ஒரு கூட்டணி என்று இதுவரை இயங்கி வந்த பா.ஜ.க., தனித்தியங்க வேண்டும் என்று விரும்பினார் அண்ணாமலை.

இந்த அணுகுமுறை இளைஞர்களையும், நடுநிலை வாக்காளர்களையும் கவர்ந்தது. அதனால் வாக்கு சதவிகிதம் உயர்ந்தது. அதே நேரம் தி.மு.க.வின் ஊழல் பட்டியலைத் தயாரித்து கவர்னரிடம் கொடுத்த அண்ணாமலை, அ.இ.அ.தி.மு.க.வின் ஊழல் பட்டியலும் தயார் என்றார். அங்கேதான் அண்ணாமலைக்கு எழுந்தது பிரச்னை.

திராவிடக் கட்சிகளின் ஊழல் ஆட்சிமுறையில் கொதித்துப் போன மக்கள், ஒரு மாற்றத்தை விரும்பினார்கள் என்பது அண்ணாமலைக்குப் புரிந்தது. மேலிடத்திற்குப் புரியவில்லை. இரண்டு திராவிடக் கட்சிகளையும் ஒரே நேரத்தில் எதிர்க்கக் கூடாது என்று பா.ஜ.க. தலைமைக்குத் தூபம் போடப் பட்டதால், அ.தி.மு.க.வுடன் அண்ணாமலை இணங்கி செயல்பட வேண்டும் என்று பா.ஜ.க. தலைமை விரும்பியது. மனம் ஒன்றாமல் அந்தக் கூட்டணியில் தொடர்ந்தார் அண்ணாமலை. அவரை அவமதிக்கும் விதமாக அ.இ.அ.தி.மு.க. நிர்பந்தித்தப்படி நயினார் நாகேந்திரன் பா.ஜ.க.வின் மாநில தலைவராக்கப்பட்டார். எந்தத் தேதியில் இந்தத் தலைமை மாறுதல் நடைபெற்றதோ, அதே தேதியில் பா.ஜ.க.வின் தோல்வி உறுதியானது. நல்லதோர் வீணை செய்த பா.ஜ.க. தேசிய தலைமை, கொஞ்சம் கூட கூச்சம் இல்லாமல் அதை நலங்கெடப் புழுதியில் வீசியது.



எங்கள் படைக்குத் தளபதி யார் என்பதை நிர்ணயம் செய்ய நீங்கள் யார் என்று, அ.இ.அ.தி.மு.க.வை பா.ஜ.க. கேட்கவில்லை. இது கட்சிக்காக பாடுபட்டுக் கொண்டிருந்த அண்ணாமலைக்கு இழைக்கப்பட்ட அவமானம்தான். அப்படியிருந்தும், தலைமைக்குக் கட்டுப்பட்ட படைவீரராகவே அண்ணாமலை பணியாற்றியது அவரது இக்கட்டு அல்லது பெருந்தன்மை.

உடனடியாக அண்ணாமலைக்கு கட்சியில் வேறு பதவி கொடுக்க முன்வராத பா.ஜ.க. தலைமை, இனி ஏதாவது செய்ய முன் வந்தாலும் அது அண்ணாமலையின் மன ரணத்திற்கு மருந்தாகாது. இனி ஒருவேளை அவருக்கு தேசியக் கட்டமைப்பில் ஒரு பதவி கொடுத்தாலோ, ராஜ்ய சபை உறுப்பினராக்கி மந்திரி பதவி கொடுத்தாலோ அதை அண்ணாமலை, அரை மனதுடன்தான் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். அவரைப் போன்ற தனித்தன்மை வாய்ந்தவர்கள் பெரிய குட்டையில் சின்ன மீனாக இருப்பதைவிட, சின்ன குட்டையில் பெரிய மீனாக இருப்பதையே விரும்புவார்கள்.



பா.ஜ.க.வின் புதிய மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் சாத்தூர் தொகுதியில் பரிதாபமாகத் தோற்றார். அப்போதும் கூட பா.ஜ.க. தலைமை, அண்ணாமலை மீது கடைக்கண் பார்வை வீசவில்லை. அண்ணாமலையை மாநிலத் தலைவராக மறுநியமனம் செய்ய முன்வரவில்லை. அதற்குள் த.வெ.க., அரசியல் களத்தில் எதிர்பாராதபடி தலைதூக்கியது. அப்போதுகூட அண்ணாமலை 'நான் இருந்திருந்தால்'... என்று இறுமாப்பு பேசவில்லை. எனினும் அண்ணாமலைக்கு தமிழக அரசியல் களத்தில் செல்வாக்கு தேய்ந்து விடவில்லை.

தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., த.வெ.க என்ற மூன்று கட்சிகளையும் விலக்கி வைக்கும் இளைஞர்களும், நடுத்தர வயதினரும் அண்ணாமலையை நிச்சயம் ஆதரிப்பார்கள் என்றே தோன்றுகிறது. மக்கள் விரும்பும் மாற்றம் ஆட்சியில் மட்டுமல்ல கட்சியிலும்தான். அண்ணாமலைதான் பிற கட்சிகளின் தில்லு முல்லுகளை, தகிடுதத்தங்களை மக்களுக்குப் புரியும் மொழியில் எடுத்துச் சொல்லக் கூடியவர்.

அவமானப்பட்டாலும், ஒதுக்கப்பட்டாலும் இதுவரை அண்ணாமலை, பா.ஜ.க. தேசிய தலைமையைப் பொதுவெளியில் விமர்சனம் செய்யவில்லை. பா.ஜ.க. படையின் விசுவாச வீரராகவே இருந்திருக்கிறார். இதுவரை திராவிடக் கட்சியினர் பா.ஜ.க. மீது ஒரு இனம் புரியாத வெறுப்பை சுமத்தியுள்ளனர். இனி பா.ஜ.க.வைத் தொடர்ந்தாலும், புதிய கட்சியைத் தொடங்கினாலும் அண்ணாமலையின் செல்வாக்கு சரியாது என்றே யூகிக்க முடிகிறது.

அண்ணாமலையை இழப்பது தமிழகத்தையே இழப்பது என்று பா.ஜ.க. புரிந்து கொள்ள வேண்டும். ''போகாதே போகாதே என் தம்பி'' என்று பா.ஜ.க. தேசிய தலைமை இப்போது சொல்ல முன்வந்தாலும், அண்ணாமலையின் நிலைப்பாடு இரண்டு திராவிடக் கட்சிகளும் வேண்டாம் என்பதாகவே இருக்கும். ஏற்கெனவே சூடுபட்டு விட்டதால் பா.ஜ.க. தலைமையும் அதற்கிணங்கலாம். எப்படியிருந்தாலும், 'காலம் இது, காலம் இது, காய் நகர்த்து மகனே' என்று அண்ணாமலையிடம் பாரதத்தாய் இப்போது சொல்கிறாளோ?



– ஆர்.நடராஜன்

# பொருளாதாரம் நலியும்

இந்தியாவில் பருவ மழை இவ்வருடம் சரியாகப் பெய்யாது என்று கணித்துள்ளனர். கடந்த 11 வருடங்களில் இந்த ஆண்டுதான் மிகக் குறைவான மழைப் பொழிவு இருக்குமாம். போதுமான மழை இல்லாததால், பொருளாதாரம் நலிவடையும் என்கிறார்கள் நிபுணர்கள்.

## த.வெ.க., இண்டி கூட்டணிக்கு வருமா?

தமிழக வெற்றிக் கழகம், காங்கிரஸ் கூட்டணியில் உள்ள இண்டி கூட்டணியில் சேருமா என்பது தெரியவில்லை. ஜூன் 8 - ஆம் தேதி டெல்லியில் இண்டி கூட்டணிக் கூட்டம் நடைபெறு கிறது.

## மமதாவின் மருமகனுக்கு அடி

மேற்கு வங்க முன்னாள் முதல்வர் மமதா பானர்ஜியின் மரு மகனும், எம்.பி.யுமான அபிஷேக் பானர்ஜி, போலி கையெழுத்து விஷயத்தில் சிக்கிக் கொண்டிருக் கிறார். ஸி.பி.ஐ. சம்மன் அனுப்பி யிருக்கிறது.

சோனார்பூரில் கொல்லப்பட்ட திரிணாமூல் காங்கிரஸ் தொண் டரின் வீட்டுக்கு, ஆறுதல் சொல்ல வந்த அபிஷேக்கை ஒரு கும்பல் மிரட்டி கல்லால் எறிந்தது. அப்போது அவர் ஹெல்மெட் அணிந்திருந்ததால், தலையில் காயம் படாமல் தப்பித்தார். அவரைப் பார்த்து 'திருடன், திருடன்' என்று கூச்சல் போட்டது.


ஹெல்மெட்டுடன் அபிஷேக் பானர்ஜி...

## பா.ஜ.க. எப்படி வெற்றி பெற்றது?

மே. வங்கத்தில் பா.ஜ.க. அமோகமாக வெற்றி பெற்றது எப்படி என்பதை திரிணாமூல் காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க., பா.ம.க., வி.சி.க., ம.தி.மு.க. முதலான கட்சிகள் ஆராய வேண்டும் என்ற சிந்தனை எழுந்துள்ளது.

## மமதாவை அலட்சியம் செய்த எம்.எல்.ஏ.க்கள்

மமதா பானர்ஜி, எம்.எல். ஏ.க்கள் கூட்டத்தைக் கூட்டினார். திரிணாமூல் காங்கிரஸின் 80 எம்.எல்.ஏ.க்களில் 20 பேர் மட்டுமே கூட்டத்திற்கு வந்திருந் தனர். உள்ளூர் பிரச்னைகளால் எம்.எல்.ஏ.க்கள் பலரால் கூட்டத் திற்கு வர முடியவில்லையாம்.

## அதானி குழுமத்திற்கு அடித்தது யோகம்

பொதுவாக அதானியை பா.ஜ.க.வுடன் தொடர்புபடுத்திப் பேசுவதுதான் வழக்கம். ஆனால் அதானி குழுமம் காங்கிரஸ் ஆட்சி செய்யும் கர்நாடகத்தில், பெரிய சுரங்கச் சாலைப் பாதைக் கான்ட்ராக்ட்டை எடுத்திருக்கிறது.


அதானி

பெங்களூருவில் அமைக்கப்படும் இரட்டை சுரங்கச் சாலை அமைக்கும் பணியை அதானி குழுமம் செய்யப் போகிறது.

## மேற்கு வங்கத் தொடர்பு

மேற்கு வங்கத்தில் பா.ஜ.க. மிகப் பெரிய வெற்றியை அடைந்துள்ளது. ஆர்.எஸ்.எஸ். ஸின் அகில பாரதிய பிரசார் பிரமுகரான சுனில் அம்பேகார், 'சுதந்திரப் போராட்டத்திற்கு முன்பே ஆர்.எஸ்.எஸ்., மேற்கு வங்கத்தில் தனது பணியைத் துவக்கியுள்ளது' என்பதைச் சுட்டிக் காட்டினார்.

## உள்ளாட்சித் தேர்தல்கள்

ஹிமாச்சலப் பிரதேசத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தல் களில், நாலில் மூன்று உள்ளாட்சிகளை பா.ஜ.க. கைப்பற்றியுள்ளது. மீதமுள்ள ஒன்றை காங்கிரஸ் கைப்பற்றி இருக்கிறது.

மண்டி, தர்மசாலா, சோலான் ஆகிய நகராட்சிகளை பா.ஜ.க. கைப்பற்றியுள்ளது. பாயாம்புர் நகராட்சி மட்டும் காங்கிரஸுக்குச் சென்றது.

## கடற்படைக்கு நீர்மூழ்கி கப்பல்

அடுத்த தலைமுறை நவீன நீர்மூழ்கிக் கப்பலைக் கட்டு வதற்காக, நிதியமைச்சகம் 70,000 கோடி ரூபாயை ஒதுக்கியிருக் கிறது.

## வந்தே மாதரம் சர்ச்சை

கேரள சட்டசபையில் ஐக்கிய ஜனநாயக முன்னணி அரசின் கொள்கைக் கூட்டத்தில் கலந்து கொண்ட கேரள ஆளுநர் ராஜேந்திர அர்லேகர், கூட்டத்தில் வந்தே மாதரம் பாடல் இசைக்கப்படாத தைச் சுட்டிக் காட்டினார்.

## முதியோர் ஜனத்தொகை

நாட்டில் முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வரு கிறது. இது இப்படியே தொடர்ந் தால் 2036 - ல் 230 மில்லியன் முதியோர் இந்தியாவில் இருப்பார் களாம்.

– டெல்லிவாலா


முதல்வர் விஜய்யுடன் அமைச்சர் டாக்டர் டி.கே.பிரபு...

# கனிமவள கொள்ளைகள் குறையுமா?

தமிழக வெற்றிக் கழக அரசிடம் மக்கள் நிறைய எதிர்பார்க்கின்றனர். குறிப்பாக - கனிம வளத்துறையில் நடந்து வரும் முறைகேடுகள் குறித்து பேசாதவர்கள் இல்லை. இயற்கை வளத்தைக் கொள்ளை அடிப்பவர்கள் மீதான அரசு நடவடிக்கை, கடந்த காலங்களில் பெரிதாக இல்லை என்ற குறையும் இருந்து வந்தது. த.வெ.க. அரசில் இயற்கை வளங்கள் துறை அமைச்சராக டாக்டர் டி.கே.பிரபு பொறுப்பு ஏற்றார். அவர் மே 22 - ஆம் தேதி பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பது: ''தமிழகம் முழுவதும் கனிம வளத் துறை சார்பில், 2000-க்கும் மேற்பட்ட கல்குவாரிகளில் அனுமதி அளிக்கப்பட்டு கற்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன. இந்தக் குவாரிகளில் அரசு அனுமதி அளித்த அளவுக்கு அதிகமாக கற்கள் வெட்டியெடுக்கப்படுவதாக, பல்வேறு புகார்கள் தொடர்ந்து வந்த வண்ணம் இருக்கின்றன.

''அதேபோல் மத்திய அரசின் சியா (SEIAA) கமிட்டி, கல் குவாரிகளில் எந்த அளவுக்கு கற்கள் எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக பல்வேறு விதிமுறைகளை அறிவித்துள்ளது. இந்த விதிமுறைகள் பல இடங்களில் மீறப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதேபோல் கல்குவாரிகளை கண்காணிக்கும் சேஃப்டி மைன்ஸ் எனப்படும் கண்காணிப்புக் குழுவினர், முறையாக கல்குவாரிகளை கண்காணிக்கவில்லை என்ற புகாரும் எழுந்துள்ளது.

இந்த நிலையில் தமிழகம் முழுவதும் இருக்கின்ற அனைத்து கல்குவாரிகளையும் அந்தந்த மாவட்ட கனிம வளத்துறையினர் கல்குவாரிகளில் ஆய்வு செய்து, அரசிடம் பெறப்பட்ட அனுமதி ஆணைப்படி கற்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும், நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக வெட்டி எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உடனடியாக ஆய்வு செய்து, அறிக்கை அளிக்க வேண்டும். மேலும் அரசு அனுமதியின்றி பல இடங்களில் சட்டவிரோதமாக கல்குவாரிகள் செயல்படுவதாகவும் புகார்கள் உள்ளன. இதையும் ஆய்வு செய்ய வேண்டும்'' என அமைச்சர் பிரபு உத்தரவிட்டிருந்தார். தமிழகம் முழுக்க ஆய்வுகள் நடந்தது.

தமிழகத்தில் இதுவரை 67 கல்குவாரிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. 2,000 கல்குவாரிகள் செயல்படும் நிலையில், விதிமீறிய இந்த 67 குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதியின்றி கனிம வளங்களை ஏற்றிச் சென்ற 469 லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக கனிமங்கள் எடுக்கப்பட்ட 78 இடங்கள் கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அமைச்சர் பிரபு நேரிடையாக தென்காசி, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஆய்வுகளை மேற்கொண்டார். மாநிலம் முழுவதும் உள்ள 431 கல்குவாரிகளை ஆய்வு செய்தனர். இதில் 155 குவாரிகளில் விதிமீறல் கண்டறியப்பட்டது. அதில் 67 குவாரிகள் தற்காலிகமாக மூடப்பட்டு, அபராத நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. முறைகேடுகள் கண்டறியப்பட்டு, மேலும் 88 கல்குவாரிகள் மீது மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கனிம வளத்துறையினரின் ஆய்வில் சேலம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில், பட்டா நிலத்தில் அனுமதியற்ற சுண்ணாம்புக்கல் அகழ்வு தொடர்பாக, தனித்தனியாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டத்தில் பட்டா நிலத்தில் சட்டவிரோத குவார்ட்ஸ் அகழ்வு கண்டறியப்பட்டுள்ளது. குற்றவியல் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. கனிம வளத்துறை கடுமையாக இருந்தாலும், குவாரிகளை நடத்துபவர்களுக்கு அரசு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட சுரங்கத் திட்டங்கள் மற்றும் குத்தகை நிபந்தனைகளை, அனைத்து கல்குவாரி குத்தகைதாரர்களும் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது.


சட்ட விரோத குவாரி...

இதற்கிடையில் இயற்கை வளத்துறை அமைச்சர் பிரபுவின் நடவடிக்கைகளை பலரும் பாராட்டுகின்றனர். கனிம வளத்துறையை அரசே முறையாக நடத்தினால் ஓர் அரசாங்கம் நடத்த தேவையான நிதியை பெறலாம் என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாக உள்ளது. இரு கழகங்களின் ஆட்சியில் இத்துறை மூலம் பெற்ற வருமானம், சட்டவிரோத வருமானம், விலை உயர்ந்த கார்களாக, மக்களுக்கு அண்டா - குண்டாவாக, சேலையாக, பரிசுப் பொருள்களாக போய் சேர்ந்தது. மக்களுக்கு இலவசமாக வாரி வழங்கும் வள்ளல்களாக வலம் வந்தனர். த.வெ.க. அரசு துவங்கி ஒரு மாதம் கூட ஆகவில்லை. கனிம வளத்துறையில் கொள்ளை இனி இருக்காது என்று நம்புவோம்.



- எஸ்.பி.சண்முகம்

# ஆட்சி மாறியும் காட்சி மாறவில்லையே ஏன்?

‘தமிழக வெற்றிக் கழகம் அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். அதற்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்’ என்று மக்களிடம் கேட்டுக் கொண்ட தமிழக முதல்வர் விஜய், பதவியேற்ற உடனேயே மூன்று வாக்குறுதிகளை நிறைவேற்ற உத்தரவிட்டார்.

முதல் உத்தரவாக இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை 500 யூனிட்கள் வரை மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோருக்கு 200 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும் என்று முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார். 500 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர், ஏற்கெனவே நடைமுறையில் (ஜெயலலிதா ஆட்சியில் கொண்டு வரப்பட்ட 100 யூனிட் இலவச மின்சாரத் திட்டப்படி) உள்ள 100 யூனிட் இலவச மின்சாரப் பலனை தொடர்ந்து பெறுவர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கெடுவதற்கு மூல காரணமாக இருக்கும் போதைப் பொருள் புழக்கத்தைத் தடுக்க போதைப் பொருள் தடுப்புப் படையை அமைக்க உத்தரவிட்டார். வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள், பேருந்து நிலையங்கள் அருகிலிருந்து 500 மீட்டர் தூரத்திற்குள் அமைந்துள்ள 717 டாஸ்மாக் மதுக்கடைகளை மூடவும் உத்தரவிட்டார். ஆனால் போதைப் பொருள் புழக்கம் இன்னும் கட்டுக்குள் வரவில்லை. தினந்தோறும் தமிழ்நாடு முழுவதும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான ‘சார்’களின் குற்றங்களைத் தடுக்க சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையை அமைக்க முதல்வர் விஜய் உத்தரவிட்டார். இந்த அதிரடிப்படை செயல்படத் தொடங்குவதில் ஏனோ காலதாமதம் நிலவுகிறது. தமிழகம் முழுவதும் தி.மு.க. ஆட்சியில் இருந்தது போலவே இப்போதும் பெண்கள், சிறுமிகள், குழந்தைகள் அரக்க மனம் கொண்டவர்களால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி வருகிறார்கள். இக்குற்றங்களில் ஆளும் கட்சியான த.வெ.க. நிர்வாகிகள், தே.மு.தி.க. நிர்வாகிகள், போலீஸ்காரர்கள் உள்பட ஏராளமானோர் ஈடுபடுவதும், கைது செய்யப்படுவதும் அன்றாடச் செய்திகளாகி விட்டன.

கடந்த ஐந்தாண்டு காலமாக தமிழ்நாடு தரங்கெட்ட மனித மிருகங்கள் பலர் வாழும் பாலியல் வன்கொடுமை காடாக மாறியிருந்த நிலைமை அப்படியே தொடர்கிறது. முன்பு கருணாநிதி ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு மிகவும் சீர்கேடடைந்திருந்தபோது, காவலர்களே குற்றங்களில் ஈடுபட்டபோது, ‘‘போலீஸ்காரர்களின் ஈரல் கெட்டு விட்டது’’ என்று தன்னால் சட்டம் - ஒழுங்கை கட்டுப்படுத்த முடியாத நிலையை வெளிப்படுத்தி, தனது கவலையைத் தெரிவித்தார் கருணாநிதி. கடந்த ஐந்தாண்டு காலத்தில் போலீஸ்காரர்கள் உள்பட பல ‘சார்’களின் ஈரல் கெட்டிருப்பதையே ஆட்சி மாறியும் இன்னும் காட்சி மாறாத இன்றைய நிலை எடுத்துக் காட்டுகிறது. கலிகாலம் கட்டுக் கடங்காமல் முற்றியிருக்கிறது.

‘‘தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கை காப்பதற்கும், போதைப் பொருள்களை கட்டுப்படுத்துவதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்’ என்று ஜூன் 3-ஆம் தேதி சட்டம் - ஒழுங்கு டி.ஜி.பி.யாகப் பொறுப்பேற்றுள்ள மகேஷ்குமார் அகர்வால் கூறியுள்ளார். அவரது அறிவிப்பு மென்மையாக, சாத்வீகமானதாகத் தெரிகிறதே தவிர குற்றச் செயல் புரிவோருக்கு ஈரல் குலை நடுங்கும் விதத்தில் இல்லை! உடனடியாக குற்றங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பாக, கவலையாக இருக்கிறது.

‘5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர் கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள் பெற்ற பயிர் கடன் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படும்’ என்று த.வெ.க. வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் ரிசர்வ் வங்கியை காரணம் காட்டி இதில் இப்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதாவது ரிசர்வ் வங்கியின் அரசு கடன் தள்ளுபடி திட்டங்களுக்கான முழு தொகையையும் அரசு 45 முதல் 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்ற வழிகாட்டுதல், தமிழக அரசின் நிதிநிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கூட்டுறவு வங்கிகளில் 2025 மே முதல் 2026 பிப்ரவரி வரை விவசாயிகள் பெற்ற பயிர்க் கடனை தள்ளுபடி செய்து முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார். இதன்படி குறு விவசாயிகளுக்கு 5,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாய் வரையும், சிறு விவசாயிகளுக்கு 5,000 ரூபாயில் இருந்து 25,000 ரூபாய் வரையும் இவர்கள் வாங்கிய கடன் தொகைக்கு ஏற்ப தள்ளுபடி கிடைக்கும். இதர பெரு விவசாயிகளுக்கு தலா 5,000 ரூபாய் தள்ளுபடி கிடைக்கும்.

இதன் மூலம் கடன் பெற்றுள்ள 14,22,555 விவசாயிகள் பயன் பெறுவர். இதனால் அரசுக்கு ரூ.2,044.46 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும் என்று அரசு அறிவித்துள்ளது. ஆனால் முழு பயிர்க் கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரி வருகின்றனர்.

‘விவசாயிகளின் கூட்டுறவு வங்கி பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்படும்’ என்று தனது தேர்தல் வாக்குறுதியில் கூறாமல் விவசாயிகளை கைவிட்ட தி.மு.க., த.வெ.க. அரசு தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி விவசாயிகளின் பயிர்க் கடனை தள்ளுபடி செய்யாதது பச்சைத் துரோகம் என்று ஓலமிடுகிறது…



(தொடரும்)

**– கரிகாலன்**

## முக்காணி திரிசுதந்தரர்கள்

❁ திருச்செந்தூர் கோயிலில் லஞ்சம் வாங்கிய அர்ச்சகர் - பணி நீக்கம் செய்த அறநிலையத் துறை அமைச்சர் - செய்தி என்று வெளி வந்த அட்டைப் படக் கார்ட்டூன், ஓர் உண்மையை உணரவில்லை. அமைச்சர் அவரிடம் விளக்கம் கேட்டு கடிதம்தான் எழுதி இருக்கிறார். அவர் அறநிலையத் துறையில் பணி புரியவில்லை. திருச்செந்தூர் திரிசுதந்தர அர்ச்சகர் களை எல்லாம் அறநிலையத் துறை பணியில் அமர்த்தினால், அவர்கள் ஏன் பக்தர்களிடம் பணம் வாங்கப் போகிறார்கள்? பல ஆண்டுகளாக அவர்களது கோரிக்கைகளை எந்த அரசும் செவி கொடுத்துக் கேட்கவில்லை என்பதே உண்மை. சிதம்பரம் தீட்சிதர்கள் போல திருச்செந்தூர் முக்காணி திரிசுதந்தரர்கள். முருகனுக்குத் தொண்டு செய்யவே தங்களை அர்ப்பணித்தவர்கள்.

**- சீ.காந்திமதிநாதன், கோவில்பட்டி**

## மிக்க மகிழ்ச்சி

❁ 10.6.26 துக்ளக்கின் 'பொருளா தாரப் புயலா? பிரச்னையா?' என்ற தலையங்கம் படித்தேன். மாநிலப் பிரச்னைகளில் இருந்து விடுபட்டு, மத்திய பொருளாதாரப் பிரச்னைக்கு மாறி, பெரிய விளக்க மளித்தமைக்கு மிக்க மகிழ்ச்சி.

**- பி.கே.ஜீவன், கும்பகோணம்-1**

## மறுக்கிறேன்

❁ 'எதிர்ப்புக் கடல் - நீந்திக் கடப் பாரா விஜய்?' என்று, இலங்கை ஜெயராஜ் என்ற ஆன்மிகவாதிக்கும் கூட, அரசியல் களத்தில் பிரகாசிக் கும் விஜய்யை விமர்சிக்கிற ஆசை வந்திருக்கிறது. வரவேற்கலாம்! அதே சமயம், அதிர்ஷ்டத்தால் வந்த வெற்றி என்பதை மறுக்கிறேன்.

**- ஆர்ஜி.பாலன், திசையன்விளை**

## விளக்கத்திற்கு நன்றி

❁ 10.6.2026 துக்ளக் தலையங்கம் மிக அருமை. உலக அளவில் பொருளாதாரப் புயல் வீசும் நிலையிலும், பாரதத்தை வளர்ச்சிப் பாதையில் முன்னேற்றிச் செல்லும், மோடி தலைமையிலான மத்திய அரசின் செயல்பாடுகளை மக்கள் அறிவதற்காக, வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த ராஹுலுக்கு நன்றி. வாயைத் திறந்தால் உள்ளே உள்ள சரக்கின் அளவும், தரமும் தெரிந்து விடும் என்ற அடிப்படையைக் கூட அறியாத அரசியல்வாதி. அருமையான விளக் கத்திற்கு நன்றி.

**- ஸ்ரீமாதவன், கும்பகோணம்**

## இரண்டு கண்கள்

❁ பழ.கருப்பையாவின் 'நேரிய ஆட்சிக்கு நெறியற்ற வழிமுறைகள்' மற்றும் இலங்கை ஜெயராஜின் (முகநூல் பதிவு) 'எதிர்ப்புக் கடல் - நீந்திக் கடப் பரா விஜய்' என்கிற இரு கட்டுரை களையும் படித்தேன். இரண்டும் இந்த வார துக்ளக்கின் இரண்டு கண்கள்,

**- சந்தனப்ரியன், ஈரோடு-11**

## தோற்பது மக்கள்தான்

❁ சத்யாவின் கட்டுரை கூறுவது இதுதான். கூட்டணிக் கட்சி களுக்கு உரிய மரியாதை தராமல் கவிழ்ந்தது தி.மு.க.. சொந்தக் கட்சி யினருக்கே மரியாதை தராமல் கவிழ்ந்தது அ.தி.மு.க.. அ.தி. மு.க.வில், தன்னம்பிக்கை வெகு வாகக் குறைந்துள்ள நிலையில், விஜய்யை வெல்ல இரண்டும் ஒன்று சேரும் வாய்ப்பிருக்கிறது. 'தி.மு.க.வோ, அ.தி.மு.க.வோ யார் ஜெயித்தாலும், தோற்பது மக்கள்' என்று சோ ஸார் கேள்வி - பதில் பகுதியில் ஒருமுறை எழுதியிருந் தது நினைவுக்கு வருகிறது.

**- கல்லன் கிருஷ்ணராஜ், கோவை-17**

## ஏமாற்றம் அடைந்தேன்

❁ 10.6.26 துக்ளக் இதழில் ஆர்.நடராஜன் எழுதிய கட்டுரையில் டி.எம்.ரங்கராஜின் பெயர் விடுபட்டுள்ளது. ஜெயலலிதா தமிழக முதல்வராக இருந்த காலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவரும், எனது மைத்துனருமான மறைந்த டி.எம்.ரங்கராஜன், தேர்தல் பிர சாரத்தின்போது, கட்சியின் சேவையில் இருந்தபோதே தனது உயிரை இழந்தார் என்பதை அறிந்து நான் வருத்தமும், ஏமாற்றமும் அடைந்தேன். துக்ளக் முதல் இதழிலிருந்து இன்று வரை நான் அதன் சந்தாதாரராக இருக்கிறேன். எனக்கு 80 வயது ஆகிறது.

**- டாக்டர் ஆர்.பார்த்தசாரதி, சென்னை-14**

# டியர் மிஸ்டர் துக்ளக்

## குடந்தை ராம.ராமநாதன்

❁ 10.06.2026 தேதியிட்ட துக்ளக் இதழில் 'பழையன கழி தலும் புதியன புகுதலும்' பகுதி யில், திராவிடங்களின் தில்லு முல்லு செயல்களை அழகாகக் கட்டுரையாளர் விளக்கியுள்ளார். ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்தில் எம்.பி., எம்.எல்.ஏ.க்களாக இருந்தவர்கள் பட்டியலில் குடந்தை ராம.ராமநாதனின் பெயர் குறிப்பிடப்படவில்லை. மற்ற சமூகத்தினரை தீண்டத்தகாத வர்களாக பிராமணர்கள் நடத்து கிறார்கள் என்று கூறிக்கொண்டே, நமது அரசியல்வாதிகள் பிராமணர் களைத் தீண்டத்தகாதவர்களாக நடத்துகின்றனர்.

**- செ.அன்பு மதியழகன், கொப்பம்பட்டி** ●

# உதயசூரியன் அஸ்தனமாகிறதா?

அ.இ.அ.தி.மு.க. உள்ளுக்குள்ளே குலைந்து போவது குறித்து பலருக்கும் சந்தேகமில்லை. ஆனால் 59 தொகுதிகளில் 24.2% வாக்குகளுடன் வெற்றி பெற்ற தி.மு.க.வின் எதிர்காலம் பிரகாசமாக இருப்பதாகவே பலரும் நினைக்கிறார்கள். இந்த நினைப்பு சரியா அல்லது தவறா என்பதை விருப்பு வெறுப்பின்றி அலசுவதே இந்த கட்டுரையின் நோக்கம்.

தொடர்ச்சியாக மூன்று தேர்தல்களில் (2019 மக்களவை தேர்தல், 2021 தமிழக சட்டசபை தேர்தல், 2024 மக்களவை தேர்தல்) தி.மு.க. வெற்றி வாகை சூடியதால், 2026 தமிழக சட்டசபை தேர்தலிலும் வெற்றி பெற்று விடுவோம் என்று தி.மு.க. உறுதியாக நம்பியது.

தி.மு.க.வின் நிலைய வித்வான்களாக இருக்கும் பெரும்பான்மை ஊடகவியலாளர்களும், ஆளுக்கொரு சேனல் வைத்துக் கொண்டு வாய்க்கு வந்ததை எல்லாம் பேசிக் கொண்டு திரிபவர்களும் கள நிலவரத்தைக் கொஞ்சமும் புரிந்து கொள்ள விருப்பமில்லாமல், தி.மு.க.தான் மீண்டும் ஆட்சிக்கு வரும் என்று உளறிக் கொண்டிருந்தார்கள்.

தமிழகத்தில் நிலை பெற்று விட்ட தி.மு.க. மற்றும் அண்ணா தி.மு.க., கடந்த சில ஆண்டுகளாகவே இளையோர்களிடம் செல்வாக்கை இழந்து வருகிறது என்பதை அரசியலை கூர்ந்து கவனிப்பவர்கள் அறிவார்கள். இரண்டு அணிகள் மட்டுமே இருந்த காலகட்டத்தில், இந்த இளையோர்களுக்கு ஒரே வாய்ப்பாக சீமானின் கட்சி மட்டுமே இருந்தது. இதன் காரணமாகவே 2024 மக்களவைத் தேர்தலில் சீமானின் கட்சி 8% வாக்குகளைப் பெற்றது. பல விஷயங்களில் சீமானின் அதிதீவிரமான நிலைப்பாடும், திரைத்துறையை சார்ந்தவராக இருந்தபோதிலும் திரைப் பிம்பம் இல்லாததாலும், அவரால் அதற்கு மேல் செல்ல முடியவில்லை.

விஜய் கட்சி ஆரம்பித்த புதிய சூழலில், இரண்டு ஆண்டுகளில் இந்த வாக்குகள் பெருந்திரளாக உருவெடுத்து விஜயை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியது.

இந்த கோட்பாட்டை எப்படி உறுதி செய்து கொள்வது? த.வெ.க. 100 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும் என்றும், சென்னையில் போட்டியிடும் தி.மு.க. பெருந்தலைகளை வீழ்த்தும் என்றும் வாக்குப்பதிவுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்பில் (Exit Poll) சரியாகச் சொன்ன Axis My India - வின் புள்ளி விவரங்களை பார்த்தால், 18-19, 20-29, 30-39, 40-49 மற்றும் 50-59 வயதினரிடம் உள்ள 68%, 59%, 45%, 32% மற்றும் 20% செல்வாக்கால் த.வெ.க. பெற்றிருக்கிறது என்று எடுத்துரைத்தது. (https://www.youtube.com/watch?v=7fdUiyDXWfU). த.வெ.க. பெற்ற 35% வாக்குகளில் பெரும்பாலானவை, 40 வயதிற்கு உட்பட்டோரிடம் இருந்து வந்திருக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

ஸ்டாலின் தனது கட்சிக்காரர்களிடம் பேசும்போது அவர்களை உற்சாகப்படுத்த, ''மக்கள் மீண்டும் நம்மிடம் வருவார்கள்''. ''இந்த ஆட்சி விரைவில் கலைந்துவிடும். எனவே தேர்தலுக்குத் தயாராக இருங்கள்'' என்று பலவாறாக தேற்றி வருகிறார். ஆனால் நிலைமை என்ன? அடுத்த ஐந்து ஆண்டுகளில், தற்போது 40 வயதிற்கு உட்பட்டவர்கள் ஐந்து வயது அதிகமாகி இருப்பார்கள். ஒரு வயதிற்குள் ஒரு சிந்தனை வந்து விட்டால், மக்கள் எளிதில் மாறுவதில்லை. புதிதாக 5% இளையோர் வாக்கு செலுத்த வரும் போது, த.வெ.க.வின் பரப்பு 40% லிருந்து 45% ஆக உயரும். தந்தை செய்த தொழிலை மகன் செய்வதை ஒழிப்பதற்காகவே தி.மு.க. பாடுபட்டு வருகிறது என்று கட்டப்பட்ட பிம்பம், இளையோர்களிடம் சுக்கு நூறாக உடைந்து கிடக்கிறது.

தலைமைப் பதவியில் கருணாநிதி மறைந்து பத்து ஆண்டுகளில், நாலாவது தலைமுறை வரை தலைமைக்கு குடும்பத்தில் இருந்து வந்தாகி விட்டது. மாவட்டத்தை ஆளும் தி.மு.க. சிற்றரசர்களிடமும் இரண்டாவது மூன்றாவது தலைமுறை வந்து விட்டது. கருணாநிதி தி.மு.க.வைக் கைப்பற்றியதில் இருந்தே, கட்சியை தனது சொத்தாகக் கருதி தனது வாரிசுகளை கொண்டு வருவதிலே குறியாக இருந்தார். உள்ளும் புறமுமாக தி.மு.க. பரம்பரை அரசியலை ஆட்கொண்டு விட்ட பிறகு, இனிமேல் பரம்பரை சாராத இளையோர்கள் எப்படி தி.மு.க.வை நோக்கி வருவார்கள்? இளையோர்களுக்கு தி.மு.க.வின் தகிடுதத்தம் தெரியும். இத்தனை நாள் வாய்ப்பு இல்லாமல் இரண்டில் ஒன்றிற்கு வாக்களித்து வந்தார்கள். இனிமேல் இது நடக்கப் போவதில்லை.

'எங்களைப் போல வெற்றி பெற்றவர்களும் கிடையாது, எங்களைப் போல் தோல்வியைச் சந்தித்தவர்களும் கிடையாது' என்று தி.மு.க. சொல்லி வருவதும், 'நாங்கள் எம்.ஜி.ஆர். காலத்தில் மூன்று முறை தோற்ற போதிலும், மீண்டும் பீனிக்ஸ் பறவை போல எழுந்து வந்தோம்' என்பதும் அந்தக்

காலத்திற்கு பொருந்தி வந்தது. அப்போது ஐம்பெரும் விழாவுக்கு வந்து கட்சி நிதி கொடு என்று கேட்டால், அப்பாவி தொண்டன் வீட்டிலுள்ள நகையை அடமானம் வைத்து கொடுத்துக் கொண்டிருந்தான். இனி அந்த பருப்பு வேகாது. ஆட்சியில் இல்லாவிடில், தி.மு.க.வில் ஏன் இருப்பானேன் என்று யோசிக்கும் காலம் இது. அது ஏமாற்றப் படுகிறோம் என்பது புரியாத காலம். இது ஏமாறுவதற்கு தயாராக இல்லாத காலம்.

கருணாநிதியின் மிச்சம் மீதிதான் ஸ்டாலின். ஸ்டாலினின் மிச்சம் மீதிதான் உதயநிதி. கருணாநிதி ஒரு முழு நேர அரசியல் வாதியாகவே தனது வாழ்நாள் முழுக்க இருந்தார். தந்தை மகன் என்று பரம்பரை வழியாக வந்த பதவி அல்ல என்பதால், அரசியலில் தலைமைப் பதவியின் மகத்துவம் அவருக்கு புரிந்திருந்தது. அதனை நாம் அடுத்த தலைமுறையிடம் எதிர்பார்க்க முடியாது. மூன்று தொடர் தோல்விகளுக்குப் பின்னரும் தி.மு.க.வை கட்டிக்காத்த கருணாநிதியை ஸ்டாலினோடு ஒப்பிடுவது பொருத்தமாக இருக்காது. வயது மற்றும் உடல்நிலையை கருத்தில் கொண்டால், 2031 சட்டசபை தேர்தலை ஸ்டாலின் எதிர்கொள்வதற்கான சக்தி குறைவே.


உதயநிதி தலைமையில்தான் தி.மு.க. நிற்கும். இன்பநிதியும் துணைக்கு வரக்கூடும். தனிப் பட்ட முறையில் தேர்தலில் தோற்றாலும், ஸ்டாலினிற்கு மக்களிடம் இருக்கின்ற நல்லெண்ணம் உதயநிதிக்கு இருப்பதாகத் தெரியவில்லை. தி.மு.க.வின் தொடர் வாக்காளர்களாக இருக்கும் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் உதயநிதிக்கும், இன்பநிதிக்கும் ஜே போடுவார்கள். ஆனால் 40 வயதிற்கு உட்பட்டவர்கள் இதனை ஏற்கப் போவதில்லை.

த.வெ.க. ஆட்சி ஐந்து ஆண்டுகள் நீடித்தால் தி.மு.க.வின் நிலை என்னவாகும்? தோல்வி அடைந்த இந்த தேர்தலில் கூட தி.மு.க. சிறுபான்மை மக்களின் வாக்குகளையும், தி.மு.க.வின் தீவிர அபிமானிகளாக இருக்கும் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் வாக்குகளையும் பெற்று இருக்கிறது. தி.மு.க.வின் உதயசூரியன் அத்தனை சுலபமாக அஸ்தமனமாகப் போவதில்லை. கருணாநிதி மறைந்தபோது தி.மு.க.தான் கருணாநிதியின் மிகப்பெரிய எதிர்மறைத் தாக்கம். அரசியலில் இருந்து முழுமையாக தி.மு.க. மறைய இன்னும் குறைந்தது ஒரு மாமாங்கமாவது ஆகும். ஆனால் உதய சூரியனின் அஸ்தமனம் 2026 தேர்தலில் ஆரம்பித்து விட்டது.



**– திருவண்ணாதபுரம் இராமகிருஷ்ணன்**

# புத்தக விமர்சனம்




**நூல்: சாணக்கிய நீதி (சாணக்கியர் கூறும் சமூக நீதிகள்). ஆசிரியர்: கீர்த்தி. பக்கம்: 152. விலை: ரூ.120/-. வெளியீடு: செந்தமிழ்ப் பதிப்பகம், 15/21, டீச்சர்ஸ் கில்டு காலனி, 2-ஆவது தெரு, ராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை- 600049. தொலைபேசி: 044 - 26502086.**

இந்தியாவின் முதல் ராஜதந்திரி என்று போற்றப்படுபவர் சாணக்கியர். இந்திய வரலாற்றில் மிகச் சிறந்த அறிஞராகவும் ஞானியாகவும் கருதப்படும் சாணக்கியருக்கு கௌடில்யர், விஷ்ணு குப்தர் என்ற பெயர்களும் இருந்ததாகத் தெரிகிறது. இவரது காலம் கி.மு.350 முதல் கி.மு. 283 வரை மௌரியப் பேரரசின் முதல் மன்னரான சந்திரகுப்த மௌரியரிடம் அமைச்சராகவும், ஆலோசகராகவும் பதவி வகித்த சாணக்கியர், அரசியலில் மட்டுமின்றி மிகச் சிறந்த பொருளாதார நிபுணராகவும் கருதப்படுகிறார். மக்களை அறிவுறுத்தி மேம்படுத்த வேண்டும் என்று எண்ணிய இவர் அர்த்தசாஸ்திரம், சாணக்கிய நீதி என்னும் இரண்டு நூல்களை இயற்றினார். சாணக்கியரின் அறிவும், ராஜதந்திரமும் வரலாற்று ஆராய்ச்சியாளர்களால் இன்றளவும் போற்றப்படுகிறது. இத்தாலிய நாட்டின் அறிஞரான நிக்கோலோ மச்சியாவெல்லி, கிரேக்க அறிஞர்களான பிளேட்டோ, அரிஸ்டாடில் ஆகியோருக்கு இணையான அறிஞர் சாணக்கியர் என்று பலநாட்டு அறிஞர்களும் கூறுகின்றனர். ''சாணக்கியரின் அரசியல் அறிவு எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியது. இந்தியாவின் இத்தனை நாள் அரசியல் வளர்ச்சியில் சாணக்கியரின் அறிவுரைகளுக்கும் முக்கிய பங்கு உண்டு'' என்று ஜவஹர்லால் நேரு கூறியுள்ளார். இத்தகைய பெருமைமிக்க சாணக்கியரின் பல அரிய கருத்துகள், நீதிகள் இந்நூலில் 'குடும்பம், தொழில், செல்வம், கல்வி, நட்பு, பெண்' உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் எளிய நடையில் தொகுத்து தரப்பட்டுள்ளது. சாணக்கியரின் அரிய கருத்துகள் இந்திய அளவில் மட்டுமின்றி உலக அளவிலும் பொன்மொழிகளாகக் கருதப்பட்டு வருகின்றன. 'விநாச காலே விபரீத புத்தி' - ஒருவனின் அழிவு காலம் வரும் முன்பு அவனது அறிவு மழுங்கி விடுகிறது - என்ற சாணக்கியரின் பொன்மொழியை உதாரணமாகக் கூறலாம். அனைவரும் வாங்கிப் படித்து பயன்பெறத்தக்க புத்தகம் இது.

**– கரிகாலன்**

# மின்சாரத் துறையில் சீர்திருத்தம் தேவை

**2025**-ஆம் நிதியாண்டு முடிய தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்த நஷ்டம் ரூ.1.75 லட்சம் கோடி. இதற்கு முக்கிய காரணங்கள் மின்கொள்முதல் ஊழல், மின்விநியோக இழப்பு, மோசமான நிர்வாகம் மற்றும் மான்யம். திறமையான, நேர்மையான நிர்வாகத்தினால் இந்த நஷ்டத்தை சரி செய்ய முடியும்.

ஏற்கெனவே முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, டிரான்ஸ்ஃபார்மர் கொள்முதல் தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கியிருக்கிறார். அதேபோல் மற்ற மின் உபகரண கொள்முதல், புதிய பதவி நியமனம், மாறுதல் வழங்குதல் போன்ற பல துறைகளிலும் ஊழல். குறிப்பாக மின் கம்பங்கள் வாங்குவதிலும் நிலவுகிறது.

கடற்கரை பகுதிகளில் புயல் ஏற்பட்ட பிறகு, மின்கம்பங்களை மாற்றுவதற்காக பெருமளவு தொகை செலவிடப்படுகிறது. ஆனால் அதே புயலை சந்திக்கும் ரயில்வே தொலைத் தொடர்பு கம்பங்கள் சேதமடைவதில்லை. 2015 முதல் 2025-ஆம் ஆண்டு வரை மாற்றப்பட்ட மின்வாரிய கம்பங்களையும், ரயில்வே கம்பங்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்தால் இதில் உள்ள ஊழலின் அளவு தெரியும்.

எல்லா பிரச்னைக்கும், தொழில்நுட்ப ரீதியான தீர்வுகள் உண்டு. சரியான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால், மின்வாரிய ஊழலையும் ஒழிக்க முடியும். மின்பரிமாற்றம் மற்றும் விநியோகத்தில் ஏற்படும் இழப்பு 15 சதவிகிதம். இது பிரிட்டனில் 4 சதவிகிதமாகவும், வடஅமெரிக்காவில் 5 சதவிகிதமாகவும், ஜெர்மனியில் 4 சதவிகிதமாகவும் உள்ளது. ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க ஆகும் செலவை கணக்கிட்டால், இந்த இழப்பினால் பல நூறு கோடி ரூபாய் நஷ்டமாகும். மின்பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்படும் மின்கடத்திகளில் (அலுமினியம், செம்பு, ஓமிக், ஓமிக் அல்லாத கடத்திகள் முதலியவை) தரம் குறைந்த மின்கம்பிகள் மற்றும் பச்சையான திருட்டு ஆகியவையே, மின்பரிமாற்றம் மற்றும் விநியோக இழப்புகளுக்குக் காரணங்கள்.

மின்வாரிய அலுவலர்களின் ஒத்துழைப்புடன் பெரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகளில் மின் இணைப்புகளில் மீட்டர்களைத் தவிர்த்து, மின்சாரம் பெறும் சட்டவிரோத செயல்களும் நடைபெறுகின்றன. இதை நகைச்சுவையாக விளக்கும் காட்சி நாகராஜ சோழன் எம்.எல்.ஏ. திரைப்படத்தில் வருகிறது. அதில் சத்யராஜ் படித்தவர் அல்ல என்பதால், அவருக்கு கல்வி மந்திரிசபை தர மறுக்கும் முதலமைச்சரிடம், 'மின் அமைச்சருக்கு மின்சாரம் எப்படி உற்பத்தியாகிறது என்று தெரியுமா' என்று பதில் கேள்வி கேட்பார். அதையே அவர் மின்சார அமைச்சரிடம் கேட்கிறபோது, அவர் கொஞ்சம் கூட யோசிக்காமல் 'மேலே உள்ள வயர்களில் கொக்கி போட்டுத்தான் மின்சாரம் வருகிறது' என்று பதில் சொல்வார்.

இலவச மின்சாரத்தை உபயோகப்படுத்தும் சில விவசாயிகளும், முறைகேடுகளில் ஈடுபடுவது கண்கூடாகத் தெரிகிறது. நிலத்தடி நீரிலிருந்து தண்ணீர் எடுக்க அவர்களுக்கு 5 ஹெச்.பி. மோட்டார் மட்டுமே உபயோகப்படுத்த அனுமதி தந்தும், சிலர் 10, 15 மற்றும் 20 ஹெச்.பி. மோட்டார்களை பயன்படுத்துகின்றனர். மேலும் 10 அல்லது 15 வருட பழமையான அதிக மின்சாரம் இழுக்கும் மோட்டார்களை பயன்படுத்துகின்றனர். மற்றும் அருகிலுள்ள வாய்க்கால்களிலிருந்து டியூப் மூலம் தண்ணீரை இழுப்பது தடை செய்யப்பட்டிருந்தாலும், நடைமுறையில் தொடர்கிறது.

மேலும் நிலத்தடி நீரிலிருந்தோ, வாய்க்காலிருந்தோ தண்ணீரை எடுத்து, அருகிலுள்ள பம்செட்டு இணைப்பு இல்லாத விவசாயிகளுக்கு விற்பனை செய்வதும் நடைபெறுகிறது. (இது குற்றம்) ஒவ்வொரு மின் இணைப்புக்கும் மீட்டர் பொருத்தப்பட்டால், இத்தகைய முறைகேடுகளைக் கண்டறிய முடியும். ஆனால் மீட்டர் பொருத்த வருகிற மின்வாரிய அலுவலர்களை மிரட்டுவதும், மற்றும் தாக்குவதும் நடக்கின்றன. தூத்துக்குடியில் இம்மாதிரி நிகழ்வில் ஒரு மின்வாரிய அலுவலர் உயிர் இழந்திருக்கிறார்.

இதுவரை TANGEDCO அனைத்து விவசாய பம்புசெட் இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்துவதில் முழு வெற்றி பெறவில்லை. இதை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த வேண்டும். மீட்டர் பொருத்தப்பட்ட பிறகு, விவசாயிகள் பயன்படுத்திய மின்சார அளவுக்கான முழு கட்டணத்தையும் முதலில் செலுத்தி, பின்னர் அதற்கான மான்யத்தை அவர்களது வங்கிக் கணக்கில் அரசு, சமையல் எரிவாயு விநியோகத்தில் உள்ளதுபோல், செலுத்தலாம். இதன் மூலம் மின் பயன்பாடு அளவு கணக்கிடப்படும்.

மாநில அரசு, விவசாயிகளுக்கான மான்யத் தொகையை முழுமையாக TANGEDCO நிறுவனத்திற்கு திரும்பி வழங்க வேண்டும். தற்போது தருவதில்லை. மற்ற மின்



விநியோக கம்பெனிகளை போலவே **(DISCOM) TANGEDCO**-வும் வணிக முறையில் லாப நோக்கத்தோடு நடத்த வேண்டும். குஜராத்தில் உள்ளதுபோல் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்றால், இரவிலோ பகலிலோ அல்லது விட்டு விட்டோ **Feeder Separation Model** (மின்வழங்கல் பிரிப்பு முறை) மூலம் விநியோகம் செய்ய வேண்டும். அதே சமயம், மின்சாரம் பணம் கொடுத்து பெறுபவர்களுக்குத் தொடர்ச்சியாகவும், விவசாயிகள் வேண்டும் நேரத்திலும் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

அடிக்கடி பழுதாகும் அல்லது தரமற்ற மின்மாற்றிகள் மற்றும், மின் கம்பிகளையும் பழுது பார்ப்பதில் அதிகச் செலவு ஏற்படுகிறது. மின்மாற்றிகளையும், மின் கம்பிகளையும் உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு மிகப்பெரிய முயற்சி எடுத்து, பூமிக் கடியில் கொண்டு செல்ல வேண்டும். சென்னையில் சில இடங்களில் இதற்கு வாய்ப்புண்டு. மின் உபயோகிப்பாளர்கள் இதை வேண்டினால் கிடைக்கும் என்பது பற்றி தெரியாததால், இந்த வாய்ப்பை பயன்படுத்துவதில்லை (2004-லிலேயே எங்கள் வீட்டிற்கு வரும் மின்கம்பிகள் பூமிக்கடியில் வரும்படி மின்வாரியம் அமைத்தது).

மான்யங்களில் சீர்திருத்தம் கொண்டு வர வேண்டும். பாகுபாடு இல்லாமல் கோவில்களுக்கும், மசூதிகளுக்கும், சர்ச்சுகளுக்கும் ஒரே அளவு மான்ய கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.


தெருமுனையில் நின்றபடியே தெருவிலுள்ள 50 வீடுகளுக்கான மின் உபயோகத்தை, ஒரு ஸ்மார்ட் மீட்டர் மூலம் தானாகவே பதிவு செய்யும் திட்டம் சோதனை முறையில் நடத்தி வெற்றி பெற்றிருந்தாலும், பல வருடங்களாகவே அதை விரிவுபடுத்தவில்லை. அது உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும். தொலைபேசி பில்லை போல மின்சார பில்லும், மொபைல் மூலமாகவோ கணினி மூலமாகவோ அனுப்பி, யு.பி.ஐ. முறை மூலமாக பணம் செலுத்தும் வசதியை ஏற்படுத்த வேண்டும்.

மற்ற சேவைகளைப் போலவே மின்விநியோகத்திலும், தரமான சப்ளை (230-250 வோல்ட்ஸ்) பெறுவதற்கு உபயோகிப்பாளர்களுக்கு உரிமையுண்டு. ஆனால் மின்விநியோகத்தில் நிலையற்றதாக, அதுவும் பல சமயங்களில் குறைந்த வோல்டேஜில் வருவதால் மின் சாதனங்களுக்கு சேதம் ஏற்படுகிறது. **TANGEDCO** எப்போதெல்லாம் தரமான மின்சாரத்தை விநியோகிக்கவில்லையோ, அந்த உபயோகிப்பாளர்களுக்கு அந்தக் காலத்திற்கான கட்டணத்தை வசூலிக்கக் கூடாது.

மின்சார ஊழியர்கள் கட்டாயம் பெயர் வில்லையை, அவர்களது இடது பாக்கெட்டின் மேல் அணிய வேண்டும். தூரத்திலிருந்து பொதுமக்கள் பார்க்கையில், அவர்களை கேட்காமலேயே அவர்களுடைய பெயரையும், பதவியையும் தெரிந்து கொள்வது பெயர் வில்லையின் நோக்கம். ஐ.டி. கார்டு பெயர் வில்லை அல்ல. ஐ.டி. கார்டு பாதுகாப்பு அலுவலருடைய கவனத்திற்காக, பொதுமக்கள் ஒரு ஊழியரின் அருகில் சென்று ஐ.டி. கார்டை தூக்கி எடுத்துப் பார்த்து, அவருடைய (பெண்கள் உட்பட) பெயரை தெரிந்து கொள்ள முடியாது. அது சங்கடமாகவும், தவறான முறையும் ஆகும்.


மின்வாரியம் தொடர்புடைய அனைத்து விண்ணப்பங்களும், மின்சார வலைதளம் மூலமாக விண்ணப்பித்து, அதற்குரிய ரசீதை பெறும் வசதியையும் ஏற்படுத்த வேண்டும். அடுக்குமாடி கட்டுபவர்களும், மின்வாரியமும் இணைந்து செய்யும் ஒரு முறைகேட்டை, மின்வாரிய அமைச்சர் உடனே தடுக்க வேண்டும். அடுக்குமாடி கட்டடங்களுக்கு தனியே ஒரு மின்மாற்றி, அந்தக் கட்டடத்தின் வெளியே அதை அமைப்பதற்கான செலவு ஆகியவற்றை மின்வாரியமே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அநேகமாக எல்லா பில்டர்களும், அதை அபார்ட்மென்ட் உரிமையாளர்களிடமிருந்து வசூலித்து விடுகிறார்கள். இது ஊழலுக்கு வழி வகுக்கிறது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில், உபயோகிப்பாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் நிர்வாகக் குழுவில் இடம் பெற வேண்டும். அதில் மின் உபயோகிப்பாளர்களின் புகார்களை பெறுவதற்கு ஒரு முறையை ஏற்படுத்த வேண்டும். எந்தக் கட்டணம் நிர்ணயித்தாலும் செலுத்துகின்ற, வேறு எங்கும் செல்ல முடியாத (பிணைக்கப்பட்ட) 2.6 கோடி மின் உபயோகிப்பாளர்கள் இருக்கும்போது, மின்வாரியம் லாபத்தை நோக்கித்தான் நடக்க வேண்டும். கட்டணம் ஏற்றுவதற்கு முன் பொதுமக்கள் கருத்தை கேட்டல் என்ற விதிமுறை பின்பற்றப்பட வேண்டும்.



மின்சார துறை அமைச்சர் நிர்மல்குமார் அவர்களும், முதலமைச்சர் விஜய் அவர்களும் இதில் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

**– எஸ்.புஷ்பவனம்**




Printed and Published by K. Swaminathan on behalf of Nachiketas Publishers India Private Limited, 166, (Old No.46), Greenways Road, Chennai - 600 028 and Printed at Rasi Graphics Private Limited, No.40, Peters Road, Royapettah, Chennai - 600014. Editor : S.GURUMURTHY.

V.KRISHNAMOORTHY
Managing Trustee



RAJA K.MOORTHY
Finance Trustee



# sri matha trust



**Our free "Namma Dharmasala" at Chennai since 2000...**

A real sanctuary for ailing poor cancer victims from outstations... a "Home" away from their homes with homely wholesome food served with motherly affection, while under treatment in the Cancer Institute, Adyar, Chennai.

நன்கொடையாளர்கள் விரும்பினால் நமது **நம்ம தர்மசாலா**விற்கு விஜயம் செய்து எங்களது செயல்பாடுகளை நேரில் கண்டறிந்த பின்னர் நன்கொடை வழங்கி, ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு பரிமாறி, தாங்களும் உண்டு, உணவின் தரம் அறிந்து உள்ளம் மகிழலாம்.

அடையாறு கேன்சர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நாட்களில், நம்ம தர்ம சாலாவில் தங்கியிருக்கும் ஏழை புற்று நோயாளிகளின் நம்பிக்கை நிறைந்த நிம்மதியான சிரிப்பில் நம்மால் நிச்சயம் இறைவனை காண முடியும். அவ்வகையில் நமது நம்ம தர்மசாலா மனிதநேய மனங்கள் சங்கமிக்கும் ஒரு தர்ம ஆலயமாகத் திகழ்கிறது என்றால் அது மிகையல்ல. இத்தகைய இறை பணிக்கு நிகரான திருப்பணியில் அனைவரும் பங்கேற்க வேண்டுகிறோம்.



**கொடுப்பவர்களுக்குத் தெரியாது, கேட்பது கடவுள் என்று... ஆனால், கேட்பவர்களுக்கு தெரியும் கொடுப்பது கடவுள் என்று...**


ஏழை புற்றுநோயாளிகளுக்கு நம்ம தர்மசாலாவில் மூன்று வேளை உணவு பாதுகாப்பான தங்குமிடம் ஆகியவை புற்றுநோயாளிகளின் சிகிச்சை காலம் முழுவதும் **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் தடையற்ற சிகிச்சை பெற்று விரைவில் புற்றுநோயிலிருந்து விடுபடுகிறார்கள். **ஏழை புற்றுநோயாளிகள் பசி தீர்க்க உதவி செய்திடுங்கள். உண்மையான இன்பம் இதுவே என்று உணர்ந்திடுங்கள்...**

## "ஸ்ரீ ஜெயேந்த்ர பெரியவா" நினைவு ஆதரவற்றோர் இலவச முதியோர் இல்லம்

செங்கல்பட்டு மாவட்டம், மாமண்டூரில் நமது இலவச முதியோர் இல்லம் இறைவன் அருளால் ஆதரவற்ற–ஏழை முதியவர்களுடன் முழுமையாக செயல்படத் துவங்கியுள்ளது. இம்முதியோர் இல்லத்தின் கட்டுமானச் செலவு சுமார் 13 கோடி என்கிற நிலையில், கட்டுமான நிறுவனத்திற்கு ரூ.1.75 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. இம்மாபெரும் தர்மசாம்ராஜ்யத்தை நன்கொடையாளர்களின் நிதி உதவியை பெற்று நிர்மாணித்த ஸ்ரீ மாதா டிரஸ்ட், மேற்படி நிலுவைத் தொகைக்கும், தினசரி நிர்வாகச் செலவுகளுக்கும், முதியவர்களுக்கு உணவு வழங்குவதற்கும் பெரிய நிறுவனங்கள் மற்றும் மனித நேய மனிதர்களின் நிதி உதவியை பெரிதும் எதிர்நோக்கி உள்ளது.



**எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே** என்கிற தாயுமானவரின் பாடலுக்கு சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றனர் திரு **சீனிவாசன்** திருமதி **சாந்தி** தம்பதியர் என்றால் அது மிகையாகாது. நமது முதியோர் இல்லத்திற்கு வருகை தந்து, கோபூஜை செய்து **ஸ்ரீ ஸ்வாமிநாத ஸ்வாமி** சன்னதியில் தங்களுடைய **சஷ்டியப்தபூர்த்தி**யைக் கொண்டாடிய இந்த மனிதநேய தம்பதியர், நமது இலவச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்களுக்கு உணவு வழங்க நன்கொடை வழங்கியும், அவர்களிடம் நல்லாசியும் பெற்று மகிழ்ந்தனர்.









**நமது நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகள் (மற்றும்) இலவச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்கள் நலன் காக்க தாங்கள் கீழ்கண்டவாறு நன்கொடை வழங்கி மகிழ, இருகரம் கூப்பி வேண்டுகிறோம்**

| | |
|---|---|
| ரூ.1,00,000/- | நிதியளித்து நிரந்தர **காப்பாளர்** ஆகலாம் |
| ரூ.75,000/- | நிதியளித்து **வள்ளல்** ஆகலாம் |
| ரூ.25,000/- | நிதியளித்து ஒரு நாள் செலவினை ஏற்கலாம் |
| ரூ.10,000/- | நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம் |
| ரூ.5,000/- | நிதியளித்து மதிய (அ) இரவு உணவு செலவினை ஏற்கலாம் |
| ரூ.3,000/- | நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம் |

SCAN & DONATE

**UPI ID:** srimathatrust1090@iob

Kindly send your contribution to SRI MATHA TRUST account by CHEQUE / NEFT / CASH / M.O.

| | | | |
|---|---|---|---|
| Account Name | SRI MATHA TRUST | Current A/c No. | 163502000001090 |
| Bank Name | INDIAN OVERSEAS BANK | IFSC Code | IOBA0001635 |
| Branch | Gandhi Nagar, Chennai-20. | Sri Matha Trust PAN Number | AACTS9747G |

**தங்களது நன்கொடைக்கு வருமான வரி சட்டம் 80(G) படி வரிவிலக்கு உண்டு.**

**Admn. Office :** "NAMMA DHARMASALA" 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 42661687

**Kindly contact : Mr.A.American - 90032 47857 / Mr.R.Srinivasan - 98848 27448**

**vkrishnamoorthy.smt@gmail.com | www.srimathatrust.org**

Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 600008
Thuglak Registered No.TN/CC(S)DN/123/24-26. Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)WPP/612/24-26.
Thuglak - Weekly Magazine, Registered with the Registrar of Newspapers for India under No.17843/1970. Published every Wednesday.

## CUBயின் Salary Account

CUB உங்களுக்காக பிரத்யேகமாக வழங்கும் Salary Plus & Salary Prime Savings Account. இவற்றின் சிறப்பு அம்சம், நீங்கள் மாதா மாதம் உங்கள் சம்பளத் தொகையை முழுவதுமாக எடுத்து அனுபவிக்கலாம்.

CUB Salary Savings Account பல சிறந்த அம்சங்களுடன் உங்கள் தேவைக்கேற்ப வழங்கப்படுகிறது.

**CUB Salary Prime Account**
- Zero Balance Savings Account
- RuPay Select டெபிட் கார்டு
- Accident insurance coverage: Rs. 20 Lakhs
- Demat / Trading Account
- Net/Mobile Banking

**CUB Salary Plus Account**
- Zero Balance Savings Account
- RuPay Platinum டெபிட் கார்டு
- Accident insurance coverage: Rs. 10 Lakhs
- Demat/Trading Account
- Net/Mobile Banking

QR-ஐ Scan செய்து டிஜிட்டல் முறையில் கணக்கைத் தொடங்கலாம்

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**குறைந்தபட்ச வரம்பு இல்லாமல் மொத்த இருப்புத் தொகையையும் உபயோகிக்கலாம்**



**வருமானத்தை உபயோகிக்க வரம்பு இல்லை.**

| | | | |
|---|---|---|---|
| MSME LOAN | FASTag | UPI LITE/UPI CIRCLE | NCMC CARD |
| Home LOAN | NRI ACCOUNT | UPI SCAN AND PAY | CSK/SRH CREDIT CARD |
| Gold LOAN | LOCKER FACILITY | POS | WHATSAPP BANKING |
| LOAN AGAINST SECURITIES | INSURANCE/ E-BG | UPI SOUND BOX FOR MERCHANTS | SOCIAL MEDIA BANKING |
| LOAN AGAINST PROPERTY | WEALTH MANAGEMENT | CREDIT LINE ON UPI | CHAT BOT |
| LOAN AGAINST DEPOSIT | EPF PAYMENTS | BBPS BILL PAYMENTS | CARDLESS WITHDRAWAL |

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

# சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.bank.in ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 18001205000. Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.